# உதயன்

Uthayan - A lively National Tamil Daily

சுடர்: 30 கதிர்: 054 வள்ளுவர் ஆண்டு: 2046

தை 05, திங்கட்கிழமை 19.01.2015


வானிலை
வெப்பமான
வானிலை
காணப்படும்
மாலை,
இரவு
வேளையில்
குளிரான
கால நிலை
காணப்படும்.

## புதிய அரசின் கன்னி அமர்வு புதனன்று

கொழும்பு, ஜன 19
புதிய அரசின் முதலாவது அமைச்சரவைக்கூட்டம்,நாளை மறுதினம் புதன்கிழமை இடம்பெறவுள்ளது என்று தெரிவிக்கப்படுகின்றது. ஜனாதிபதி மற்றும் பிரதமர் அதில் கலந்து கொள்ளவுள்ளனர். பக்.25

## ஜெனிவாவை கையாள புது வியூகம்!

கொழும்பு, ஜன.19
ஜெனிவாவில் எதிர்வரும் மார்ச்சில் நடைபெறவுள்ள ஐ.நா. மனித உரி மைகள் சபைக்கூட்டத்தொடரை புதிய அரசு புதியதொரு பொறி முறையின் கீழ் கையாளும் என்று வெளி விவகார பிரதி அமைச்சர் அஜித் பி.பெரேரா நேற்று 'உதயனுக்கு' தெரிவித்தார். பக். 19

## 100 நாள் வேலைத்திட்டம் ஆரம்பம்

கொழும்பு, ஜன 18
ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின் 100 நாள் வேலைத் திட்டத்தின் முதலாவது அபிவிருத்தி திட்டம் மலையகத்தில் நேற்று ஆரம்பிக்கப்பட்டுள்ளது.
கொத்மலை ஆற்றிலிருந்து நீர் வழங்கும், டயகம கிழக்கு தோட்டத்தை கடந்து செல்லும் ஆற்றுக்கு பக்.25

# டென்னிக்கே முன்னுரிமை

## சுஷ்மாவிடம் விளக்கினார் மங்கள

கொழும்பு, ஜனவரி19
இலங்கையின் வெளிவிவகாரக் கொள்கையில் அயல் நாடான இந்தியாவுக்கே முன்னுரிமை வழங்கப்படும் என்று வெளிவிவகார அமைச்சர் மங்கள சமரவீர தெரிவித்துள்ளார். இந்தியாவுக்கு ஐந்து நாள் பயணம் மேற்கொண்டுள்ள மங்கள சமரவீர, அங்கு அந்நாட்டு வெளிவிவகார அமைச்சர் சுஷ்மா சுவராஜுடன் மேற்கொண்ட சந்திப்பின்போதே இவ்வாறு தெரிவித்துள்ளார்.
இலங்கையின் புதிய அரசுதனது வெளிவிவகாரக் கொள்கையில் இந்தியாவுக்கே முன்னுரிமை அளிக்கும் என்று கூறிய அவர், தாம் பதவியேற்று பக்.21



## தேர்தலில் சதி முயற்சி; வாக்குமூலம் பெறப்படும்

யாழ்ப்பாணம், ஜன. 19
ஜனாதிபதித் தேர்தல் முடிவுகள் வெளியாகிக் கொண்டிருந்த சமயம், அப்போதைய ஜனாதிபதி மஹிந்த மேற்கொண்டதாகக் கூறப்படும் சதிமுயற்சி தொடர்பில் விசாரணையில் வாக்குமூலங்களைப் பதிவுசெய்யவுள்ளதாகப் பொலிஸ் திணைக்களம் தெரிவித்துள்ளது.
அதற்காக குற்றப்புலனாய்வுத் திணைக்களம் சட்ட மா அதிபரின் ஆலோசனைகளைப் பெற்றுள்ளதாகபொலிஸ்தலைமையகம் பக்.25

## வாக்குமூலம் வழங்க ராணுவ தளபதி தயார்!

கொழும்பு, ஜன. 19
கடந்த ஜனாதிபதித் தேர்தலின் போது இராணுவ சதிப் புரட்சி மேற்கொள்ளப்படவிருந்தது என்று தெரிவிக்கப்படுவது தொடர்பில் குற்றப் புலனாய்வுத் திணைக்களம் முன்னெடுக்கும்விசாரணையில் வாக்குமூலம் வழங்க இராணுவத் தளபதி தயாராக இருக்கின்றார் என்று இராணுவப் பேச்சாளர் தெரிவித்துள்ளார்.
ஜனாதிபதித் தேர்தல் தொடர்பிலான முடிவுகள் பக்.21

## ரூபா 5 ஆயிரம் அதிகரிப்பு வரும் 30ஆம் திகதி முதல்

### அரச உத்தியோகத்தர்களுக்கு

யாழ்ப்பாணம், ஜன 19
அரச ஊழியர்களுக்கு 5 ஆயிரம் ரூபா சம்பள அதிகரிப்பு எதிர் வரும் 30ஆம் திகதி தொடக்கம் அதிகரிக்கப்படவுள்ளது. புதிய அரசின் 100 நாள் திட்டங்களுக்காக 20 ஆயிரம் கோடி ரூபாவுக்கான இடைக்கால வரவு – செலவுத் திட்டம் சமர்ப்பிக்கப்படவுள்ளது.
இந்த இடைக்கால நிதி நிலை அறிக்கை அமைச்சரவையின் அனுமதிக்காக வரும் 29ஆம் திகதி சமர்ப்பிக்கப்படும். இதில் அரச ஊழியர்களுக்கான சம்பள அதிகரிப்பும் இடம்பெறவுள்ளது.
ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன மக்களுக்கு வழங்கிய வாக்குறுதிகள் இடைக்கால நிதி நிலை அறிக்கை ஊடாக நிறைவேற்றப்படும் என்று தெரிவித்தார் நிதி அமைச்சர் ரவி கருணாநாயக்க.
"முன்னைய அரசு கஜானாவையே காலியாக்கி விட்டது. அதனால் வருமானத்தை இனித்தான் தேட வேண்டும். என்றாலும் மறைமுக வரிகள் நீக்கப்படும். சமுர்த்திப் பயனாளிகளுக்கு 200 ரூபா அதிகரிக்கப்படும். பல்கலைக் கழக மாணவர்களுக்கான மகாபொல புலமைப் பரிசில் பக்.25

## மஹிந்தவை தோற்கடித்த றோ

கொழும்பு, ஜன. 19
முன்னாள் ஜனாதிபதி மஹிந்தவுக்கு எதிராக, மைத்திரிபால சிறிசேனவைக் களமிறக்கியது தொடக்கம், தேர்தல் பரப்புரைக் கூட்டங்களை ஒழுங்கு செய்தது வரை, பல்வேறு நடவடிக்கைகளை இந்தியாவின் வெளியக உளவு அமைப்பான 'றோ' எனப்படும் ஆய்வு பகுப்பாய்வுப் பிரிவு மேற்கொண்டதாக சர்வதேச ஊடகம் ஒன்று வெளியிட்டுள்ள பக்.19

## வடக்கின் எதிர்க்கட்சித் தலைவர் யார்?

### ஜனாதிபதித் தேர்தலின் பின்னர் எழுந்துள்ள புதிய சிக்கல்

யாழ்ப்பாணம், ஜன. 19
நடைபெற்று முடிந்த ஜனாதிபதித் தேர்தலின்போது ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பில் இருந்து பல கட்சிகள் வெளியேறிவிட்டதால், வடக்கு மாகாண சபையில் எதிர்க் கட்சித் தலைமைக்கு கடும் போட்டி ஏற்பட்டுள்ளது. இன்று நடைபெற உள்ள சபை அமர்வில் இந்தப் பிரச்சினை ஆராயப்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.
வடக்கு மாகாண சபையை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு கைப்பற்றியிருந்தது. எதிர்க்கட்சியாக ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி இருந்து வந்தது. சபையில் அதற்கு 8 உறுப்பினர்கள் இருந்தனர். சுதந்திரக் கட்சி, ஈ.பி.டி.பி., அகில இலங்கை மக்கள் காங்கிரஸ், சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் என்பனவும் அந்தக் பக்.19

## அதிரடிச் சதம்; டீவில்லியர்ஸ் சாதனை!

பக் 26

## வடக்கில் இருந்து புதிய அரசு ராணுவத்தை வெளியேற்றாது

கொழும்பு, ஜன. 19
வடக்கில் இருந்து இராணுவத்தை வெளியேற்றும் நோக்கம் அரசுக்குக் கிடையாது. நாட்டின் தேசிய பாதுகாப்பே முக்கியமானது. இவ்வாறு தெரிவித்துள்ளார் புதிய அரசின் பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர் ருவன் விஜேவர்த்தன. பக்.25

## பாடசாலைகளுக்கு அருகே ராணுவ முகாம் வேண்டாம்

### வடக்கு மாகாண ஆளுநரிடம் கோருகிறது இலங்கை ஆசிரியர் சங்கம்

மாங்குளம், ஜன. 19
வடக்கு மாகாணத்தில் பாடசாலைகளுக்கு அருகே அமைக்கப்பட்டிருக்கும் இராணுவ முகாம்களை அகற்றுவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று வடக்கு மாகாண ஆளுநரிடம் கோரிக்கை விடுத்துள்ளது இலங்கை ஆசிரியர் சங்கம். பக்.21

## கோத்தபாயவால் உருவாக்கப்பட்ட மிதக்கும் ஆயுதக் களஞ்சியம் காலித் துறையில் சிக்கியது

கொழும்பு, ஜன. 19
முன்னாள் பாதுகாப்பு அமைச்சர் கோத்தபாய ராஜபக்ஷவினால் மிதக்கும் ஆயுதக் களஞ்சியமாகப் பயன்படுத்தப்பட்ட கப்பல், காலித் துறைமுகத்தில் நேற்று பொலிஸாரால் கைப்பற்றப்பட்டுள்ளது. குறித்த கப்பலிலிருந்து அதி நவீன துப்பாக்கிகள் 3 ஆயிரம் மீட்கப்பட்டுள்ளன என்று பொலிஸார் தெரிவித்தனர்.
"துறைமுகத்தில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த கப்பலில் இருந்து 3 ஆயிரம் பக்.25




யாழ்ப்பாணம் சர்வதேச வர்த்தகக் கண்காட்சி இன்னும் 4 நாட்களில்

JITF 2015

செய்திகள்

# எதிர்வரும் தேர்தலில் ஜனாதிபதி சுயாதீனமாக செயற்படுவார்

## மின்சாரத்துறை ராஜாங்க அமைச்சர் பாலித்த ரங்கே பண்டார தெரிவிப்பு

கொழும்பு, ஜன.19

எதிர்வரும் நாடாளுமன்றத் தேர்தலின் போது எந்த கட்சிக்கும் சார்பாக அன்றி, சுயாதீனமாக செயற்படுவதாக ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன உறுதியளித்திருப்பதாக, மின்சாரத்துறை ராஜாங்க அமைச்சர் பாலித்த ரங்கே பண்டார தெரிவித்துள்ளார்.



சிலாபத்தில் இடம்பெற்ற நிகழ்வொன்றில் உரையாற்றும் போது அவர் இதனைக் கூறியுள்ளார்.

எதிர்வரும் பொதுத் தேர்தலின் போது ஐக்கிய தேசிய கட்சி ஏனைய சில கட்சிகளுடன் இணைந்து யானை சின்னத்தில் தேர்தலில் போட்டியிடும். அதே போன்று ஜே வி பியும், ஜாதிக ஹெல உறுமயவும் தனித் தனியே போட்டியிடவுள்ளன. சிறிலங்கா சுதந்திர கட்சிக்கும் அதேநிலைமையே.

ஆனால் சிறிலங்கா சுதந்திர கட்சியின் தலைவர் என்ற வகையில் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன எந்த ஒரு தேர்தல் மேடையிலும் அந்த கட்சிக்கு சார்பாக பேசவோ, சிறிலங்கா சுதந்திர கட்சிக்கு ஆதரவாக செயற்படவோமாட்டார் என்று அமைச்சர் பாலித்த ரங்கே பண்டார தெரிவித்துள்ளார்.

இதன் மூலம் சுயாதீனமான தேர்தல் ஒன்று உறுதி செய்யப்படும் என்றும் அவர் கூறியுள்ளார். (ற)

# சிறிய தந்தையை கத்தியால் குத்தியவருக்கு மறியல்

தென்மராட்சி,ஜன.19

சிறிய தந்தையை கத்தியால் குத்தி காயப்படுத்திவிட்டு மற்றொரு சிறிய தந்தையின் வீட்டையும் தீயிட்டு எரித்த 18 வயது இளம் குடும்பஸ்தர் ஒருவரை விளக்க மறியலில் வைக்குமாறு சாவகச்சேரி நீதிமன்றம் உத்தரவிட்டது.

தைப்பொங்கல் தினத்தன்று கெற்பேலி மேற்குப் பகுதியில் இடம்பெற்ற விளையாட்டுப் போட்டியில் மதுபோதையில் குழப்பம் விளைவித்த இவரை சிறிய தந்தையொருவர் பார்வையாளர்களின் மத்தியிலிருந்து வெளியே அழைத்து வந்தபோது சிறிய தந்தையை இடுப்பில் மறைத்து வைத்திருந்த கத்தியால் வயிற்றிலும் தோளிலும் குத்தி காயப்படுத்தினார். பின்னர் இரவு 7 மணியளவில் மற்றொரு சித்தப்பா வீட்டுக்குச் சென்று வீட்டுக்குத் தீயிட்டு விட்டு தப்பியோடினார். வீடு எரிந்து சாம்பல் ஆகியது.

மறுநாள் இவரைக் கைது செய்த கொடிகாமம் பொலிஸார் பிற்பகலில் சாவகச்சேரி நீதிவான் முன்னிலையில் முற்படுத்தினர். அவரை எதிர்வரும் 30ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிவான் உத்தரவிட்டார். (ற-9)



*பரிசுத்த பாப்பரசரால் கடந்த வாரம் புனிதராக திருநிலைப்படுத்தப்பட்ட இலங்கையின் அப்போஸ்தலர் புனித யோசவ்வாஸ் முனீந்திரனின் முதலாவது திருவிழா நேற்று ஞாயிற்றுக்கிழமை கொழும்புத்துறை எழிலூரில் சிறப்பாகக் கொண்டாடப்பட்டது. யோசவ்வாஸின் யாழ். வருகையின் போது (1687ஆம் ஆண்டு) வந்திறங்கிய இடமான கொழும்புத்துறை பகுதியில் அமைந்துள்ள வேளாங்கண்ணி ஆலயத்தில் இடம்பெற்ற திருவிழாத் திருப்பலி புனித சவேரியார் குருத்துவக் கல்லூரி அதிபர் அருட்திரு மைக்கல் சவுந்தரநாயகம் அடிகள் மற்றும் பங்குத்தந்தை அருட்திரு லியோ ஆம்ஸ்ரோங் அடிகள் உதவிப் பங்குத்தந்தை அருட்திரு வசந்தன் அடிகள் ஆகியோர் இணைந்து நிறைவேற்றினர்.* (ற-135)

# மயக்க ரொட்டியை கொடுத்து யாழ். வந்த ரயிலில் கொள்ளை

கொழும்பு, ஜன.19

கொழும்பில் இருந்து யாழ்ப்பாணம் நோக்கி வந்த தபால் ரயிலில் பயணித்த ஒரே குடும்பத்தைச் சேர்ந்த மூவருக்கு மயக்க மருந்து கலந்த ரொட்டியைக் கொடுத்து பணம், நகை என்பன கொள்ளையடிக்கப்பட்டுள்ளது என்று பொலிஸார் தெரிவித்தனர். கடந்த புதன்கிழமை இந்தச் சம்பவம் நடந்துள்ளது.

கிளிநொச்சிக்குச் செல்வதற்காக கொழும்பில் இருந்து ரயில் ஏறிய குறித்த மூவரிடமும், குருநாகலில் இருந்து ஏறிய மூன்று பேர் பேச்சுக் கொடுத்துக் கொண்டு வந்துள்ளனர். அவர்களில் ஒருவர் ரொட்டி வாங்கி வந்து, இவர்கள் மூவருக்கும் உண்ணக் கொடுத்துள்ளார்.

ரொட்டியை உண்ட மூவரும் மயக்கமடைந்த நிலையில் ஒருவருடைய மோதிரமும் பையில் இருந்த 10 ஆயிரம் ரூபா பணமும் களவாடப்பட்டுள்ளது. கிளிநொச்சியில் இறங்க வேண்டிய இவர்கள் மயக்க நிலையில் யாழ்.புகையிரத நிலையத்தை வந்தடைந்தனர்.

மயங்கிய நிலையில் இருந்த இவர்களை பொலிஸார் யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதித்தனர். இவர்களுக்கு உண்ணக்கொடுத்த உணவை பரிசோதனைக்காக அனுப்பி வைத்துள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர். சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருவதாகவும் யாழ்ப்பாண பொலிஸார் தெரிவித்தனர். (ற-402)

# கிடங்கு வெட்டியபோது வெளிவந்த ஆயுதங்கள்

யாழ்ப்பாணம், ஜன. 19

மின்சார இணைப்பு வழங்கும் பொருட்டு கிடங்கு வெட்டிய போது அதனுள் இருந்து ஒரு தொகுதி வெடிபொருள்கள் மீட்கப்பட்டுள்ளன என்று பொலிஸார் தெரிவித்தனர்.

கனகராயன்குளம் பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட சின்ன அடம்பன் பகுதியிலேயே நேற்று முன்தினம் இந்த வெடிபொருள்கள் மீட்கப்பட்டுள்ளன. கைக்குண்டுகள் – 2, கிளைமோர் குண்டுகளை வெடிக்க வைப்பதற்கான றிமோட், பற்றரி என்பனவே மீட்கப்பட்டுள்ளன. அவை குண்டு செயலிழக்க வைக்கும் பிரிவினரால் நேற்று அழிக்கப்பட்டுள்ளன என்று பொலிஸார் மேலும் தெரிவித்தனர். (ற-4)

# பாரவூர்திகள் மணல் ஏற்றுவதில் உள்ள பிரச்சினை தீர்க்கப்படும்

## கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் வி.கே.அருந்தவநாதன் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், ஜன.19

மணல் ஏற்றி இறக்குவதில் பாரவூர்தியாளர்கள் எதிர்கொள்ளும் பிரச்சினைக்கு யாழ்.மாவட்ட அரச அதிபருடன் கலந்துரையாடி தீர்வு பெற்றுக் கொடுக்கப்படும் என்று யாழ்.மாவட்ட கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் வி.கே.அருந்தவநாதன் தெரிவித்தார்.

யாழ்.மாவட்ட பாரவூர்திச் சங்கத்தின் வருடாந்த ஒன்றுகூடலும், புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த மாணவர்களின் கௌரவிப்பும் நேற்று வீரசிங்கம் மண்டபத்தில் நடைபெற்றது. அதில் விருந்தினராகக் கலந்து கொண்டு உரை நிகழ்த்திய போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

யாழ்.மாவட்ட பாரவூர்திச் சங்கம் கடந்த காலங்களில் பல்வேறு இடர்களைச் சந்தித்து வந்துள்ளது. எனினும் சங்கம் பெற்ற இலாபங்களுடன் சிக்கனமாக செயற்பட்டு வந்தமையால் கூட்டுறவுச்சங்கங்களில் முதன்மை சங்கமாகத் திகழ்கிறது. அதற்கு அங்கத்தவர்களின் ஒத்துழைப்பு அதிகமாகவுள்ளது. அங்கத்தவர்களின் பிள்ளைகளின் கல்வித் திட்டமாகவங்கிக்கணக்குகல்விச் செலவுக்காக ஏற்படுத்திக் கொடுத்தமை வரவேற்கத்தக்க விடயம். பாரவூர்திச் சங்கம் கடந்த வருடம் சிக்கனமாக செயற்பட்டதால் 8 லட்சம் வருமானத்தை பெற்றுக் கொண்டுள்ளது. அங்கத்தவர்களின் ஒத்துழைப்புடன் சங்கம் முன்னேற்றம் அடைந்துள்ளது.

அத்துடன் பாரவூர்தியாளர்களுக்கு கடந்த காலங்களில் கொடுக்கப்பட வேண்டிய கொடுப்பனவுகளைப் பெற்றுக் கொள்வதற்கு உரிய ஆவணங்களை இயக்குநர் சபையிடம் சமர்ப்பிப்பதன் ஊடாக கொடுப்பனவுகளைப் பெற்றுக்கொள்வதற்கு ஏற்பாடுகள் மேற்கொள்ளப்படும்."– என்று அவர் மேலும் தெரிவித்தார்.

யாழ்.மாவட்ட பாரவூர்திச் சங்கத்தின் தலைவர் செ.ஜெயக்குமார் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த 6 பிள்ளைகளும், நவீ்ட பாடசாலை மாணவி, பல்கலைக்கழக அனுமதி பெற்ற மாணவி ஆகியோரும் கௌரவிக்கப்பட்டனர். (ற-14)

# பாரவூர்தி உரிமையாளர்கள் இன்று மகேஸ்வரி நிதியம் முன்பு ஆர்ப்பாட்டம்

## அங்கத்துவப் பணத்தை திருப்பி தருமாறு கோரி

யாழ்ப்பாணம்.ஜன.19

முன்னாள் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவின் பதவிக்காலத்தில் பெறப்பட்ட அங்கத்துவப் பணத்தை மீளத்தருமாறு கோரி யாழ்.மாவட்ட பாரவூர்தியாளர்கள் இன்று திங்கட்கிழமை ஆர்ப்பாட்டத்தில் ஈடுபடவுள்ளனர்.

மணல் ஏற்றி இறக்குவதற்கு மகேஸ்வரி நிதியத்தில் பாரவூர்தியாளர்கள் அங்கத்துவர்களாக இணைந்து கொள்ள வேண்டும் என முன்னாள் அமைச்சராக இருந்த டக்ளஸ் தேவானந்தா தெரிவித்ததை அடுத்து 2010 ஆம் ஆண்டு பாரவூர்தி ஒவ்வொன்றுக்கும் 5 ஆயிரம் ரூபா வீதம் அங்கத்துவப் பணம் செலுத் தப்பட்டிருந்தது. அங்கத்துவர்களாக 500 இற்கும் மேற்பட்ட பாரவூர்தி உரிமையாளர்கள் இணைந்து கொண்டனர்.

இந்தநிலையில், கடந்த 5 ஆண்டுகளாக மணல் ஏற்றி இறக்குவது தொடர்பில் தாம் எதிர்கொண்ட பிரச்சினைகள் தீர்க்கப்படவில்லை என்று தெரிவித்துள்ள பாரவூர்தி உரிமையாளர்கள், அங்கத்துவப் பணத்தை மீளத் தருமாறு கோரி ஆர்ப்பாட்டம் நடத்தவுள்ளனர் என்று தெரிவித்தனர்.

இது தொடர்பில் சங்கத்தின் தலைவர் செ.ஜெயக்குமார் கருத்துத் தெரிவிக்கையில்,

2010 ஆம் ஆண்டு அங்கத்தவர்களாக இணைந்து கொண்ட பாரவூர்தியாளர்கள் நேற்றைய வருடாந்த கூட்டத்தில் எடுத்துக் கொள்ளப்பட்ட தீர்மானத்துக்கு அமைவாக மகேஸ்வரி நிதியத்தின் அலுவலகத்துக்கு முன்னாக இன்று ஒன்று கூடவுள்ளனர். அங்கத்துவப்பணமாக பெறப்பட்ட 5ஆயிரம் ரூபா மற்றும் சேவைப் பணம் என்பவற்றையும் மீளத் தரக்கோரியுள்ளோம். கோரிக்கை ஏற்றுக் கொள்ளப்படாவிட்டால் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபடுவோம் – என்று தெரிவித்தார்.

அதேவேளை, மகேஸ்வரி நிதியம் சட்டவிரோத மணல் அகழ்வில் ஈடுபடுவதாகத் தெரிவித்து கடந்த 16 ஆம் திகதி வடமராட்சி கிழக்கு மக்கள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர். அதையடுத்து மணல் அகழ்வுக்கு பொலிஸார் தடை விதித்தனர். (ற-14)

# ஜனரஞ்சகம்



## நிலைத்து நிற்பது கஷ்டம்

கதாநாயகிகள் சினிமாவில் நிலைத்து இருக்க முடியாது. அவர்களின் செல்வாக்கு கொஞ்ச காலம்தான் என்று நடிகை அஞ்சலி தெரிவித்துள்ளார். குடும்பப் பிரச்சினைகளால் சினிமாவை விட்டு தற்காலிகமாக ஒதுங்கிஇருந்தநடிகை அஞ்சலி தற்போது நீண்ட இடைவெளிக்குப் பிறகு மீண்டும் நடிக்க வந்துள்ளார். தமிழில் ஜெயம் ரவியுடன் 'அப்பாடக்கரு', விமலுடன் 'மாப்ள சிங்கம்' திரைப்படங்களில் நடித்து வருகிறார். கதாநாயகிகள் சினிமாவில் நிலைத்து இருக்கமுடியாது. அவர்களின் மார்க்கெட் கொஞ்சகாலம் தான். இப்போதுநிறையப் பேர்கதாநாயகிகளாக நடிக்க வருகிறார்கள். சிலர் மட்டும் திறமையால் கொஞ்ச நாள்கள் நீடிக்கிறார்கள். பழைய கதாநாயகிகள் சாவித்திரி, ஸ்ரீதேவி போன்றோர் சினிமாவில் நீண்ட காலம் நிலைத்து இருந்தார்கள். அவர்களைப் போல் இப்போது எந்த நடிகையாலும் நிலைக்க முடியாது, என்கின்றார்.










## முகநூலில் சுட்டது...!!!



## ரிலாக்ஸா வாசியுங்க...

திருமண வாழ்க்கையில் எந்தப் பிரச்சினையும் இல்லாமல் வாழ்ந்த ஜோடிகள் தங்களது 25 ஆவது திருமண ஆண்டைக் கொண்டாடினார்கள். பெரும் விருந்து வைத்துக் கொண்டாடினார்கள். 25 ஆண்டுகள் சேர்ந்து வாழ்ந்தது எல்லோருக்கும் ஆச்சரியமாக இருந்தது.

அங்கிருந்த ஒருவர், நேராக அந்தத்தம்பதிகளிடம்சென்று, 25ஆம் திருமண நாளை ஒற்றுமையாகக் கொண்டாடுவது என்பது பெரிய விடயம். இது உங்களால் எப்படி முடிந்தது. உங்களது திருமண வாழ்வின் வெற்றி இரகசியம் என்ன என்று கேட்டார்.

இந்தக் கேள்வியைக் கேட்டதும், பதிலை கணவர் சொன்னார். நாங்கள் திருமணம் முடிந்ததும் தேனிலவுக்காக சென்றோம். அங்கு எங்களதுபயணம்சிறப்பாகஅமைந்தது. அங்கு நாங்கள் குதிரை ஏற்றம் செல்வது என்று தீர்மானித்தோம். அதற்காக இரண்டுகுதிரைகளைத்தேர்ந்தெடுத்து, இருவரும் ஒவ்வொருகுதிரையில்ஏறிக்கொண்டோம். எனது குதிரை மிகவும் அமைதியாகச் சென்று கொண்டிருந்தது.

ஆனால் என் மனைவி சென்ற குதிரை மிகவும் குறும்புத்தனமானதாக இருந்தது. திடீரென ஒரு துள்ளலில் என் மனைவியை அது கீழே தள்ளியது. அவள் கீழே இருந்து எழுந்து சுதாரித்துக் கொண்டு அந்த குதிரையின் மீது மீண்டும் ஏறி அமர்ந்து கொண்டு, 'இதுதான் உனக்கு முதல் முறை' என்று அமைதியாகக் கூறினாள்.

சிறிது தூரம் சென்றதும் மீண்டும் அந்த குதிரை அவ்வாறே செய்தது. அப்போதும் என் மனைவி மிக அமைதியாக எழுந்து குதிரையின் மீது அமர்ந்து கொண்டு 'இதுதான் உனக்கு இரண்டாம் முறை' என்று கூறியவாறு பயணிக்கத் தொடங்கினாள். மூன்றாம் முறையும் குதிரை அவ்வாறு செய்ததும், அவள் வேகமாக கைத்துப்பாக்கியை எடுத்து அந்தக் குதிரையைச் சுட்டுக் கொன்றுவிட்டாள்!!!

இதைக்கண்டுஅதிர்ச்சிஅடைந்த எனக்கு மிகவும் கோபம் வந்துவிட்டது. நான் அவளைத் திட்டினேன். 'ஏன் இப்படிச் செய்தாய்? நீ என்ன முட்டாளா? ஒரு விலங்கைக் கொன்றுவிட்டாயே? அறிவில்லையா?' என்று கேட்டேன்.

அவள் மிகவும் அமைதியாக என்னைப் பார்த்து, 'இதுதான் உங்களுக்கு முதல் முறை' என்றாள். அவ்வளவுதான். அதன் பிறகு எங்களது வாழ்க்கை மிக வும் அமைதியாக சென்று கொண்டிருக்கிறது' என்றார் கணவர்.

( இப்படித்தான் நிறையப் பேருக்கு பிழைப்பு ஓடிக் கிட்டு இருக்கு)

## இன்றைய நாள் உங்களுக்கு எப்படி?



**மேடம்**: மனதில் திடீர் குழப்பம் ஏற்பட்டு நீங்கும். வாகனங்களில் செல்லும் போதும் ஆயுதங்களைக் கையாளும் போதும் கூடுதல் கவனம் தேவை.

**இடபம்**: செலவைக் குறைப்பதன் மூலம் பணத் தட்டுப்பாடு குறையலாம். உத்தியோகத்தில் இருப்பவர்கள் பணி புரியும் இடங்களில் எச்சரிக்கையுடன் இருப்பது நல்லது.

**மிதுனம்**: குடும்பத்தில் குதூகலமான சுப பலன்கள் ஏற்படும். நண்பர்கள் உறவினர்களுடன் கவனமாக பேசிப் பழகுவது நல்லது. மனதில் வீண் குழப்பம் ஏற்பட்டு நீங்கும்.

**கடகம்**: பிரிந்து சென்றவர்கள் மீண்டும் வந்து சேரலாம். எதிர்பார்த்த பணம் வந்து சேரும். தொழில் வியாபாரத்தில் இருந்த முட்டுக் கட்டைகள் நீங்கும்.

**சிங்கம்**: உத்தியோகத்தில் இருப்பவர்கள் கடினமாக உழைக்க வேண்டி இருக்கும். உத்தியோகம் தொடர்பான இடமாற்றம் ஏற்படலாம்.

**கன்னி**: சாதுரியமான பேச்சின் மூலம் காரிய வெற்றி உண்டாகும். பிரிந்து சென்றவர்கள் மீண்டும் தேடி வரலாம். மற்றவர்களை திருப்தியடை யச் செய்யும்வகையில் உங்களது செயல்கள் இருக்கும்.

**துலாம்**: முக்கிய நபர்களின் உதவி கிடைக்கும். தன்னம்பிக்கை அதிகரிக்கும். அடுத்தவரை அதிகாரம் செய்யும் போது கவனம் தேவை. வீண் பகை ஏற்படலாம்.

**விருச்சிகம்**: மற்றவர்களுக்காகப் பொறுப்புகளை ஏற்காமல் இருப்பது நல்லது. வீண் அலைச்சல் ஏற்படலாம். உத்தியோகத்தில் இருப்பவர்களுக்கு பொறுப்புகள் கூடும்.

**தனுசு**: திறமை வெளிப்படும். வேலை தேடுபவர்களுக்கு வேலை கிடைக்கும். குடும்பத்தை விட்டுப் பிரிந்து சென்றவர்கள் மீண்டும் வந்து சேருவார்கள்.

**மகரம்**: முக்கியமான வேலைகளில் தாமதம் உண்டாகும். வீண் பிரச்சினைகளைக் கண்டால் ஒதுங்கிச் சென்று விடுவது நல்லது. உத்தியோகத்தில் முன்னேற்றம் காண கூடுதலாக உழைக்க வேண்டி இருக்கும்.

**கும்பம்**: எல்லாவற்றிலும் சாதகமான பலன் கிடைக்கும். காரியங்கள் அனுகூலமாக நடக்கும். புத்தி தெளிவு ஏற்படும். மனதில் தன்னம்பிக்கையும், தைரியமும் அதிகரிக்கும். மனக்குழப்பம் நீங்கும். பணவரவு அதிகமாகும்.

**மீனம்**: தொழில் வியாபாரத்தில் நீண்ட நாள்களாக இருந்து வந்த பிரச்சினை தீரும். உத்தியோகத்தில் இருப்பவர்களுக்கு புதிய பதவிகள் கிடைக்கும். மரியாதை அந்தஸ்து ஆகியவை உயரும்.

# யாழ்ப்பாண றோட்டரிக் கழகம் நடத்திய பொங்கல் விழா






யாழ்ப்பாண றோட்டரிக் கழகத்தின் ஏற்பாட்டில் பொங்கல் விழா நிகழ்வுகள் நேற்று முன்தினம் சனிக்கிழமை திறந்த வெளி அரங்கில் இடம்பெற்றது.
இந்நிகழ்வுக்கு பிரதம விருந்தினராக றோட்டரி மாவட்ட ஆளுநர் கௌரி ராஜன், சிறப்பு விருந்தினராக யாழ்ப்பாணத்திலுள்ள இந்திய துணைத்தூதரகத்தின் துணைத்தூதர் ஆ.நடராஜன், யாழ்ப்பாணம் றோட்டரிக்கழகத்தின் முன்னாள் தலைவரும் யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான ஈ.சரவணபவன், மற்றும் யாழ்ப்பாண றோட்டரிக்கழகத் தலைவர் சி.அனுராஜ் ஆகியோர் கலந்து சிறப்பித்தனர்.
றோட்டரிக்கழகத்தின் பொங்கல் நிகழ்வினை மாவட்ட ஆளுநர், யாழ்ப்பாணம் றோட்டரிக் கழகத் தலைவர், அதிதிகள், யாழ்ப்பாணம் றோட்டரிக் கழக உறுப்பினர் அனைவரும் சம்பிரதாய பூர்வமாக ஆரம்பித்து வைத்தனர்.
நிகழ்வின் சிறப்பம்சமாக யாழ்.தமிழர் பாரம்பரிய கலைகலாசார விழுமியங்களை பிரதிபலிக்கும் முகமாக யாழ்ப்பாண றோட்டரிக்கழகத்தினரால் பரதம், மானாட்டம், மயிலாட்டம், சிலம்பாட்டம், பொம்மலாட்டம், கரகாட்டம் மற்றும் கிராமிய விளையாட்டுக்களான உறியடித்தல், தலையணைச் சண்டை, கிளித்தட்டு போன்றவையும் யாழ்.மக்களின் பாரம்பரிய வாழ்க்கை முறையைப் பிரதிபலிக்கும் வகையில் யாழ்ப்பாணம் றோட்டரிக்கழகத்தின் அனுசரணையுடன் இயங்கும் 6 றோட்டரிக் கழகங்களுக்கிடையேயான போட்டிகள் என்பனவும் நடத்தப்பட்டன. றோட்டரி மாவட்ட வரலாற்றில் யாழ்ப்பாணத்தில் மாவட்ட நிகழ்வொன்று நடைபெற்றது இதுவே முதல் தடவை என்பது குறிப்பிடத்தக்கது. (வ)

# வயர் அறுத்து விற்ற திருடர்கள் சிக்கினர்

## முன்னைய வயர் திருட்டுக்களுடன் தொடர்புண்டா? பொலிஸாரின் விசாரணை தொடர்கிறது

நெல்லியடி, ஜன.19
வடமராட்சி, நெல்லியடி பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதியில் சுமார் 60 ஆயிரம் ரூபா பெறுமதியான தொலைத்தொடர்பு கேபிள் வயர்களை அறுத்து விற்பனை செய்தார்கள் எனக் குற்றச்சாட்டில் நேற்றுமுன்தினம் இருவர் கைது செய்யப்பட்டுள்ளனர். அவர்களில் ஒருவர் நீதிமன்றில் முற்படுத்தப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார் என்றும், மற்றைய நபர் விசாரணைகளின் பின்னர் நீதிமன்றில் முற்படுத்தப்படுவார் என்றும் பொலிஸார் தெரிவித்தனர்.
நெல்லியடி பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதியில் தொலைதொடர்பு கேபிள் வயர்கள் அடிக்கடி அறுக்கப்பட்டு வருவதாக நெல்லியடி பொலிஸாருக்கு நீண்ட காலமாக முறையிடப்பட்டு வந்தது. அது தொடர்பில் பொலிஸார் விசாரணைகளை நடத்தியபோதும் பயன் கிட்டவில்லை. இறுதியில் இது தொடர்பில் விசாரிக்க காங்கேசன்துறை உதவி பொலிஸ் அத்தியட்சகர் ஜவ்பரின் ஆலோசனையின் பேரில் நெல்லியடி குற்றப்புலனாய்வுப்பிரிவுப்பொறுப்பதிகாரி மாவத்த வழிநடத்தலில் விசேட பொலிஸ் குழு ஒன்று அமைக்கப்பட்டது.இந்தபொலிஸ் குழுவின் விசாரணையில் ஒரு கும்பல் இந்த நடவடிக்கையில் ஈடுபடுவது கண்டுபிடிக்கப்பட்டது.
அதையடுத்து இந்தக் கும்பலை மடக்க பொலிஸார் பல்வேறு நடவடிக்கையில் ஈடுபட்டனர். இந்த நிலையில் கடந்த வெள்ளிக்கிழமை இரவு கரவெட்டி பிரதேச செயலகத்துக்கு அண்மையில் வயர்களை அறுத்துக் கொண்டிருந்த சமயம் பொலிஸார் நடத்திய சுற்றிவளைப்பில் சந்தேக நபர்கள் இருவர் கைது செய்யப்பட்டனர். அவர்களிடமிருந்து 112 மில்லிமீற்றர் வயர்கள் மீட்கப்பட்டதாகவும் பொலிஸார் தெரிவித்தனர்.
வடமராட்சியின் பல்வேறு பகுதிகளில் இடம்பெற்ற வயர் திருட்டுகளுக்கும், இந்தக் கும்பலுக்கும் இடையே தொடர்பு இருக்கிறதா என்ற கோணத்தில் விசாரணைகள் முடுக்கி விடப்பட்டுள்ளது என்று பொலிஸார் தெரிவித்தனர். இன்னும் சிலர் தேடப்பட்டு வருகின்றனர் என்றும் தெரிவிக்கப்பட்டது.
இது தொடர்பான மேலதிக விசாரணைகளை காங்கேசன்துறை உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் ஜவ்பரின் ஆலோசனையின் பேரில் நெல்லியடி குற்றப் புலனாய்வுப் பிரிவுப் பொறுப்பதிகாரி மாவத்த வழிநடத்தலில் விசேட பொலிஸ் குழு ஈடுபட்டு வருகின்றது என்று தெரிவிக்கப்பட்டது. (ற-109)

# பிடிக்க வந்தால் போத்தல் குத்து!

## பொலிஸ் நிலையம் முன்பாக தாண்டவமாடிய சந்தேகநபரின் தாய்

கரணவாய், ஜன.19
தன்னைப் பிடிக்க முற்பட்டால் போத்தலால் குத்துவேன் என்று தாண்டவம் ஆடியுள்ளார் பெண் ஒருவர். அதனால் அவரைப் பிடிக்க முற்பட்ட பொலிஸார் செய்வதறியாது கைகட்டி வேடிக்கை பார்த்தனர்.
தொலைத்தொடர்பு கேபிள் வயர்களை அறுத்தனர் என்று தெரிவித்து கைது செய்யப்பட்ட இருவரில், ஒருவரின் தாயே இவ்வாறு நெல்லியடிப் பொலிஸ் நிலையத்துக்கு முன்பாக தாண்டவம் ஆடியுள்ளார்.
பொலிஸ் நிலையத்துக்கு முன்பாக குறித்த பெண் சுமார் ஒரு மணி நேரத்துக்கும் அதிகமாக வசைமாரி பொழிந்தார். அவரின் செந்தமிழ் அர்ச்சனையைக் கேட்டு அவ்வழியால் சென்றவர்கள் காதைப் பொத்திக் கொண்டு சென்றனர். சிறிது நேரம் அவரைத் தன்பாட்டில் விட்டிருந்த பொலிஸாரும் ஒரு கட்டத்தில் தாங்க முடியாது நடவடிக்கையில் இறங்கினர்.
அவரைப் பிடித்து அப்புறப்படுத்துவதற்கு பெண் பொலிஸார் அவரை நோக்கிச் சென்றனர். அப்போது அந்தப் பெண் தனது அடுத்த திறமையைக் காட்டத் தொடங்கினார்.
அருகில் இருந்த கடைக்குள் ஓடிச் சென்று சோடாப் போத்தல் ஒன்றை எடுத்து வந்து வீதியில் அடித்து உடைத்து, கையில் பிடித்தவாறு நின்றார். அருகில் வந்தால் குத்துவேன் என்று மிரட்டினார். போத்தலை உடைத்த போது பெண்ணின் கையில் காயம் ஏற்பட்டு இரத்தம் வழிந்தது. ஆனால் அதையெல்லாம் பொருட்படுத்தாத அவர் வசைபாடுவதில் குறியாக இருந்தார். கையில் போத்தலுடன் தாண்டவம் ஆடிய அந்தப் பெண்ணை ஒன்றும் செய்ய முடியாது பொலிஸார் கைகட்டி வேடிக்கை பார்த்தனர். மக்கள் காதைப் பொத்தியவாறு அந்த இடத்தைக் கடந்து சென்றனர். ஒருமணிநேரத்துக்கும் அதிகமாக வசைபாடிய பின்னர் தானாகவே அந்தப் பெண் அங்கிருந்து அகன்று சென்றார் என்றும் தெரிவிக்கப்படுகின்றது. (ற-108)

# பச்சிலைப்பள்ளி மேற்கில் மீளக் குடியமர்த்துங்கள்


## அந்தப் பகுதி பொதுமக்கள் கோரிக்கை

தென்மராட்சி, ஜன. 19

பச்சிலைப்பள்ளி மேற்குப் பிரதேசத்தில் மீள்குடியமர்வுக்கு அனுமதிக்க வேண்டும் என்று கோரிக்கை விடுத்துள்ள மக்கள், முகமாலை தெற்கு, வேம்பொடுகேணி மேற்கு, இத்தாவில் மேற்கு ஆகிய பிரதேச மக்கள் இடம்பெயர்ந்து 15 ஆண்டுகளாக இன்னல்களுக்கு மத்தியில் வாழ்ந்து வருவதாகவும் தெரிவித்துள்ளனர்.

போர் முடிந்து 5 ஆண்டுகள் முடிந்துள்ள நிலையிலும், வெடி பொருள்கள் அகற்றப்படவில்லை என்று கூறி காலம் கடத்தப்பட்டு வருகின்றது என்றும் அவர்கள் கவலை வெளியிட்டுள்ளனர்.

2000ஆம் ஆண்டு இடம்பெயர்ந்த அந்தப் பகுதிகளைச் சேர்ந்த 300க்கும் மேற்பட்ட குடும்பங்கள் சொல்லொணாத் துயரங்களுக்குமத்தியில்வாடகை வீடுகளிலும், உறவினர் வீடுகளிலும் வாழ்ந்து வருவதாகச் சுட்டிக்காட்டியுள்ள அவர்கள், ஏ – 9 வீதியில் இத்தாவில் சந்தியிலிருந்து முகமாலை வரையிலான சுமார் இரண்டு கிலோ மீற்றர் தூரம் வரையான வீதியின் இரு பக்கங்களிலும் உள்ள பகுதிகளே இன்னும் மீளக் குடி யமர அனுமதிக்கப்படவில்லை என்றும் தெரிவித்தனர். (ற–9)



யாழ். மணிக்கூட்டுக் கோபுரத்திலுள்ள கடிகாரங்கள் கடந்த சில நாள்களாகச் செயலிழந்த நிலையில் காணப்படுகின்றன. யாழ்ப்பாணத்தின் அடையாளக் குறியீடுகளில் ஒன்றான இந்தக்கோபுர கடிகாரங்கள் 2 மணி 42 நிமிடங்களைக் காட்டியவாறு செயலிழந்துள்ளது. முன்னதாக இருந்த மின்னியக்கக் கடிகாரங்கள் அடிக்கடி பழுதடைந்ததையடுத்து பொருத்தப்பட்ட முள்கடிகாரமும் தற்போது செயலிழந்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (வ–135)

## தனங்களப்பு கண்ணகை ஆலயத்தில் கைவரிசை



தென்மராட்சி, ஜன. 19

பொங்கல் தினத்துக்கு முதல் நாள் இரவு தனங்களப்பு கண்ணகை ஆலயத்தில் திருடர்கள் தமது கைவரிசையைக் காட்டியுள்ளனர். ஓடுகளை அகற்றி ஆலயத்துக்குள் நுழைந்துள்ள திருடர்கள் அம்மன் சிலையில் போடப்பட்டிருந்த தங்கத் தாலிப் பொட்டுக்களையும், அர்ச்சனைப் பணத்தையும், அம்மன் பிரம்பு மற்றும் மின் இணைப்புக்கு வைக்கப்பட்டிருந்த வயர் ஆகியவற்றையும் அம்மன் விக்கிரகங்களையும் அப்புறப்படுத்தி அதனுள்ளிருந்த தங்கத் தகட்டையும் எடுத்துச் சென்றுள்ளனர் என்று தெரிவிக்கப்படுகின்றது.

பொங்கல் தினத்தன்று காலை ஆலயத்தில் பொங்கலிட வந்தவர்கள் ஆலய மூலஸ்தான மண்டபக் கதவு திறந்திருப்பதைக் கண்டு ஆலய பரிபாலன சபையினருக்கு அறிவித்துள்ளனர். அவர்கள் பொலிஸாருக்கு அறிவித்ததை அடுத்து அவர்கள் சம்பவ இடத்துக்குச் சென்று விசாரணைகளை மேற்கொண்டனர். இதுகுறித்து சாவகச்சேரி பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு பதிவு செய்யப்பட்டுள்ளது என்றும் தெரிவிக்கப்பட்டது.(ற–9)

## தனித்து நடமாடிய யுவதி இரட்சண்ய சேனையில்

தென்மராட்சி,ஜன.19

கொடிகாமம் நகர்ப் பகுதியில் சந்தேகத்துக்கிடமான முறையில் நடமாடினார் என்று தெரிவித்து, கைது செய்யப்பட்ட 17வயதுயுவதி ஒருவரை கைதடி இரட்சண்ய சேனையில் தங்க வைக்குமாறு சாவகச்சேரி நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

தைப்பொங்கல் தினத்தன்று இரவு கொடிகாமம் நகர்ப் பகுதியில் நடமாடிய யுவதியைப் பொலிஸார் கைது செய்திருந்தனர். மறுநாள் வெள்ளிக்கிழமை குறித்த யுவதியை சாவகச்சேரி நீதிமன்றில் முற்படுத்தியபோது எதிர்வரும் 30ஆம் திகதிவரை கைதடி இரட்சண்யசேனை முகாமில் தங்க வைக்குமாறு உத்தரவிடப்பட்டது. (ற–9)

## தலைகால் புரியாத போதை; மூதாட்டி மீது தாக்குதல்

தலைகால் புரியாத மதுபோதையில் வந்த ஒருவர், தனது அயல் வீட்டு மூதாட்டி ஒருவரைக் கடுமையாகத் தாக்கியுள்ளார். அதில் அந்த மூதாட்டி காயமடைந்துள்ள நிலையில் சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

வீரசிங்கம் தர்சனா (வயது –60) என்பவரேகாயமடைந்தவராவார். இந்தச் சம்பவம் நேற்றுமுன்தினம் இரவு கைதடி வடக்கில் நடந்துள்ளது. குறித்த மூதாட்டி தமது வீட்டில் இருந்து உரையாடிக் கொண்டிருந்தபோதே மதுபோதையில் வந்த அயல் வீட்டுக்காரர் வீட்டுக்குள் புகுந்து தாக்கினார் என்று தெரிவிக்கப்படுகின்றது. (ற–9)

## பாஷையூரில் எம்.ஜி.ஆர்.



யாழ்ப்பாணம், ஜன.19

பாஷையூர் கடற்கரையில் புதிதாக ஜிம்பிறவுன் குழுவால் நிறுவப்பட்ட தமிழக முன்னாள் முதலமைச்சர் மக்கள் திலகம் எம்.ஜி.ஆரின் உருவச்சிலை 98ஆவது பிறந்த நாளாகிய நேற்றுமுன்தினம் திறந்து வைக்கப்பட்டது.

நினைவிடத்தை வடமாகாண சபையின் அவைத் தலைவர் சி.வீ.கே. சிவஞானம் நாடா வெட்டி திறந்து வைத்தார். உருவச்சிலையை வடமாகாண சபையின் அவைத் தலைவர் சி.வீ.கே.சிவஞானம்,வடமாகாண விவசாய அமைச்சர் பொ.ஐங்கரநேசன் வடமாகாண சபை உறுப்பினர் இ.ஆனல்ட் ஆகியோர் இணைந்து திறந்து வைத்தனர். தொடர்ந்து எம்.ஜி.ஆரின் உருவச் சிலைக்கான நினைவுக் கல்லை பொ.ஐங்கரநேசன் திறந்துவைத்தார்.

இந்த நிகழ்வில் வறுமைக் கோட்டுக்கு உட்பட்ட 100சிறுவர்களுக்கு பாடசாலை உபகரணங்கள், பெண்களைத் தலைமையாகக்கொண்ட 50பேருக்கு உலர்உணவு மற்றும் உடுபுடைவைகள் வழங்கப்பட்டன.

வடமாகாண சபை உறுப்பினர்களான கஜதீபன், சுகிர்தன், விந்தன், பரஞ்சோதி, யாழ்ப்பாணத்தில்அமைந்துள்ளஇந்தியதுணைத் தூதரக அதிகாரிகள், வடக்கு மாகாண எம்.ஜி.ஆர் மன்றத்தின் உறுப்பினர் எனப் பலர் இந்த நிகழ்வில் கலந்து கொண்டனர். (ற–135–23)

## திட்டமிட்ட முறையில் தினமும் வடமராட்சியில் ஆடுகள் திருட்டு

### நடவடிக்கை எடுக்குமாறு மக்கள் கோரிக்கை

கரணவாய், ஜன.19

திட்டமிட்ட முறையில் வடமராட்சிப் பகுதியில் நாளாந்தம் ஆடுகள் களவாடப்பட்டு வருகின்றன என்று பொதுமக்கள் தெரிவித்துள்ளனர். குறிப்பாக புலோலி கிராமக்கோடு, துன்னாலை, இந்திர அம்மன் கோயில், மாதனை, மந்திகை, கரவெட்டி ஆகிய பகுதிகளிலேயே அடிக்கடி ஆடுகள் களவுபோகின்றன என்றும் தெரிவிக்கப்படுகின்றது.

அதிகாலை 12மணிக்கும் ஒரு மணிக்கும் இடைப்பட்ட நேரங்களில் நாளாந்தம் 4 ஆடுகளுக்கு மேல் களவாடப்படுகின்றன. இவ்வாறு களவாடப்படும் பெறுமதி மிக்க ஆடுகள் கப்புதூ, புத்தூர் வாதரவத்தை கனகம்புளியடி ஊடாக யாழ்.நகரத்துக்கும் முள்ளிப்பகுதி, சாவகச்சேரி ஆகிய பகுதிகள் ஊடாக மன்னாருக்கும் எடுத்துச்செல்லப்பட்டு, குறைந்த விலையில் விற்கப்படுகின்றன என்றும் கூறப்படுகின்றது.

இது தொடர்பில் பருத்தித்துறை, நெல்லியடிப் பொலிஸ் நிலையங்களில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ள போதும், திருட்டுடன் தொடர்புடையஎவரும்இதுவரை கைது செய்யப்படவில்லை.

கடந்த செவ்வாய்க்கிழமை கொடிகாமம் வீதிப் பகுதியில் சுமார் 20 ஆயிரம்ரூபா பெறுமதியான மறி ஆடு ஒன்று திருடப்பட்டுள்ளது.இதுதொடர்பாகபொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது என்று கூறப்பட்டது.தினமும்தாம்நித்திரை விழித்திருக்கின்றபோதும் ஆடு கள் களவாடப்படுவதைத் தடுக்க முடியாதுள்ளது.அதனால்வாழ்வாதாரம்பெரிதும்பாதிக்கப்படுகின்றது என்கின்றனர்ஊர்மக்கள்.(ற–108)

# செய்திகள்

## வேலணை பிரதேச செயலக கலாசார பேரவை நடத்திய தைப்பொங்கல் பண்பாட்டு விழா

யாழ்ப்பாணம், ஜன.19

வேலணைப் பிரதேச செயலக கலாசார பேரவையின் தைப் பொங்கல்பண்பாட்டுவிழா வெள்ளிக்கிழமை பிரதேச செயலர் திருமதி மஞ்சுளாதேவி சதீசன் தலைமையில் பிரதேச செயலக மண்டபத்தில் நடை பெற்றது.

முன்னதாக பொங்கல் நிகழ்வு இடம்பெற்றதைத் தொடர்ந்து விழா மண்டபத்துக்கு விருந்தினர்கள் அழைத்து வரப்பட்டு பிரதம விருந்தினரால் மங்கல விளக்கேற்றி வைக்கப்பட்டதை அடுத்து தலைமை உரை, விருந்தினர்கள் உரைகள் இடம் பெற்றன. பிரதம விருந்தினராகக் கலந்து கொண்ட வட மாகாண



ஆளுநரின் செயலாளரும் முன்னாள் பிரதேச செயலருமான இ. இளங்கோவனுக்கு பிரதேச செயலர் திருமதி மஞ்சுளாதேவி சதீசன் நினைவுப் பரிசில் வழங்கிக் கௌரவித்தார்.

நிகழ்வில் சிறப்பு சொற்பொழிவு ஆற்றிய புத்தூர் இந்து ஆரம்பப் பாடசாலை அதிபர் எஸ்.கோகுலராகவன் ஆகியோர் பிரதம விருந்தினரால் பொன்னாடை போர்த்திக் கௌரவிக்கப்பட்டனர்.

மாணவர்களின் கலை நிகழ்வுகளும் இடம்பெற்றன. நன்றியுரையை பிரதேச கலாசார அபிவிருத்தி உத்தியோகத்தர் வழங்கினார். (வ–7)

## வறட்சி இழப்பீடு பதிவுகளை மேற்கொள்ள அறிவுறுத்து

தென்மராட்சி, ஜன.19

கடந்த காலபோக நெற் செய்கையின்போது வறட்சி காரணமாக பாதிக்கப்பட்டு இதுவரை இழப்பீட்டுக்கு விண் ணப்பிக்காத நெற் செய்கையாளர்களை உடனடியாக தத்தமது பிரிவு கமநல சேவைகள் நிலையத்தில் பதிவு செய்யுமாறு கமக்கார அமைப்புக்கள் அறிவித்துள்ளன.

கடந்த மாதம் (டிசெம்பர்) இழப்பீடு தொடர்பான இந்தக் கொடுப்பனவு பதிவு செய்யப் படாததால் வழங்கப்படவில்லை.

இந்த நிலையில் இதுவரை பதிவுகள் மேற் கொள்ளாதவர்கள் தத்தமது பிரிவு கமக்கார அமைப்புடன் தொடர்பு கொண்டு அதன் ஊடாக உரிய கமநல சேவைகள் நிலயத்தில் பதிவு செய்யுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை– கடந்த மாதம் இழப்பீட்டுக்கான பதிவுகள் மேற் கொண்டு இதுவரை கொடுப்பனவு கிடைக்காதவர்களுக்கு விரைவில் அவர்களது வங்கீக் கணக்குக்கு உரிய இழப்பீடு அனுப்பி வைக்கப்படவுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது. (வ–9)

## குருநகர் சின்னக்கடைச் சந்தைக்கு செல்லும் வீதியில் பெருங்குழி

### தவறி விழுந்தால் தலை தப்பாது

கொழும்புத்துறை, ஜன.19

யாழ்ப்பாணம் சின்னக்கடைச் சந்தைப் பகுதியில் கிழக்கு வீதியில்– நடுப்பகுதியில் செல்லும் கழிவு நீர் கால்வாயின் மூடி உடைந்து பெரிய குழியாகக் காணப்படுகிறது.

தினமும் பெருமளவு மக்கள் கூடும் சந்தைப் பகுதியில் வீதியின் நடுவே நீண்ட நாள்களாக கவனிப்பாரற்று காணப்படும் இக் கால்வாய்க் குழியால் மக்கள் பல ஆபத்துக்களை எதிர்கொள்வதை அவதானிக்க முடிகிறது. அதவேளை வீதியை ஊடறுத்துச் செல்லும் இந்தக் கால்வாய் பல இடங்களிலும் பாதுகாப்பின்றிக் காணப்படுவதால் இந்த வீதியூடாக வாகனங்கள் செல்ல முடியாத நிலையும் காணப்படுகின்றது.

குருநகர் சந்தைக்கு வருபவர்களின் வசதி மற்றும் பாதுகாப்பைக் கருதி சேதமடைந்த இந்தக் கால்வாயின் மேற்பகுதியை சீர்செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (ஒ– 135)



## தென்மராட்சி மாணவருக்கு கற்றல் உபகரணங்கள்



சாவகச்சேரி நகரசபைத் தலைவர் இ.தேவசகாயம்பிள்ளை கற்றல் உபகரணங்கள் வழங்கியபோது.....

தென்மராட்சி, ஜன.19

சாவகச்சேரி டிறிபேக் கல்லூரியின் பழைய மாணவரால் வழங்கப்பட்ட கற்றல் உபகரணங்கள் தென்மராட்சி கல்வி வலயத்தைச் சேர்ந்த கிராமப்புறப் பாடசாலைகளில் கல்வி பயிலும் மாணவர்களுக்கு அண்மையில் விநியோகிக்கப்பட்டன. கிராமப்புறங்களைச் சேர்ந்த 10 பாடசாலைகளைச் சேர்ந்த 300 மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்கள் விநியோகிக்கப்பட்டன. சாவகச்சேரி டிறிபேக் கல்லூரியின் அதிபரும் இலங்கைத் தமிழரசுக் கட்சியின் சாவகச்சேரி தொகுதி அமைப்பாளருமாகிய க.அருந்தவபாலன் சாவகச்சேரி நகரசபைத் தலைவர் இ.தேவசகாயம்பிள்ளை ஆகியோர் மிருசுவில், வரணி, மந்துவில், கைதடி, மட்டுவில் போன்ற பிரதேசங்களில் உள்ள கிராமப்புறப் பாடசாலைகளில் கல்விபயிலும்மாணவர்களுக்கு வழங்கினர். (வ–9)

## ஒன்றுகூடலும் பிரிவுபசாரமும்

தென்மராட்சி, ஜன.19

சாவகச்சேரி பிரதேச சபையின் ஊழியர் நலன்புரி சங்கத்தால் நடத்தப்படும் ஊழியர்களின் 2014 ஆம் ஆண்டுக்கான வருடாந்த ஒன்றுகூடல் நிகழ்வும் சாவகச்சேரி பிரதேச சபையில் நீண்டகாலமாக பணிபுரிந்து ஓய்வு பெற்றுச் சென்ற உத்தியோகத்தர்கள், சபையிலிருந்து மாற்றலாகிச் சென்ற உத்தியோகத்தர்களுக்குமான பிரிவுபசார விழாவும் எதிர்வரும் வியாழன் முற்பகல் 11 மணிக்கு நடை பெறும். (ஒ – 131)

## தண்ணீரூற்று முஸ்லிம் ம.வியில் கட்டடங்கள் திறப்பும் பரிசளிப்பும்

முள்ளியவளை, ஜன.19

தண்ணீரூற்று முஸ்லிம் மகா வித்தியாலயத்தில்புதிதாகஅமைக்கப்பட்ட மதில், விளையாட்டு மைதானத்துக்கான பார்வையாளர் அரங்கு, மீள் நிர்மாணம் செய்யப்பட்ட ஒன்றுகூடல் மண்டப கட்டடத் திறப்பு விழாவும் மாணவர்களுக்கான பரிசளிப்பு விழாவும் நேற்றுமுன்தினம் நடைபெற்றன.

நிகழ்வுக்கு பிரதம விருந்தினராக கட்டுமானங்களுக்கு நிதி வழங்கிய குறித்த பாடசாலையின் பழைய மாணவனும். வட மாகாண சபை உறுப்பினருமான ஜாகீர் ஜவாகீர் (ஜெனபர்) மற்றும் கௌரவ விருந்தினராக முல்லைத்தீவு வலயக்கல்விப்பணிப்பாளர் திருமதி உதயராணி முனீஸ்வரன் ஆகியோர் கலந்து கொண்டனர்.

பாடசாலையின் புதிய மதிலை வட மாகாண சபை உறுப்பினர் ஜாகீர் ஜவாகீர் (ஜெனபர்), விளையாட்டு மைதானத்துக்கான பார்வையாளர் அரங்கை முல்லைத்தீவு மாவட்ட உலமா சபைத் தலைவரும் அந்தப் பாடசாலையின் ஓய்வு பெற்ற



இஸ்லாம் பாட ஆசிரியருமான எம்.ஐ.பரித் மௌலவி மற்றும் மீள் நிர்மாணம் செய் யப்பட்ட ஒன்று கூடல் மண்டப கட்டடத்தை முல்லை வலயக் கல்விப் பணிப்பாளர் திருமதி உதயராணி முனீஸ்வரன் ஆகியோர் திறந்து வைத்தனர்.

பரிசளிப்பு விழாவில் பாடசாலை கோட்ட, வலய, மாவட்ட, மாகாண மட்டத்தில் நடைபெற்றபோட்டிகளில் வெற்றியீட்டிய மாணவர்களுக்கும் ஆசிரியர்களுக்கும் பரிசில் கள் வழங்கப்பட்டன. (வ–433)

# இன்று (19.01.2015) திங்கட்கிழமை
# மணிவிழாக் காணும் மணிவிழா நாயகன்
# சண்முகராஜா வாமதேவன் அவர்களின்
# மணிவிழா சிறப்பிதழ்

### அருளாசிச் செய்தி

யா/கோண்டாவில் இராமகிருஷ்ண மகா வித்தியாலய அதிபராகக் கடமையாற்றி இன்று மணிவிழாக் காணும் சண். வாமதேவன் அவர்களைப் பாராட்டிக் கௌரவிப்பதை எண்ணிப் பெருமகிழ்ச்சி அடைகின்றோம்.

''கணித மேதை'' எனப் போற்றப்படும் வாமதேவனுடைய விடா முயற்சியினால் இந்தப் பாடசாலை பல வளர்ச்சிகளைக் கண்டு கல்வியிலும் ஏனைய துறைகளிலும் வளர்ச்சியடைந்திருப்பது சிறப்புக்குரியதாகும். எல்லோருடனும் இனிமையாகப் பழகும் அதிபருடைய பணி ஏனைய அதிபர்களுக்கு முன்னுதாரணமாக விளங்குகிறது. இன்று மணிவிழாக் காணும் வாமதேவன் இன்று போல் என்றும் சமூக, சமயப்பணி ஆற்றவும் மகிழ்ச்சியுடன் வாழ்வதற்கும் இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

என்றும் வேண்டும் இன்ப அன்பு......!

**ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள்**
**2ஆவது குருமகா சந்நிதானம் நல்லை ஆதீனம்**

### பன்முக ஆளுமை கொண்ட அதிபர்

யா/கோண்டாவில் இராமகிருஷ்ண மகாவித்தியாலய அதிபர் சண். வாமதேவன் அவர்களின் மணிவிழா மலருக்கு வாழ்த்துச் செய்தி வழங்குவதில் மட்டற்ற மகிழ்ச்சியடைகின்றேன். பாடசாலையொன்றின் அதிபர் எவ்வாறு பன்முக ஆளுமைகொண்டவராக விளங்கவேண்டும் என்பதற்கான உதாரண புருஷராகத் திகழ்ந்து இன்று மணிவிழாக்காணும் அவரைப் பாடசாலைச் சமூகம் பாராட்ட முற்பட்டமை வரவேற்கத்தக்கதாகும்.

ஆசிரியராக, பிரதி அதிபராக, அதிபராகப் பணியாற்றிய காலங்களில் பாடசாலையின் கல்விச்செயற்பாடுகளுக்கும் இணைச் செயற்பாடுகளுக்கும் அவர் ஆற்றிய பணிகள் மறக்க முடியாதவையாகும். பாடசாலையின் பௌதிகவள அபிவிருத்தியின் பொற்காலமென அவரது பதவிக்காலத்தைக் குறிப்பிடுதல் மிகையாகமாட்டாது.

பாடசாலையின் பெற்றோர்கள், நலன்விரும்பிகள், பழைய மாணவர்கள் எல்லோரையும் அரவணைக்கும் பண்புகொண்ட அதிபரின் குணவியல்பே அவர்களது பூரண ஒத்துழைப்பைப் பெற்றுக்கொள்ளவும் காணிக் கொள்வனவிலும் கட்டட விஸ்தரிப்பிலும் பாடசாலையை வேகமாக வளர்க்கவும் உதவியது எனக்கூறுதல் வேண்டும். அதுபோன்றே கல்வித் திணைக்களத்தின் நம்பிக்கைக்குரியவராக அவர் திகழ்ந்தமையால் பௌதீகவள அபிவிருத்தியிலும் ஆளணி அபிவிருத்தியிலும் அவர் பல சாதனைகளை நிறைவேற்றியுள்ளமையைக் காணமுடியும். சண்.வாமதேவன் அவர்கள் நல்ல நிர்வாகி மட்டுமன்றி, கணிதத்தைக் கற்பிக்கும் சிறந்த ஆசிரியருமாவார்.

அவரது கற்பித்தலின் திறமைக்கும் ஆற்றலுக்கும் கிடைத்திருக்கும் பரிசே ''கணிதச்சுடர்'' என்றபட்டமாகும். கணித பாடத்தைப் பாடசாலையில் மட்டுமன்றி தனியார் கல்வி நிலையங்களிலும் கற்பித்து வந்த அவரின் திறமையால் மிகச்சிறந்த பெறுபேற்றைப் பெறும் வாய்ப்பு மாணவர்களுக்குக் கிடைத் தது. இது போன்றே இணைச் செயற்பாடுகளில் அவர் காட்டிய ஆர்வம் பாடசாலை எல்லாவகையான போட்டிகளிலும் சாதனை படைக்க வழி வகுத்தது. கோட்டமட்டம், வலயமட்டம், மாவட்டமட்டம், மாகாண மட்டம், தேசியமட்டமென எல்லா நிலைகளிலும் பாடசாலை மாணவர் களை சாதனை படைக்கத் தூண்டியமை அதிபர் சண்.வாமதேவன் அவர்களின் அர்ப்பணிப்பான சேவையேயாகும்.

சண்.வாமதேவன் அவர்களின் பன்முக ஆளுமையே அவரைப்பாடசாலை மட்டதிலும் சமூக மட்டத்திலும் புகழ்பெறச் செய்தது. பாடசாலையின் ஆசிரியர்களை வழி நடத்துவதிலும், மாணவர்களை நிர்வகிப்பதிலும், பாடசாலைச் சமூகத்தை அரவணைப்பதிலும் அவர் கொண்டிருந்த ஆளுமையே அவரைப் புகழ்பூத்த அதிபராக உயரவைத்தது. அவர் தலைமையேற்று நடத்திய பல விழாக்களில் கலந்து கொண்டவன் நான் என்பதால் நண்பர் வாமதேவன் மொத்தத்தில் பதவிக் காலத்தைப் பொற்காலமாக்கிய அவரின் சேவை பாடசாலைச் சமூகத்தால் என்றும் மறக்கப்படமுடியாததாகும். இத்தகைய சேவையாளர் இளைப்பாறியதன் பின்னரும் சமூகத்துக்கு பணிபுரிய நல்ல உடலாரோக்கியத்துடன் மகிழ்வாக பல்லாண்டு காலம் வாழ எல்லாம் வல்ல இறைவனை இறைஞ்சி அவரை வாழ்த்தி நிற்கின்றேன்.

**பேராசிரிய க. தேவராஜா, தலைவர் வணிகத்துறை.**
**யாழ். பல்கலைக்கழகம்.**

### கணிதத் துறைக்கோர் நல்லாசான்

இடைநிலை வகுப்புக்களின் கணித பாடம்பெறும் முக்கியத்துவம் நாம் அனைவரும் அறிந்ததொன்றே, கல்வி அமைச்சும் இந்தப் பாடத்தின் சித்தி வீதத்தை உறுதிப்படுத்தும் நோக்குடன் காலத்துக்குக் காலம் பல நடவடிக்கைகளை எடுத்துவருகிறது. இந்தப் பாடத்தின் சித்தியின்மை மாணவர்களின் உயர்கல்வியில் தாக்கத்தைச் செலுத்தக்கூடாது என்பதற்காக கல்வி அமைச்சு இந்தபாடம் தொடர்பில் சில சலுகைகளை வழங்கிவருகிறது. ஆனால், இந்த நடவடிக்கைகள் கல்வியின் தூரநோக்கான தரமான கல்வியின் வாயிலாக தரமான சமூகம் என்ற தொனிப்பொருளை வலுவூட்டுமா? என்பது கேள்விக்குறியே!

யாழ்ப்பாணக் கல்விவலயத்தில் ''ஜெய்க்கா'' கல்வி அபிவிருத்திச் செயற்றிட்டம் முன்னெடுக்கப்பட்ட காலப்பகுதி. இந்தச் செயற்றிட்டத்தின் விளைவுகள் தொடர்பான அறிக்கை Presentation ஒன்று யா/வேம்படி மகளிர் உயர்தரப்பாடசாலையில் இடம்பெற்றது.

அந்த நிகழ்வில் நானும் கலந்துகொண்டிருந்தேன். பல பாடசாலைகள் தமது விளைவுகளை முன்வைத்தன. அவ்வேளை யா/கோண்டாவில் இராமகிருஷ்ண மகா வித்தியாலயத்தினால் முன்வைக்கப்பட்ட விடயங்கள் மனங்கொள்ளத்தக் கவையாக அமைந்து இருந்தன. அதன் பின்னர் அந்தப் பாடசாலையில் முன்வைக்கப்பட்ட விடயங்கள் உண்மையானவை என்பதை உறுதிப் படுத்திக்கொண்டேன்.

அந்நாளில் இருந்து இந்தப் பாடசாலை, அதன் அதிபர் ச. வாமதேவன் ஆசிரியர், குழாம் தொடர்பான உயர்வான மதிப் பொன்று ஏற்பட்டது. தொடர்ந்து இந்தப் பாடசாலை தனது சமூக மதிப்பைப் பேணிவருகின்றமையையும் அவதானித்து வந்துள்ளார்.

கற்றல் - கற்பித்தல் செயன்முறைதொடரில் நல்லாசிரியர் தொடர்பாகக் காணப்படவேண்டிய நான்கு பண்புகளைக் குறிப்பிடுவர், அவையாவன அறிவு, திறன், மனப்பாங்கு, பிரயோகம். ச. வாமதேவன் அவர்கள் கணித பாடம் தொடர்பான நிறைவான அறிவைப்பெற்றிருந்தவர். அதனைச் செவ்வனே பயன்படுத்தும் திறன்கொண்டவர்.

அவற்றை மாணவர் நலன் சார்பில் பயன்படுத்த வேண்டுமென்ற உயர்வான மனப்பாங்குகொண்டவர். நடைமுறையில் அதனை பாடசாலையிலும் பாடசாலைக்கு வெளியிலும் பிரயோகித்தவர் இந்தப் பாடம் தொடர்பான உயர்வான தேர்ச்சிகளை உறுதிப்படுத்தியவர். ''கணித பாடத்தில் மாணவர்களின் சித்திகளை உறுதிப் படுத்த முடியும்'' என்ற சவாலை ஏற்கக்கூடிய ஆசிரியர்களில் ஒருவர் தான் ச.வாமதேவன் அவர்கள்.

இவர் தனது சேவைக்காலத்தில் ஆசிரியராக இருந்து கணிதத்துறைக்கு ஆற்றியசேவைக்கும், அதிபர் பொறுப்புடன் கணித்துறையையும் கவனத்திற்கொண்டு ஆற்றிய அர்ப்பணிப்பு மிக்க சேவைக்கும் ஒரு நல்ல மனிதனாக இருந்து சமூகநலன் சார்ந்து ஆற்றிய சேவைகளுக்கும் எமது மாணவர்கள் சார்பில் மனமார்ந்த நன்றிகளையும், பாராட்டுக்களையும் தெரிவித்துக் கொள்கின்றேன். தொடர்ந்தும் அவரது பணி எமது கல்விச் சமூகத்திற்குக் கிட்டுமென நம்புவோம். அவர் தமது குடும்ப உறவுகளுடன் பல்லாண்டு வாழவேண்டு மென வாழ்த்தும் நல்ல உள்ளங்களுடன் நானும் இணைந்து கொள்கின்றேன்.

**அ.ராஜேந்திரன்,**
**மாகாணக் கல்விப் பணிப்பாளர் வடமாகாணம்.**



| | |
|---|---|
| பெயர் | : திரு. சண்முகராஜா வாமதேவன் |
| பிறப்பு | : 19.01.1955 |
| தந்தையார் | : சண்முகராஜா |
| தாயார் | : அன்னலட்சுமி |
| மனைவி | : நகுலேஸ்வரி |
| பிள்ளைகள் | : கீர்த்தனா, நிலக்ஷி |
| பிறந்த இடம் | : வேலணை கிழக்கு |
| வதிவிடம் | : பொற்பதி வீதி, கொக்குவில் கிழக்கு. |
| ஆரம்பக்கல்வி | : யா/வேலணை கிழக்கு மகாவித்தியாலயம். |
| இடைநிலைக்கல்வி | : யா/ வேலணை மத்திய கல்லூரி. |
| உயர்கல்வி | : யா/ ஸ்கந்தவரோதயக் கல்லூரி சுன்னாகம். |
| தகைமை | : இலங்கை அதிபர் சேவை தரம் : SLPS I |

**சேவை விவரம்**

| | |
|---|---|
| 01.08.1978 - | 14.01.1979 யா/ நயினாதீவு ம.வி |
| 15.01.1979 - | 30.01.1983 யா/ வேலணை சரஸ்வதி வித்தி. |
| 31.01.1983 - | 31.12.1984 யா/ பலாலி ஆசிரியர் கலாசாலை. |
| 01.01.1985 - | 31.12.1989 இ/பரியோவன் தமிழ் ம.வி. இறக்குவானை. |
| 01.01.1990 - | 09.10.1991 யா/ கோண்டாவில் இந்து ம.வி. |
| 10.10.1991 - | 10.06.1993 யா/ இந்துக்கல்லூரி. |
| 01. 06.1991 - | இலங்கை அதிபர் சேவை போட்டிப்பரீட்சையில் சித்தி. |
| 11.06.1993 - | 10.09.2001 பிரதி அதிபர் - யா/கோண்டாவில் இராமகிருஷ்ண ம.வி. |
| 11.09.2001 - | 18.01.2015 அதிபர் - யா/கோண்டாவில் இராமகிருஷ்ண ம.வி. |

**பொதுப்பணிகள்:**

| | |
|---|---|
| **தலைவர்** | - பழைய மாணவர்கள் சங்கம், வேலணை கிழக்கு ம.வி. |
| **செயலாளர்** | - அதிபர் சங்கம் நல்லூர் கோட்டம். |
| **உறுப்பினர்** | - கொக்குவில் லயன்ஸ் கழகம். |
| **ஆலோசகர்** | - பொற்பதி சனசமூக நிலையம், கொக்குவில் ஐக்கிய விளையாட்டுக்கழகம் |

**பெற்ற விருதுகள்:** ''பிரதீபா பிரபா'', கணிதச்சுடர், ஆசிரியர் திலகம், ஜிக்கா செயற்றிட்டத்தில் வெற்றிகண்ட அதிபர்.

### வாழ்த்துச்செய்தி

யா/கோண்டாவில் இராமகிருஷ்ண மகா வித்தியாலய அதிபர் சண்.வாமதேவன் அவர்களின் மணிவிழாவினை முன்னிட்டு வெளியிடப்படும் மலருக்கு ஆசிச் செய்தி வழங்குவதில் மட்டற்ற மகிழ்ச்சியடைகின்றேன்.

தனது சேவைக்காலத்தில் ஆசிரியராக, உப அதிபராக, அதிபராக பல்வேறு படிநிலைகளை அலங்கரித்து அர்ப்பணிப்புமிக்க சேவையினை கல்விப் புலத்திற்கு வழங்கியுள்ளதுடன், 1995 ஆம் ஆண்டு இடப்பெயர்வின்பின் இந்தப் பாடசாலையை மீளக் கட்டியெழுப்புவதில் பெரும் பங்காற்றியமை பாராட்டத்தக்கதாகும்.

சிறந்த அதிபர்களிற்காக வழங்கப்படும் ''பிரதீபா பிரபா'' விருது 2013 ஆம் ஆண்டுவழங்கி கௌரவிக்கப்பட்டமையானது இவரது உயர்ந்த பணியினால் கிடைத்த வெற்றியே ஆகும். இந்தப் பாடசாலையில் பிரதி அதிபராக, அதிபராக 21 வருடங்கள் கடமையாற்றியுள்ளதுடன், உள்நாட்டிலும் வெளிநாடுகளிலும் உள்ள பழைய மாணவர்கள் மற்றும் அரச சார்பற்ற நிறுவனங்களின் உதவியோடு தனது காலத்தில் நிறைந்த பௌதிக விருத்தியினைப் பெற்றுக்கொடுத்தமையானது இவரது சேவைக்காலம் இந்தப் பாடசாலைக்கு ஒரு பொற்காலம் என்றே கூற வேண்டும்.தனது பணியை மனநிறைவுடன் நிறைவேற்றித் தனது கடும் உழைப்பினால் பெற்ற மகிழ்ச்சியுடன் ஓய்வுநிலைக்குச் செல்வது குறிப்பிடத்தக்கதாகும். இவரது ஓய்வுக்காலத்தில் சமூக, சமயப்பணி ஆற்றி குடும்பத்தினருடன் நீண்ட ஆயுளுடன் மகிழ்ச்சியாக வாழ எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்த்திக்கின்றேன்.

**வடமாகாண கல்வி அமைச்சு செயலாளரின்**
**சி.சத்தியசீலன், செயலாளர், கல்வி,**
**பண்பாட்டலுவல்கள், விளையாட்டுத்துறை மற்றும்**
**இளைஞர் விவகார அமைச்சு, வடமாகாணம்.**

### வாழ்த்துச் செய்தி

யா/ கோண்டாவில் இராமகிருஷ்ண மகா வித்தியாலயத்தில் அதிபராகக் கடமையாற்றி அகவை அறுபதில் மணிவிழாக்காணும் சண்முகராஜா வாமதேவன் அவர்களுக்கு வாழ்த்துச்செய்தி வழங்குவதில் மகிழ்வடைகின்றேன்.சிறந்த கணித ஆசிரியரான இவர் ''கணிதச்சுடர்'' என்ற பட்டத்தைப்பெற்றதோடு 2013 இல் சிறந்த அதிபருக்கான ஜனாதிபதி விருதாகிய ''பிரதீபா பிரபா'' விருதினையும்பெற்றுள்ளார். யா/கோண்டாவில் இராமகிருஷ்ண மகா வித்தியாலயத்தில் அதிபராகக் கடமையைப் பொறுப்பேற்றபின்னர் 5565 செயற்றிட்டங்களை நடைமுறைப்படுத்தி தேசிய ரீதியில் பரிசில்களை வெல்வதற்கு வழிவகுத்தார்.

அதிபராகக் கடமையாற்றிய காலத்தில் பாடசாலையினது பௌதிக வளத்தை அதிகரிப்பதற்கு உரிய நடவடிக்கைகளை எடுத்து பாடசாலையினது பௌதிக வளத்தை அதிகரித்தார். பாடசாலையில் க.பொ.த. (உ/த) இல் வர்த்தகப் பிரிவு இவருடைய காலத்தில் ஆரம்பிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கதாகும்.யாழ். வலயத்தில் சிறந்த அதிபராக் கடமையாற்றி பல்வேறு சமூகப் பணிகளிலும் ஈடுபட்டு தனது நிறைவான சேவையின் பின்னர் ஓய்வில் செல்லும் சண்.வாமதேவன் அவர்களது சேவைகளுக்கு எனது பாராட்டுக்களையும் நன்றிகளையும் தெரிவித்துக் கொள்கின்றேன். இவர் ஓய்வுக் காலத்தில் தனது குடும்பத்தாருடன் பல்லாண்டுகள் சிறப்புடன் வாழவும் அவரது கல்விப்பணி, சமூகப்பணி தொடரவும் வாழ்த்துகின்றேன்.

**எஸ். உதயகுமார்,**
**வலயக் கல்விப் பணிப்பாளர், யாழ்ப்பாணம்.**

### மற்றோரின் மனம் புண்படாத மனிதன் வாமதேவன்

நல்ல கணவனாய், பாசமான தந்தையாய், பலராலும் போற்றப்படும் சிறந்த கணித ஆசானாய் மற்றோரின் மனம் புண்படாமல் நடந்துகொள்ளும் நல்ல மனிதனாய் வாழ்ந்து கொண்டிருக்கும் சண்முகராஜா வாமதேவன் அவர்களின் அறுபதாவது அகவை கண்டு அதிர்ச்சியுறுகின்றேன். ஏனெனில் நண்பனாய், வாலிபனாய், துடிப்புள்ள இளைஞனாய் ஓடித்திரிந்த வாமனுக்கு அறுபது ஆகிவிட்டதா? நம்பவே முடியவில்லை.

எவரையுமே கடிந்துபேசாத வாமதேவன் அவர்கள் ஓரிரு துன்பங்களைச் சுமந்தாலும் அவற்றை வெளிக்காட்டாமல் குடும்பத்தாரோடும், சுற்றத்தாரோடும் கூடித்திரியும் நண்பர்களோடும் வெளிப்படையாகப் பேசும் சுபாவம் கொண்டவர். கோண்டாவில் இராமகிருஷ்ண மகாவித்தியாலயத்தில் இவரது சேவை மகத்தானது என்பதனை பல ஆதாரங்கள் வெளிக்காட்டி நிற்கின்றன. தன்னை நம்பிவருகின்ற குழந்தைகளுக்கு ஆதரவுக்கரம் நீட்டி, கல்வியைப் புகட்டி உயர்வான வாழ்வுக்கு வழிகாட்டும் சிறந்த வழிகாட்டியாகவும் உள்ளார்.எனது நீண்டகால நண்பரான வாமதேவன் அவர்கள் எனது அனைத்து இன்ப துன்பங்களிலும் பங்குகொள்கின்ற பக்குவமான நண்பன் என்று சொல்லுமளவுக்கு நல்ல இதயம் கொண்டவர்.இவரது அறுபதாவது அகவையில் வாழ்த்துச்சொல்வதில் மகிழ்ச்சியடைந்து நீண்ட ஆயுளோடு தமது கல்விப்பணி, சமூகப்பணிகளைத் தொடர எல்லாம்வல்ல இறைவனை வேண்டி நிற்கின்றேன்.

**சரா புவனேஸ்வரன்**
**பொதுச்செயலாளர், விரிவுரையாளர்**

Congratulations

## மணிவிழா சிறக்க வாழ்த்துவோர்

- பேராசிரியர் க. தேவராஜா குடும்பத்தினர் தலைவர் - வணிகத்துறை யாழ். பல்கலைக்கழகம்.
- E.S.P. நாகரட்ணம் - குடும்பத்தினர் கஜமுகன் ஹாட்வெயர் ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.
- சரா. புவனேஸ்வரன் - குடும்பத்தினர் இலங்கைத் தமிழ் ஆசிரிய சங்க பொதுச் செயலாளர்
- சட்டத்தரணி சிவஞானம் ஞானலோஜினி குடும்பத்தினர், கோண்டாவில்.
- வேலுப்பிள்ளை நடராசா குடும்பத்தினர், வேலணை வங்களாவடி .
- இரா அருட்செல்வம்- குடும்பத்தினர் A.T.C. இணுவில்
- ஞான திருக்கேதீஸ்வரன் குடும்பத்தினர், K.T.C. கோண்டாவில்
- S.கிருபா - குடும்பத்தினர் ஆஸ்திரேலியா, முன்னாள் கோண்டாவில் இராமகிருஸ்ண வித்தியாலயம்.
- இரா. செல்வவடிவேல் - குடும்பத்தினர் (விஞ்ஞான ஆசிரியர்)
- சோமசூரிய சிங்கம் - குடும்பத்தினர் சிங்கம் இல்லம், கோண்டாவில்
- S.ஜெபசோதி வரதன் ஓய்வு நிலை ஆசிரியர் கொட்டடி நமசிவாய வித்தியாலயம்,
- இ.அருட்செல்வம் - குடும்பத்தினர். யாழ்கோல்
- R.குமரன் -குடும்பத்தினர் NEW Scince world
- K. இலகுநாதன் - குடும்பத்தினர் "KEN Travels" நெல்சன் இடம் (No.32), வெள்ளவத்தை.
- N. ஐங்கரன் குடும்பத்தினர் கோண்டாவில்.
- வைத்திய கலாநிதி V. ஜெகரூபன், நாட்டிய கலாமணி V.ஜெனித்திரா, கொழும்பு.

Best Wishes

### ஆசிரியர் திலகமே வாழி! வாழி!!
(K.T.C. கல்வி நிலையத்தில் வாணி விழாவின் போது பேராசிரியர் க.தேவராஜா அவர்களினால் விழா நாயகருக்கு ''ஆசிரியர் திலகம்'' என்ற விருது வழங்கப்பட்டபோது)

அன்பான உள்ளம் கொண்டோய்
ஆருயிர் நண்பன் நீயே
பண்பான ஆசிரியன் நீ
பாங்கான பண்பாளனும் நீ
எண்ணங்கள் உயர்வு கொண்டோய்
ஏற்றங்கள் பலவும் கண்டாய்
எங்கள் அண்ணனான வாமன் நீ வாழிவாழி

அறுபதில் அகவை கண்டாய்
அதிபராய் மிளிர்ந்து நின்றாய்
அருங்கணித வள்ளல் நீயே
ஆசிரியன் கணித ஆசான்
பெருமை பல பெற்றே வாழ்ந்தாய்
பேருதவி பல புரிந்தாய்
பாடசாலை வாழ்க்கை தன்னில்
பணிகளே உயர்ந்ததென்றாய்.

கூடவே சேர்ந்து நின்றாய்
கடமைகள் பல புரிந்தாய்
இராம கிருஷ்ண வித்தி
யாலயம் தன்னில் நின்று
இராமனே நீதான் செய்த
சேவைகள் சொல்லில் உண்டோ
கட்டடம் பல உயர்ந்து
கல்வியில் மேன்மை கண்டு.

எண்ணற்ற மாணவர்கள்
ஏற்றங்கள் பலவும் பெற
கண்ணும் கருத்துமாக
கல்விதனைப் போதித்தாய்
சமூகத்தில் உயர்ந்தவனாக
சிந்தனைச் சிற்பியாக
வாமனே வாழி வாழி
வாழ்த்துகிறோம் வாழி வாழி.

**ஞான.திருக்கேதீஸ்வரன்**
**இரா.அருட்செல்வம்**
**K.T.C. கோண்டாவில்.**
**A.T.C. இணுவில்.**

# கருத்து

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்
தலைமையகம்: 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
செய்தி: 021-222 9933, 222 9944, 5679933, 5679944
விளம்பரம்: 021-5671111 விநியோகம்: 021-5677222
செய்தி: 021-2229944, விளம்பரம்: 021-2229731
செய்தி : news@uthayan.com கருத்து: comments@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com

## வெளிச்சத்துக்கு வரட்டும் வேடதாரிகள்

ஆற்றுவெள்ளமானது ஒருபோதும் பின் நோக்கிப் பாய்வதில்லை என்பார்கள். ஆனால் அரசியல் வெள்ளமானது பின்னோக்கி மட்டுமல்ல பல திசைகளிலும் சில சமயம் தாறுமாறாகவும் ஓடக்கூடும் என்பது இப்போது தெரிய வந்துள்ளது.

முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவுடன் ஒட்டி உறவாடி, சுகபோகங்களை அனுபவித்துக் கொண்டிருந்த பலர் இப்போது கட்சி மாறத் தொடங்கியுள்ளார்கள். நாட்டைவிட்டு ஓடுகிறார்கள்; தலைமறைவாகிறார்கள் ஏன், முன்னாள் ஜனாதிபதியின் காலடியில் பெட்டிப்பாம்புபோல் அடங்கிக் கிடந்தவரான முன்னாள் அமைச்சர் மேர்வின் சில்வாகூட ராஜபக்ஷவின் சகோதரர்கள் கோத்தபாய ராஜபக்ஷ, பஸில் ராஜபக்ஷ ஆகியவர்கள் தொடர்பாக குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தில் புகார் மனுக்களை சமர்ப்பித்து அவைகள் பற்றிய விசாரணைகளை நடத்தும்படி கோரியிருக்கின்றார். 'சண்டே லீடர்' பத்திரிகை ஆசிரியர் லசந்த விக்கிரமதுங்க மற்றும் முன்னாள் ஜனாதிபதியின் ஆலோசகர் பாரத லக்ஷ்மன் பிரேமச்சந்திர ஆகியவர்களின் கொலைகளில் முன்னாள் பாதுகாப்புத்துறை செயலாளருக்குத் தொடர்பு இருப்பதாக அவர் ஆவணங் கள் தாக்கல் செய்திருப்பதாக அவரே கூறியிருக்கிறார்.

தேர்தல் முடிந்து பெறுபேறுகள் வெளிவந்து கொண்டிருந்த இறுதிநேரத்தில் இராணுவப் புரட்சியொன்றை நடத்தி, தொடர்ந்து பதவியில் நீடிக்க சதித்திட்டமொன்றில் முன்னாள் ஜனாதிபதியும் வேறு முக்கியஸ்தர்களும் இறங்கியிருந்தார்கள் என்ற குற்றச்சாட்டில் இப்போதைய வெளியுறவு அமைச்சர் மங்கள சமரவீரவும் குற்றப்புலனாய்வுப் பிரிவினரிடம் ஆவணங்கள் தாக்கல் செய்து விசாரணைகளைக் கோரியிருக்கிறார். அந்தக் கோரிக்கைகளின் மீது விசாரணைகளை ஆரம்பிக்க சட்டமா அதிபர் - புலனாய்வுப் பிரிவினருக்கு அனுமதி வழங்கியிருப்பதாகவும் தெரிகின்றது.

இந்தக் குற்றச்சாட்டை முன்னாள் ஜனாதிபதி மறுத்திருக்கிறார் என்றாலும், அது நிரூபிக்கப்படுமானால் கடுமையான தண்டனைகளுக்கு சம்பந்தப்பட்டவர்கள் உள்ளாகலாம் என்று கூறப்படுகிறது.

இவைகள் போக முன்னாள் ஜனாதிபதியின் பாவனையிலிருந்த அலரிமாளிகையில் இருந்து ஏராளமான பணமும் வேறு கணினிகள் மட்டுமல்ல ஏராளமான வாகனங்களும் கண்டுபிடிக்கப்பட்டுள்ளதாக செய்திகள் வந்துள்ளன. அந்த மாளிகையிலுள்ள பல அறைகள் இப்போது மூடி முத்திரையிடப்பட்டுள்ளன.

இதேபோல் பல திணைக்களங்களின் உயர் மட்ட அதிகாரிகளின் காரியாலயங்களும் மூடப்பட்டிருப்பது தெரியவந்துள்ளது.

இவ்வாறு கடந்த காலத்தில் இடம் பெற்றுள்ள ஊழல்கள், மோசடிகள் குறித்து விசாரணை நடத்துவதற்கு நாடாளுமன்றத்தில் அங்கம் வகிக்கும் பல கட்சிகளையும் சேர்ந்த பிரமுகர்களைக் கொண்ட உயர்மட்டக் குழுவொன்று நியமிக்கப்பட்டிருப்பது வரவேற்கத்தக்கது.

அனுபவமுள்ள தகுதிவாய்ந்த பிரமுகர்களைக் கொண்ட இக்குழுவினர் பாரபட்சமின்றி தமது ஆய்வுகளை நடத்துவார்கள் என்று எதிர்பார்க்கலாம். அவர்கள் நடத்தும் ஆய்வுகளின் முடிவுகள் எவ்வாறு இருக்கும் என்று தெரியவில்லை. ஆனால் நாட்டு மக்களின் சொத்துக்களைச் சூறையாடியவர்கள் நீதியின் முன் நிறுத்தப்படுவதை அனைவரும் எதிர்பார்த் திருக்கிறார்கள் என்பது மட்டும் திண்ணம்.



# தமிழரின் இன்றைய நிலைக்கு காரணம்தான் என்ன?

க.ப. அறவாணன்

இந்தியாவுக்கு வெளியே தமிழரைப் பற்றி உயர்ந்த மதிப்பீடு இருப்பதாகச் சொல்ல முடியாது. இம்மதிப்பீடு சிங்கப்பூர், மலேசியா, தென்னாபிரிக்கா முதலான நாடுகளுக்கும் பொருந்தும். இந்நாடுகளில் 19ஆம் நூற்றாண்டில் ஆங்கிலேயரால் குடியேற்றப்பட்ட தமிழர்கள் பெரும்பாலும் கூலிகளாகவே சென்றார்கள்.

இறப்பர் தோட்டத்திலும்– கரும்புத் தோட்டத்திலும் சுரங்கங்களிலும் கடுமையாக வேலை செய்தனர். அங்கு பெரும் கட்டடங்களைக் கட்டினர். நெடுஞ்சாலைகளை அமைத்தனர். செல்வந்தராக ஆனோர் மிகக் குறைவு. கல்வியியலாளராக வளர்ந்தோரும் மிகக் குறைவு. எனவே, பல நாடுகளில் தமிழர்கள் கூலி என்றே அடையாளம் காணப்பட்டனர்.

தாய்லாந்தில் தமிழரை 'தமின்' எனக் குறிப்பிட்டனர். 'தமின்' என்றால் கொடியவர்' என்று பொருள். பிற்காலச் சோழர் காலத்தில் தமிழரின் படையெடுப்பு நடந்தபோது, அப்படையெடுப்பில் பங்கேற்றவீரர்களின்செயல்களைப்பார்த்துஉள்நாட்டு மக்கள் வைத்த பெயராக இருக்கலாம். பெரும்பாலும் எங்கும் உழைப்பவருக்கு எடுத்துக்காட்டாக இவர்கள் விளங்கி வந்திருக்கின்றனர்.

ஆங்கிலேயரிடமிருந்து விடுதலை பெறுதலுக்காக நடந்த சுதந்திரப் போராட்டத்தின் தொடக்கக் காலங்களில் சென்னை மாகாண மக்களின் பங்கேற்பு குறைவு என்றும், காலம் செல்லச் செல்ல அந்த எண்ணிக்கை கூடியது என்றும்– சில வரலாற்று ஆசிரியர்கள் எழுதியுள்ளனர்.

சுதந்திரத்தை அடையவும், வெள்ளைக்காரரிடமிருந்து விடுதலை பெற முயற்சி செய்யவும் மிகுதியான வேகம் தமிழரிடம் காணப்படவில்லை என்பதே அந்தக் கருத்து. சங்க காலத்தில் இருந்து தமிழருடைய வரலாற்றைக் கூர்ந்து பார்த்தால், தமிழர்கள் வெள்ளைக்காரர்களுக்கு ஏன் அடிமை ஆகினர் என்பதை முற்றுமாக விளங்கிக்கொள்ள முடியவில்லை.

இவர்கள் இடையே இருந்த பல அரசுகள் காரணமா? ஒற்றுமையின்மை காரணமா? ஜாதிப் பிளவுகள் பெரும் காரணமா? மதப் பிரிவு ஓரளவு காரணமா? இவற்றை வெளியில் இருந்து வந்தவர்கள் தமக்கு இலாபம் கிடைக்குமாறு பயன்படுத்திக் கொண்டனரா? இத்தகைய வினாக்களுக்குத் திட்டவட்டமாக விடை எழுத முடியவில்லை. சுதந்திரப் போராட்டக் காலத்தில் இவர்கள் மிகப் பெரிய அளவு மதிக்கப்பட்ட மக்களாக இல்லை. வங்காளியரைப் பார்த்தோ, பஞ்சாபியரைப் பார்த்தோ, மராத்தியரைப் பார்த்தோ டில்லிக்காரர்கள் அச்சம் கொள்வது போல, தமிழர்களைக் கண்டு அஞ்சுவதில்லை. தமிழர்களைப் பற்றிய அவர்களது கணிப்பு, நாம் சொன்னதைச் செய்வார்கள். நல்ல எழுதுவினைஞர்– வேலைக் காரர்கள்' என்பதாகத்தான் இருந்தது.

இந்த நிலையில் 1947இல் சுதந்திரம் பெற்ற போது, ராஜாஜி முதல் குடியரசுத் தலைவராக வருவதாக இருந்தது. ஜவாஹர்லால் நேருவின் கருத்தும் அதுவாகத்தான் இருந்தது. தொடர்ந்து வட இந்திய ஆதிக்கத்தின் விளைவாக ராஜேந்திர பிரசாத் முதலாவது குடியரசுத் தலைவராக்கப்பட்டார். விடுதலை பெற்றபின், ஒவ்வொரு பகுதி மக்களுக்கும் டில்லியில் ஒரு கணிப்பீடு இருந்து. அக் கணிப்பீட்டின் வெளிப்பாடுதான், வங்கதேசப் போரில் இந்திரா காந்தி நேர்முகமாகத் தலையிட்டு இந்தியப் படையை ஜெனரல் மேனகூஷா தலைமையில் அனுப்பி வங்க தேசப் போராளி முஜிபுர் ரஹ்மானோடு சேர்ந்து போரிடச் செய்து, வெற்றி பெற்று வங்க தேசத்தை உருவாக்கியது. இதுபோன்ற ஒரு தலையீட்டைத்தான் தெற்கே உள்ள இலங்கைத் தீவில் நடந்த சிங்களவர் – தமிழர் போரிலும் தமிழ்நாட்டில் எதிர்பார்க்கப்பட்டது. அதுபோன்ற ஒரு தலையீட்டை இலங்கையில் ஜே.ஆர்.ஜெயவர்த்தனா ஜனாதிபதியாக இருந்தபோது இந்திராகாந்தி நடத்திக்காட்டினார். அவர், இலங்கை சிங்கள அரசை அடக்கியும் காட்டினார். ஆனால், ராஜபக்ஷ காலத்தில் இந்திய அரசு முழுமையாகச் சிங்கள அரசுக்கு உதவியாகவே இருந்தது. தமிழ்நாடு அரசும் உதவியாகவே இருந்தது என்று செய்தியாளர்கள் கணிக்கிறார்கள்.


வங்க தேசத்தை விடுதலையடையச் செய்து வங்காளியர்களிடம் கொடுத்தது போல், தமிழ் ஈழத்தை விடுதலையடையச் செய்து, ஈழத்தமிழரிடம் கொடுக்க இந்திய அரசோ, தமிழ்நாடு அரசோ முனையவில்லையே ஏன்? இந்தக் கேள்விக்கு வெளிப்படையாக விடையளித்து விட முடியாது. அதுபோல, இந்திய அரசியலில் தமிழக முன்னாள் முதல்வர் காமராஜருக்கு முக்கியத்துவம் இருந்தது. காங்கிரஸ் கட்சிக்குள் மூப்பனாருக்கு முக்கியத்துவம் இருந்தது. இந்த முக்கியத்துவம் டில்லியில் பிரதமரைத் தீர்மானிக்க உதவிற்றே தவிர, டில்லியில் பிரதமர் பதவியை அடைய உதவவில்லை.

குடியரசுத் தலைவராக ஆந்திராவைச் சேர்ந்த டாக்டர் ராதாகிருஷ்ணன், வி.வி. கிரி போன்றோரும், தமிழ்நாட்டில் இருந்து ஆர். வெங்கட்ராமன், ஏ.பி.ஜெ. அப்துல் கலாம் இருந்திருக்கிறார்கள். பிரதமராக ஆந்திராவைச் சேர்ந்த நரசிம்ம ராவ் பொறுப்பு வகித்திருக்கிறார். ஆனால், தமிழ்நாட்டைச் சார்ந்த எவரும் பிரதமர் நாற்காலியை இதுவரை அலங்கரிக்கவில்லை. அலங்கரிப்பதற்கான வாய்ப்பும் இருப்பதாகத் தெரியவில்லை.

இந்திய அரசியலில் போதிய தமிழர்கள் அளவு தலைமை பெறாமைக்கு இவர்களிடம் உள்ள குறைகள் காரணமா? அப்படியாயின் குறைகள் என்னென்ன? குறிப்பாக, இவர்களிடையே இன்றும் பின்பற்றப்படும் ஜாதிப் பிரிவு ஒரு காரணமா? ஒற்றுமையின்மை காரணமா? இவர்களது பழக்க வழக்கப் பண்பாடு காரணமா? இவற்றையெல்லாம் நாம் ஆராய்ந்து நெறிப்படுத்த வேண்டியது மிகவும் அவசியமாகும்.

*(நன்றி – தினமணி)*

வோஷிங்ரன் போஸ்ட் பத்திரிகையிலிருந்து தமிழாக்கம் நித்தியபாரதி



# தாம் தோண்டிய குழியிலேயே வீழ்ந்த மஹிந்த ராஜபக்ஷ

> 2009இல் தமிழீழ விடுதலைப் புலிகளை அழித்த பின்னர் சிங்கள வாக்காளர்கள் தனக்கு அமோக வெற்றியைப் பெற்றுத் தந்தது போன்று- தற்போதும் அவர்களின் ஆதரவு தனக்குக் கிடைக்கும் என்பதே மஹிந்த ராஜபக்ஷவின் எண்ணமாகும்.

கடந்த 9 ஆம் திகதி வெள்ளிக்கிழமைவிடியற் காலையில், இலங்கை ஜனாதிபதித் தேர்தல் முடிவுகள் தொடர்பாக ஊடக நிறுவனங்கள் மற்றும் செய்தி வலைப்பின்னல்கள் அடுத்தடுத்து பெறுபேறுகளை வெளியிட்டுக் கொண்டிருந்தன. மஹிந்த ராஜபக்ஷ இந்தத் தேர்தலில் தோல்வியுற்றுள்ளார் என்ற செய்தியை இலங்கையர்கள் அறிந்து கொள்வதற்குப் பெரும் பிரயத்தனப்பட்டனர்.

இந்தத் தேர்தலின் பெறுபேறானது கொழும்பில் வாழும் ஒவ்வொருவரையும் அதிர்ச்சிக்கு உள்ளாக்கியது.

இன்னமும் இரண்டு ஆண்டுகள் உள்ளநிலையில்தான் தேர்தலில் வெற்றிபெறுவேன் என்ற அதீதநம்பிக்கையுடன்கடந்தநவம்பரில் அப்போதைய இலங்கை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ ஜனாதிபதித் தேர்தலை நடத்தப் போவதாக அறிவித்தார்.

இலங்கை ஜனாதிபதித் தேர்தலில் மஹிந்த ராஜபக்ஷவை எதிர்த்து நிற்பதற்கான ஒரு தலைவரை இலங்கையின் பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய தேசியக் கட்சியால் வேட்பாளராக முன்நிறுத்துவதற்கான தகைமையைக் கொண்டிருக்கவில்லை. ஏனெனில் இந்தக்கட்சியின்நீண்டகாலத்தலைவராக உள்ள ரணில் விக்கிரமசிங்க ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிட்டால் இவரைத் தன்னால் மிக இலகுவாக வென்றுவிட முடியும் என மஹிந்த ராஜபக்ஷ கருதினார்.

2009இல் தமிழீழ விடுதலைப் புலிகளை அழித்த பின்னர் சிங்கள வாக்காளர்கள் தனக்கு அமோக வெற்றியைப் பெற்றுத் தந்தது போன்று– தற்போதும் அவர்களின் ஆதரவு தனக்குக் கிடைக்கும் என்பதே மஹிந்த ராஜபக்ஷவின் எண்ணமாகும்.

ஜனாதிபதித் தேர்தலை நடத்தப் போவதாக அறிவித்து இரண்டு நாள்களின் பின்னர், ராஜபக்ஷவும் மற்றவர்களும் அதிர்ச்சியடைந்தனர். அதாவது இவரது அமைச்சரவையில் சுகாதார அமைச்சராகக் கடமையாற்றிய மைத்திரிபால சிறிசேன ஆளுங்கூட்டணியிலிருந்து விலகி எதிரணியின் பொது வேட்பாளராகத் தேர்தலில் போட்டியிடுவதாக அறிவித்தமை அனைவரையும் அதிர்ச்சிக்கு உள்ளாக்கியது.

சிறிசேன தான் ஜனாதிபதியாகப் போட்டியிடப் போவதாக அறிவித்த பின்னர், இவருடன் அரசுக்கு ஆதரவாகச் செயற்பட்ட பலர் தமது ஆதரவுகளை வழங்கத் தொடங்கினர். ஒவ்வொரு நாளும் அரசில் அங்கம் வகித்த நாடாளுமன்ற உறுப்பினர் ஒருவர் அல்லது அமைச்சர் ஒருவர் ராஜபக்ஷ அரசை விட்டு விலகி எதிரணியுடன் இணைந்துள்ளதாக செய்திகள் தெரிவித்தன.

சிறிசேனவின் கோரிக்கை மிகவும் சாதாரணமானதாகும். ராஜபக்ஷ ஆட்சியை ஒழிப்பதற்காகவே தான் ஜனாதிபதி வேட்பாளராகப் போட்டியிடப் போவதாக அறிவித்தார். தேர்தல் பரப்புரையின் இறுதிநாள் நள்ளிரவன்று, ஐ.தே.க. அரசியல்வாதி ஒருவர் – சிறிசேன வேட்பாளராக நிறுத்தப்படுவதற்கு எவ்வாறு திட்டம் தீட்டப்பட்டது என்பது தொடர்பாக கொழும்பு வாழ் மக்கள் மத்தியில் உரையாற்றியமை மக்கள் மத்தியில் வரவேற்கப்பட்டது.

பத்து ஆண்டுகளாக இலங்கையின் ஜனாதிபதியாக இருந்த ராஜபக்ஷ தனது ஆட்சிக்காலத்தில் தென்னாசியாவின் மிகப் புராதன ஜனநாயக நாடான இலங்கையின் ஜனநாயகக் கட்டமைப்புக்களை குழிதோண்டிப் புதைத்துள்ளார். இவர் ஏற்கனவே இலங்கையில் நடைமுறையிலிருந்த நிறைவேற்று அதிபர்முறைமையை வலுப்படுத்துவதற்கான அதிகாரத்தைத் தன்வசப்படுத்தியிருந்தார்.

இவர் ஆட்சி அதிகாரத்தைத் தனது குடும்பத்தவர்களின் கைகளில் குவித்திருந்தார். மஹிந்த ராஜபக்ஷவின் ஒரு சகோதரர் பாதுகாப்புச் செயலராகவும், பிறிதொரு சகோதரன் நாடாளுமன்ற சபாநாயகராகவும், மூன்றாவது சகோதரன் அமைச்சராகவும், இவ ரது மகன்மார் மற்றும் இவரது நெருங்கிய உறவினர்கள் அதிகாரப் பதவிகளிலும் அமர்த்தப்பட்டனர்.

மஹிந்த ராஜபக்ஷவின் ஆட்சியை எதிர்த்தவர்களின் குரல்கள் நசுக்கப்பட்டன. ஜனாதிபதித் தேர்தல் இடம்பெற்ற அன்றைய தினம் ராஜபக்ஷாக்களால் படுகொலை செய்யப்பட்டதாகக் குற்றம் சுமத்தப்பட்ட பத்திரிகை ஆசிரியரான லசந்த விக்கிரமதுங்க படுகொலை செய்யப்பட்ட ஆறாவது ஆண்டு நினைவு நாளாகும். இவரது படுகொலையானது சுயாதீன ஊடகங்கள் சுயதணிக்கையை மேற்கொள்ள வேண்டும் என்கின்ற நிர்ப்பந்தத்தை ஏற்படுத்தியது.

ராஜபக்ஷவுக்கு எதிராகத்தனது தீர்ப்பை வழங்கிய, இலங்கை நீதிமன்ற பிரதம நீதியரசர் நம்பிக்கையில்லாப் பிரேரணை மூலம் பதவியிலிருந்து நீக்கப்பட்டார். மஹிந்த ராஜபக்ஷவின் ஆட்சியை விமர்சித்த மக்கள் அமைப்புத் தலைவர்கள் வெளிப்படையாக அச்சுறுத்தப்பட்டனர். இவ்வாறு செயற்பட்டவர்கள் வெள்ளை வான் மூலம் கடத்தப்பட்டுசித்திரவதைகளுக்கு உள்ளாக்கப்பட்டு, அடுத்தடுத்த தினங்களில் படுகொலை செய்யப்பட்டு அவர்களது உடலங்கள் பொது இடங்களில் கண்டெடுக்கப்பட்டன. சிலர் இதுவரை காணாமற் போயுள்ளனர்.

பெரும்பான்மைசிங்களவர்களுள் ராஜபக்ஷ ஆட்சியை எதிர்த்தவர்கள் மிகவும் மோசமான சூழலை எதிர்கொண்ட அதே வேளையில், இலங்கையில் வாழும் சிறுபான்மை இனத்தவர்களும் நாட்டில் பல்வேறு அடக்குமுறைகளுக்குஉட்பட்டனர். 2009இல் தமிழீழ விடுதலைப் புலிகள் தோற்கடிக்கப்பட்டு இலங்கை அரசு போர் வெற்றியைப்பிரகடனப்படுத்தியபோது வடக்கில் வாழ்ந்த தமிழ் மக்கள் இந்தப் போருக்காக மிகப் பெரிய விலையைச் செலுத்தியிருந்தனர். போரின்இறுதிக்கட்டத்தில்40,000 வரையான பொதுமக்கள் படுகொலை செய்யப்பட்டதாகஐ.நா. அறிக்கையின் நம்பகமான சாட்சியங்கள் உறுதிப்படுத்துகின்றன. அனைத்துலக சமூகம் அழுத்தம் வழங்கிய போதிலும், போர்க் குற்றங்கள் தொடர்பான அனைத்துலக சமூகத்தின் விசாரணைகளுக்கான கோரிக்கையை ராஜபக்ஷ அரசு முற்றிலும் நிராகரித்தது.

போர் இடம்பெற்ற போது பொது மக்கள் பூச்சிய இழப்புக் கொள்கையை கைக்கொண்டதாக மஹிந்தராஜபக்ஷ அரசுகூறியது. போர் முடிவடைந்த பின்னரும் நாட்டின் வடக்கில் பெருமளவான இராணுவத்தினர் குவிக்கப்பட்டனர். இவர்கள் அபிவிருத்திப் பணிகளில் ஈடுபடுத்தப்பட்ட அதேவேளையில், கண்காணிப்பு நடவடிக்கைகளையும் மேற்கொண்டனர்.

தமிழர் பாரம்பரிய இடங்களில் சிங்களக் குடியேற்றங்களை மேற்கொண்டதன் மூலம் தமிழ் மக்களின் வாழ்விட உரிமையைப் பறிப்பதற்கான முயற்சிகளை ராஜபக்ஷஅரசுமேற்கொண்டதாக மனித உரிமை அமைப்புக்கள் சுட்டிக்காட்டுகின்றன.

ராஜபக்ஷவின் ஆட்சி என்பது பௌத்த ஆயுத வன்முறைகளுக்கு ஆதரவுவழங்குவதையே குறித்து நிற்பதாக இலங்கை வாழ் முஸ்லிம் மக்கள் கருதுகின்றனர். அளுத்கமவில் ஜூன் 2014இல் பொதுபலசேன என்கின்ற தீவிர பௌத்த குழுவினர் மதக்கலவரத்தில் ஈடுபட்டனர். இந்தக் கலவரத்தில் நான்கு பேர் படுகொலை செய்யப்பட்டதுடன், குறைந்தது 10,000 வரையானோர் இடம்பெயர்ந்தனர். இது தொடர்பான செய்திகளை வெளியிட்ட ஊடகங்கள் இருட்டடிப்புச் செய்யப்பட்டதுடன், இந்தச் செய்தியை வெளியிட்ட ஊடகவியலாளர்கள் கண்டிக்கப்பட்டனர்.

ராஜபக்ஷாக்களைப் போன்ற சிங்கள பௌத்த தேசியவாதப் பின்னணியிலிருந்து சிறிசேன தேர்தலில் போட்டியிட்டாலும் கூட, சிறிசேனவுக்கு ஆதரவு வழங்குவதற்கு முஸ்லிம் மற்றும் தமிழ்க் கட்சிகள் முன்வந்தன.

முஸ்லிம்களைப் பொறுத்தளவில் சிறிசேனவுக்குத் தமது ஆதரவை வழங்குவதென்பது எவ்வித மறைமுக நோக்கத்தையும் கொண்டதல்ல.

ராஜபக்ஷ ஆட்சியால் தொடர்ச்சியாக ஆதரிக்கப்பட்ட பொது பலசேனா என்கின்ற அமைப்புத் தொடர்பாக தமது ஆட்சியில் உண்மையான மாற்றம் ஏற்படும் என சிறிசேன தனது பரப்புரையில் குறிப்பிட்டிருந்தார்.

ஆனால் தமிழ் மக்களைப் பொறுத்தளவில் இந்தத் தீர்மானம்என்பதுசற்றுத்தெளிவற்றதாகும். வடக்கில் இராணுவமயமாக்கலை நிறுத்துதல், மிகப் பெரிய வன்முறைகள் தொடர்பாக பொறுப்பளித்தல் தொடர்பில்சிறிசேனஎவ்விதவாக்குறுதியையும் அளிக்கவில்லை.

சாத்தியமான போர்க்குற்றச் சாட்டுக்களிலிருந்துராஜபக்ஷாக்களைப் பாதுகாப்பேன் என சிறிசேன உறுதியளித்துள்ளார். இது ஐ.நா. மனித உரிமைகள் சபையின் விசாரணைக்கு சிறிசேன தமது ஆதரவை வழங்க மாட்டார்என்றநிலைப்பாட்டைத் தோற்றுவித்துள்ளது. நிறைவேற்று ஜனாதிபதி முறைமை ஒழித்தல் அல்லது ராஜபக்ஷவைப் பதவியிலிருந்து நீக்குதல் உட்பட சட்ட ஆட்சியில்முன்னேற்றங்கள் ஏற்படுவதற்காகவே தமிழ்த் தேசியக் கூட்டமைப்புத் தனது ஆதரவை எதிரணிக்கு வழங்கியமை குறிப்பிடத்தக்கது.

கருத்து

# வாசகர் திருமுகம்

## சுகாதாரக் கேட்டை தடுப்பவர் யார்?

கொக்குவில் கிராமத்தின் மத்தியில் அமைந்திருக்கும் கொக்குவில் இந்துக் கல்லூரிக்குச் சொந்தமான ஏறக்குறைய 20 பரப்புக் காணியின் வடக்கு, மேற்கு எல்லைகளாக நீரோடும் வாய்க்கால்கள் அமைந்துள்ளன. தெற்கு எல்லையாக குளப்பிட்டி ஒழுங்கை (கொக்குவில் சந்தை முன் ஒழுங்கை) உள்ளது.

கடந்த 65 வருடங்களாக மேற்குறித்த காணி அபிவிருத்தி ஏதும் காணாத நிலையில் காணப்படுகின்றது.

இந்தக் காணியைச் சுற்றியுள்ள வாய்க்கால்கள் துப்புரவு செய்யப்படாமையால் நீர் வழிந்தோட முடியாத நிலையில் தேங்கி நின்று சுகாதாரக்கேட்டை ஏற்படுத்துவது வழக்கமாகிவிட்டது. இந்த வாய்க்கால்களில் நாரைகள் மீன் பிடிக்கும் காட்சியைக்கூடக் காண முடியும்.

குளப்பிட்டி வீதியால் செல்பவர்கள் இந்தக் காணியைக் கடக்கும்போது மூக்கைப் பொத்தியவாறே செல்கின்றனர்.

வாய்க்கால்களில் கழிவு நீர் தேங்கி நிற்பதால் நுளம்புகள் பெருகி டெங்கு நோய் பரவும் அபாயமும் காணப்படுகின்றது. வீடுகளில் நீர் தேங்கி நிற்கக் கூடிய சிரட்டைகள், பேணிகள் ஆகியவற்றை அகற்றுமாறு ஒலிபெருக்கி மூலமாக அறிவித்தல்விடுகின்றனர். ஆனால் குறித்த வாய்க்கால்களில் குவிந்து காணப்படும் இத்தகைய பொருள்கள் இவர்களின் கண்களுக்குத் தெரியாமலிருப்பது ஆச்சரியமாக உள்ளது. மேலும், இந்தக் காணியின் இருமருங்கும் உரப்பைகள் கட்டப்பட்ட இறந்த மிருகங்களின் உடல்கள், சந்தைக் கழிவுகள், சாப்பாட்டுக் கடைக் கழிவுகள், வீட்டுக் கழிவுகள் என்பன கொட்டப்படுகின்றன.

இவை அகற்றப்படாமையால் அழுகி நாற்றமெடுப்பதால் அயலில் குடியிருப்பவர்கள் சுத்தமான காற்றைச் சுவாசிக்க முடியாமல் அல்லற்படுகின்றனர். பாதீனியச் செடிகள் குறித்த இந்தக் காணியிலும், ஓரங்களிலும் பரவிக் காணப்படுகின்றன.

உரியவர்கள் இது தொடர்பாக உடனடியாக கவனம் செலுத்தாதுவிட்டால் மிகவும் மோசமான சுகாதாரக் கேடு ஏற்படும் என்பதில் ஐயமில்லை.

*- கொக்குவில் குஞ்சு*

## சுன்னாகம் பஸ் நிலையத்தில் ஆபத்து

சுன்னாகம் பஸ் நிலையத்தில் பஸ்கள் நிறுத்தப்படும் பகுதியினூடாக சிலர் மோட்டார் சைக்கிள்களில் வேகமாகப் பயணிப்பதால் பயணிகள் ஆபத்தை எதிர்கொண்டு வருகின்றனர்.

நேற்று முன்தினம் பருத்தித்துறையிலிருந்து வந்த 753 ஆம் இலக்க பஸ்ஸிலிருந்து இறங்கிய பெண் பயணியொருவர் இளம் பெண் ஒருவரால் வேகமாகச் செலுத்தி வரப்பட்ட மோட்டார் சைக்கிளால் மோதுண்டு படுகாயமடைவதிலிருந்து மயிரிழையில் தப்பிவிட்டார்.

இதேபோன்ற சம்பவங்கள் இனியும் நடக்காமல் பார்த்துக் கொள்வது பஸ் நிலையத்தின் பராமரிப்புக்கு உரியவர்களின் கடமையாகும்.

*செ.விஜயராணி, சுன்னாகம்.*

## நீர் சுத்தமாவது எப்போது?


சுன்னாகம் நிலத்தடி நீரில் மின்சார நிலையத்திலிருந்து வெளியேற்றப்பட்ட கழிவு எண்ணெய் கலந்துள்ளமை எம்மை வெகுவாகப் பாதித்துள்ளது.

சுத்தமான நீரை ஆண்டாண்டு காலமாக அருந்தி வந்த நாம் – தற்போது பிரதேச சபையினால் வழங்கப்படும் குடிதண்ணீரையே அருந்தி வருகின்றோம்.

எமது அடுத்த சந்ததியாவது எமக்குச் சொந்தமான கிணறுகளிலிருந்து சுத்தமான நீரைப் பெறுவதற்கு வழி கிடைக்குமா என்ற ஏக்கத்துடன் வாழ்கின்றோம்.

*பொ.விஜயகுமாரி, சூராவத்தை.*

### கேலிச் சித்திரம்




நன்றி: மவ்பிம

# கொலைகாரன் கோத்தா!

ஜனாதிபதித் தேர்தல் நடந்து முடிந்த பின்னர் நாட்டில் பல்வேறு காட்சிகள் அரங்கேறிக் கொண்டிருக்கின்றன. கடந்த ஆட்சியில் நடந்த அக்கிரமங்கள் – அநியாயங்கள் ஒவ்வொன்றும் இப்போது வெளித் தெரிய ஆரம்பித்துள்ளன. கூட இருந்தவர்களே, புதிய ஆட்சியில் போட்டுக் கொடுக்கும் காரியங்களையும் செய்து வருகின்றனர்.

மஹிந்த அரசின் காலத்தில் மேர்வின் சில்வா செய்த அட்டகாசங்களை யாரும் எளிதில் மறந்து விட முடியாது. மக்களைப் பொறுத்தவரை மேர்வின் ஓர் கோமாளி. சமுர்த்தி உத்தியோகத்தரை மரத்தில் கட்டியதிலிருந்து, களனித் தொகுதியில் அவர் போட்ட ஆட்டம் வரையில் எல்லாம் தவறு என்று தெரிந்தும், எந்த நடவடிக்கையும் மேர்வின் மீது எடுக்கப்படவில்லை.

ராஜபக்ஷ குடும்பத்தினர் மேர்வின் மீது நடவடிக்கை எடுக்காமல் இருந்தது, மக்களுக்கு பல்வேறு சந்தேகங்களைத் தோற்றுவித்திருந்தன. ராஜபக்ஷாக்களின் முக்கிய பிடியொன்று மேர்வினிடம் சிக்கியிருக்க வேண்டும். அதனால்தான் மேர்வினின், 'அலப்பறைகளுக்கு' எல்லாம் ராஜபக்ஷாக்கள் தலையாட்டும் பொம்மையாக இருந்திருக்கின்றார்கள்.

அது உண்மை என்பது போலத்தான் இப்போது காரியங்கள் நடந்தேறியிருக்கின்றது. குற்றப் புலனாய்வுப் பிரிவினரிடம் மேர்வின் சில்வா முறைப்பாடு செய்திருக்கின்றார். பாரத லக்ஷ்மன் பிரேமசந்திர மற்றும் ஊடகவியலாளர் லசந்த ஆகியோரது கொலையுடன், முன்னாள் பாதுகாப்பு செயலாளரும், ஜனாதிபதியின் சகோதரருமான கோத்தபாய ராஜபக்ஷ தொடர்புபட்டிருக்கின்றார் என்பதே அவரது முறைப்பாடு. இதனை விட மற்றொரு சகோதரரும், பொருளாதார அபிவிருத்தி அமைச்சருமான பஸில் ராஜபக்ஷவுக்கு எதிராக ஊழல் முறைப்பாடு செய்திருக்கின்றார். முறைப்பாடுகள் செய்த பின்னர் கருத்துத் தெரிவித்த மேர்வின், இலங்கையில் வெள்ளை வான் கலாசாரத்தை அறிமுகப்படுத்தியது கோத்தபாய ராஜபக்ஷவே என்று குறிப்பிட்டார். மேர்வின் சில்வா செய்த முறைப்பாடு முக்கியமானது. ராஜபக்ஷாக்களுடன் நெருக்கமாக இருந்தவர். அவரது அமைச்சரவையில் அடிதடி அமைச்சர் என்று பெயர் எடுத்தவர். மேர்வின் மீது ராஜபக்ஷாக்கள் நடவடிக்கை எடுக்காமைக்கு, இந்தக் கொலைகளின் சூத்திரதாரிகள் தொடர்பில் அக்குவேறு ஆணிவேறாக மேர்வின் அறிந்து வைத்திருந்தமையும் காரணமாக இருக்கலாம்.

மேர்வினின் முறைப்பாட்டில் இரண்டு கொலைகள் அதுவும் தென்பகுதியில் நடந்தவை பற்றித்தான் குறிப்பிடப்பட்டுள்ளது. ஆனால் அதே சமகாலத்தில் வடபகுதியில் 2006 ஆம் ஆண்டு தொடக்கம் 2009 ஆம் ஆண்டு வரையில் கொலைகள் – வெள்ளைவான் கடத்தல்கள் என்பன அரங்கேறியிருந்தன. இவை தொடர்பிலும் விசாரிக்கப்பட வேண்டும். எனவே அந்தக் காலத்தில் யாழ். மாவட்ட இராணுவத் தளபதியாக இருந்த தற்போதைய ஆளுநர் ஜி.ஏ.சந்திரசிறி விசாரணைக்கு உட்படுத்தப்பட வேண்டும். அதற்கு முன்னதாக அவரது நுழைவுவிசை பறிமுதல் செய்யப்பட வேண்டும். ஏனெனில் ஆளுநர் பதவியிலிருந்து விலகியதும் ஆஸ்திரேலியாவுக்குச் செல்வதற்கு அவர் திட்டமிட்டுள்ளார். அவரது நுழைவுவிசை பறிமுதல் செய்யப்பட்டு அந்தக் காலப் பகுதியில் வடக்கில் நடந்த கொலைகளுக்கும், கடத்தல்களுக்கும் காரணமானவர்களை கண்டறிய சந்திரசிறி விசாரணைக்கு உட்படுத்தப்பட வேண்டும். அந்தக் காலத்தில் துணை இராணுவக் குழுக்களாக இயங்கியவர்களும் விசாரணைக்கு உட்படுத்தப்பட வேண்டும்.

இதேவேளை, அலரிமாளிகையைப் பார்வையிட்ட பின்னர் கருத்துத் தெரிவித்த நாடாளுமன்ற உறுப்பினர், யாழ்ப்பாணத்திலுள்ள குறிப்பிட்ட ஒரு தியேட்டரையும் பார்வையிட வேண்டும். அங்கு எத்தனை எலும்புக்கூடுகள் புதைக்கப்பட்டிருக்கின்றனவோ தெரியாது என்று குறிப்பிட்டார். புதிய அரசு நடத்தும் விசாரணைகள் தனியே சிங்கள மக்களுக்கு மாத்திரம் நீதி பெற்றுக் கொடுப்பதாக இல்லாமல், தமிழ் மக்களுக்கும் நீதி பெற்றுக்கொடுக்க வேண்டும்.


பத்தி எழுத்து

# சிறுவர்

## பிறர் வாழ எண்ணினால்...

ஒரு நாள் பத்து வயது மதிக்கத்தக்க சிறுவன் ஒருவன் ஐஸ்கிறீம் கடைக்குச் சென்றான். ஒரு இருக்கையில் உட்கார்ந்தான். 'ஐஸ் கிறீம் கோன் எவ்வளவு?' என்று கடையில் உள்ள பணிப் பெண்ணிடம் கேட்டான். அவள் பத்து ரூபா என்றாள். தன் கையில் இருந்த சில்லறைக் காசுகளை எண்ணத் தொடங்கினான். பிறகு அவன் "ஒரு சிறிய அளவு ஐஸ் கிறீம் எவ்வளவு?" என்று கேட்டான். அவள் பொறுமையிழந்து "எட்டு ரூபா" என்று பதிலளித்தாள். அந்தச் சிறுவன் 'எனக்கு ஒரு சிறிய ஐஸ் கிறீம் கப் வேண்டும்' என்றான். அவனுக்கு ஐஸ் கிறீம் கிடைத்தது, தொகைக்கான சீட்டும் கிடைத்தது. பிறகு, பணம் கொடுத்துவிட்டு வெளி யேறினான். அந்த வெற்றுத்தட்டை எடுக்க வந்த பணிப்பெண், மனமுருகிப் போனாள். அந்தத் தட்டுக்கு அடியில் ஒரு ரூபா நாணயம் அந்தப் பெண்ணின் சேவைக்காக வைக்கப்பட்டிருந்தது. அந்த சிறுவன் ஐஸ் கிறீமை வாங்குவதற்கு முன்னால் அந்தப் பெண்ணின் சேவைக்கு ஊதியம் கொடுக்க வேண்டும் என்று எண்ணி இருந்திருக்கிறான். அவன் தனது உணர்வையும், அக்கறையையும் காட்டி விட்டான். தான் தன்னைப் பற்றி எண்ணுவதற்கு முன்னால் 'பிறரைப் பற்றி' எண்ணியிருந்திருக்கிறான். நாமெல்லோரும் அந்தச் சிறுவனைப் போல் எண்ணினால், நாம் வாழ்வதற்குரிய மகத்தான இடத்தைப் பெறுவோம். அக்கறையையும், பண்புள்ள தன்மையையும் காட்டுங்கள். பிறரைப் பற்றி எண்ணுதல் என்பது ஒரு அக்கறையான மனப்பாங்கைக் காட்டும்.







## கோமாளி மீன்


உங்களுக்கு எல்லாம் மிகவும் பிடித்தது நீமோ மீன்தான் இல்லையா? இதைக் கோமாளி மீன் என்று சொல்லுவார்கள். கடல் சாமந்தியும்– கோமாளி மீனும் நெருங்கிய நண்பர்கள். கோமாளி மீனால் வேட்டையாடி உணவைச் சாப்பிட முடியாது. கடல் சாமந்திக்கோ இடத்தை விட்டு நகரவே முடியாது. அதனால், கோமாளி மீன் கடல் சாமந்திக்குச் சற்றுத் தொலைவில் நீந்தும். அழகான அந்த மீனைப் பார்த்து அருகில் சில மீன்கள் வரும். உடனே கோமாளி மீன் அவற்றை கடல் சாமந்திக்கு அருகில் அழைத்துச் செல்லும். கடல் சாமந்தி தன்னுடைய கொடுக்குகளால் மீனைக் கொல்லும். அது சாப்பிட்ட எஞ்சிய உணவைக் கோமாளி மீன் சாப்பிடும்.

கடல் சாமந்தியின் உணர்கொம்புகளுக்குள் சென்று எந்த உயிரினமும் உயிரோடு திரும்பி வரவே முடியாது. ஆனால், கோமாளி மீன் மட்டும் உணர்கொம்புகளுக்குள் சென்று மகிழ்ச்சியாக விளையாடும்!



## விஷத்தால் கிடைக்கும் உணவு

தென் அமெரிக்காவில் வாழும் இராட்சத பூரானின் பெயர் அமேசான். இராட்சத பூரான் ஒரு அடி நீளம் இருக்கும். சத்தம் இல்லாமல் குகையின் மேற்கூரைக்கு வேகமாகச் செல்லும். அங்கே தொங்கிக்கொண்டிருக்கும் வௌவாலைத் தன் கால்களால் பிடித்து, விஷத்தைச் செலுத்தும். வௌவால் இறந்தவுடன், ஒரு மணி நேரத்தில் இரையை முழுவதும் சாப்பிட்டு விடும். எலி, சிறிய பறவை, பல்லி, தவளை ஆகியவை இந்தப் பூரானின் விருப்பமான உணவுகள் ஆகும்.



## வலிகிழக்கு தென்பகுதி ப.நோ.கூ.சங்கம் நீர்வேலி
## புதவி வெற்றிடம்

01- பதவி-கிளை முகாமையாளர்
சம்பள குறியீடு இல. :208/15
சம்பள அளவுத்திட்டம் : 9450(75X10-80X10)11000 (66/2006இன் படி)
வயதெல்லை :18-45 பால்: ஆண/பெண்
அங்கீகரிக்கப்பட்ட தகைமைகள் :
(அ) கூட்டுறவுப்பணியாளர் 16 வது சம்பளதிட்ட தொடர்புபட்ட துறைப் பதவியொன்றில் இரண்டு (2) வருடங்களுக்கு குறையாத அனுபவம் அல்லது கூட்டுறவுப்பணியாளர்17 வது சம்பளத்திட்ட தொடர்புபட்ட துறைப்பதவியொன்றில் நான்கு(4) வருடங்களுக்கு குறையாத அனுபவம்
அல்லது
(ஆ) கூட்டுறவுப்பணியாளர்(சாதாரணதரம்)சான்றிதழ் அல்லது க.பொ.த (சாதாரணதரம்) கணிதம் அல்லது வர்த்தக எண்கணிதம் அல்லது எண்கணிதம் மற்றும் சிங்களம் அல்லது தமிழ் மொழி உட்பட இரு தடவைகளுக்கு மேற்படாத அமர்வுகளில் 06 பாடங்களில் சித்தியும் தொடர்புபட்ட துறையில் அனுபவம் உள்ளவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்

02. பதவி - எழுதுநர்
சம்பள குறியீடு இல. :302/15
சம்பள அளவுத்திட்டம் : 9450(75X10-80X10)11000 (66/2006இன் படி)
வயதெல்லை :18-45 பால்: ஆண்/பெண்
அங்கீகரிக்கப்பட்ட தகைமைகள் :
(அ) கூட்டுறவுப்பணியாளர் 16 வது சம்பளத்திட்ட எழுது வினைஞர் பதவியொன்றில் இரண்டு(2) வருடங்களுக்கு குறையாத அனுபவம்.
அல்லது
(ஆ) க.பொ.த (சாதாரணதரம்) கணிதம் அல்லது வர்த்தக எண்கணிதம் அல்லது எண்கணிதம் மற்றும் சிங்களம் அல்லது தமிழ் மொழி உட்பட இரு தடவைகளுக்கு மேற்படாத அமர்வுகளில் 06 பாடங்களில் சித்தியுடன் கூட்டுறவுச் சங்கமொன்றில் எழுதுவினைஞர் பதவியொன்றில் ஒரு(1) வருடத்துக்கு குறையாத அனுபவம்.

03. பதவி - விற்பனை உதவியாளர்
சம்பள குறியீடு இல.' :308/17
சம்பள அளவுத்திட்டம் : 8950(65X10-70X10)10300 (66/2006இன் படி)
வயதெல்லை :18-45 பால்: ஆண்
அங்கீகரிக்கப்பட்ட தகைமைகள் :
(அ) கூட்டுறவுப்பணியாளர் கனிஸ்டதரச் சான்றிதழ்
அல்லது
(ஆ) 8ஆம் வகுப்பு சித்தியுடன் விற்பனை அலுவல்களுடன் தொடர்புடையதாக மூன்று(3) வருடங்களுக்கு குறையாத அனுபவம்.

04. பதவி - எரிபொருள் நிரப்புநர்
சம்பள குறியீடு இல.:313/16
சம்பள அளவுத்திட்டம் : 9200(70X10-80X10)10650 (66/2006இன் படி)
வயதெல்லை :18-45 பால்: ஆண்
அங்கீகரிக்கப்பட்ட தகைமைகள் :
(அ) கூட்டுறவுப்பணியாளர்17ஆவது சம்பளத்திட்ட பதவியொன்றில் ஒரு(01) வருடத்திற்கு குறையாத அனுபவம்.'
(ஆ) 8ஆம் வகுப்பு கல்விச் சான்றிதழ்

05. பதவி - வாகனச் சுத்திகரிப்பாளர்
சம்பள குறியீடு இல.:314/16
சம்பள அளவுத்திட்டம் : 9200(70X10-80X10)10650 (66/2006இன் படி)
வயதெல்லை :18-45 பால்: ஆண்
அங்கீகரிக்கப்பட்ட தகைமைகள் :
(அ) கூட்டுறவுப்பணியாளர்17ஆவது சம்பளத்திட்ட பதவியொன்றில் ஒரு(01) வருடத்திற்கு குறையாத அனுபவம்.
(ஆ) 5ஆம் வகுப்பு சான்றிதழும் நல்ல தேகாரோக்கியமும் இருத்தல் வேண்டும்.

**விண்ணப்ப முடிவுத் திகதி : 02.02.2015**
*விண்ணப்ப படிவத்தினை ரூபா.10/= செலுத்தி தலைமைக்கந்தோரில் பெற்றுக்கொள்ளலாம்
*விண்ணப்பபடிவத்துடன் பிறப்புச்சான்றிதழ் கல்விச்சான்றிதழ் அனுபவச்சான்றிதழ் பிரதி இணைக்கப்படல் வேண்டும்
* தபால் உறையின் இடதுபக்க மூலையில் விண்ணப்பிக்கும் பதவியின் பெயர் குறிப்பிடல் வேண்டும்
* கூட்டுறவுச்சங்க பணியாளர்களுக்கு உச்ச வயதெல்லை ஏற்புடையதாகாது
* கூ.சங்க பணியாளர்கள் சங்கத்தின் ஊடாக விண்ணப்பித்தல் வேண்டும்
* விண்ணப்பங்கள் அனுப்ப வேண்டிய முகவரி :
**பொது முகாமையாளர்**
**வலி கிழக்கு தென்பகுதி ப.நோ.கூ.சங்கம்**
**நீர்வேலி**
(10.01.2015ம் திகதிய இயக்குநர்சபை தீர்மானப்படி)
16.01.2015
பொது முகாமையாளர்
வலி கிழக்கு தென்பகுதி ப.நோ.கூ.சங்கம்

60 ஆவது பிறந்தநாள் வாழ்த்தும் சேவைநலன் பாராட்டும்

**சிறீஸ்கந்தராஜா திருநாவுக்கரசு**



அகவை 60 இல் அடிபதித்து வங்கிச் சேவையில் நிறைவு கண்டிருக்கும் உயர்திரு. தி.சிறீஸ்கந்தராஜா அவர்களின் ஓய்வுகாலம் மகிழ்வுடன் அமைய வாழ்த்துகின்றோம்.

BOC
யாழ்.2 ஆம் மேற்தரக்கிளை,
உத்தியோகத்தர் குழாம்.

(55961)(4.7.3)

பாராட்டி வாழ்த்துகின்றோம்

**ஸ்ரீமதி சுமித்தா மோகனரூபன்**

(நடன வித்திய பூஷன்) லண்டன்



Oriental Examination Board
London Vidya Bhushan

நடன ஆசிரியர் நிருத்திய வேந்தன் திருவாளர் நடராசா குமரவேள் அவர்களது இணுவையூர் குமரநர்த்தனாலயத்தின் ஆசிரிய தரப் பரீட்சையில் சித்தி எய்திய மாணவி 11.01.2015 அன்று லண்டனில் (Bech theater grange Road hayes middle sex) இல் நடைபெற்ற பட்டமளிப்பு விழாவில் வித்தியபூஷன் பட்டம் பெற்றமைக்காக அவரைப் பாராட்டி வாழ்த்துவதுடன், மேலும் பல பட்டங்கள் பெற்று சீரும் சிறப்புடனும் வாழ வாழ்த்துகின்றோம்.

வாழ்த்துவோர்:
இணுவையூர் குமரநர்த்தனாலய நடன ஆசிரியர் ந.குமரவேள் அவர்தம் மாணவ மாணவிகள்.

(55920)(4.3)

மணிவிழா நாயகனுக்கு மகத்தான வாழ்த்து



இன்று 19.01.2015 மணிவிழா கொண்டாடும் கோண்டாவில் இராமகிருஷ்ண மகா வித்தியாலய அதிபர்

கணிதச்சுடர்
**சண்.வாமதேவன்**
அவர்களை மனதார வாழ்த்துகின்றோம்.

"அன்னசத்திரம் ஆயிரம் வைத்தல் ஆலயம் பதினாயிரம் நாட்டல்
பின்னருள்ள தர்மங்கள் யாவும் பெயர்விளங்கி ஒளிர நிறுத்தல்
அன்னையாவிலும் புண்ணியம் கோடி ஆங்கோர் ஏழைக்கு எழுத்தறிவித்தல்"

என்பதற்கிணங்க பிரதி அதிபராக, அதிபராக சேவையாற்றிய இரண்டு தசாப்த காலத்தில் குடத்துத் தீபம் போல் இருந்த பாடசாலையை குன்றின் மேல் விளக்காக ஒளிவீசச் செய்த பெருமைக்குரியவர். இவரது பணி பாடசாலை, கல்வி என்று நின்று விடாமல் சமூகம் சார்ந்தும் பரந்து சென்று ஊருக்கே பெருமை சேர்த்ததை யாமறிவோம்.

ஓய்வு காலத்தில் இவரது பணி ஓய்வின்றி மென்மேலும் தொடர சகல இஷ்ட சித்திகளையும் இவருக்கும் இவரது குடும்பத்தினருக்கும் அருள வேண்டுமென இறைவனை வேண்டி வாழ்த்துகின்றோம்.

இ.குவேந்திரநாதன் குடும்பத்தினர்.
ராஜா பிளாசா,
கோண்டாவில் கிழக்கு, கோண்டாவில்.

[55737][4.3.7]

# செய்தி

# மைத்திரியின் 100 நாள் வேலைத் திட்டம்



*(முன்னைய தொடர்ச்சி)*

89. அனைத்து கலைஞர்களின் படைப்பை மதிக்கும் மற்றும் சுயாதீனத்துவத்தை பாதுகாக்கும் வேலைத்திட்டத்தை ஆரம்பித்தல்.

90. அனைத்து வெகுசன ஊடகவியலாளர்களின் மற்றும் நிறுவனங்களின் சுதந்திரத்தை பாதுகாக்கும் குறுகிய மற்றும் நீண்டகால வேலைத்திட்டத்தை ஆரம்பித்தல்.

91. கருத்து தெரிவிக்கும் சுதந்திரத்தை பாதுகாத்தல்.

92. நாடாளுமன்ற நிகழ்வுகளை நேரடியாக ஒளிபரப்புச் செய்தல்.

93. சர்வதேச போர்க் குற்றச்சாட்டுக்கு நீதிமன்றம் உருவாக்கிய ரோம் ஒப்பந்தத்துக்கு இலங்கை கையெழுத்து இடாததனால் அவ்வாறான குற்றச்சாட்டுக்கள் ஏற்படு மாயின் அதனை தேசிய சுயாதீன நீதி மன்றத்தின் கீழ் மேற்கொள்ளுதல்.

94. முன்னாள் இராணுவ தளபதி சரத் பொன்சேகா மற்றும் 43 ஆவது பிரதம நீதியரசர் ஷிராணி பண்டார நாயக்க உள்ளிட்ட அரசியல் பழி வாங்கல் மற்றும் தண்டனைக்கு உள்ளானவர்களுக்கு பறிபோன பதவிகள் மற்றும் உரிமைகளை மீண்டும் பெற்றுக் கொடுத்தல்.

95. கௌரவமிக்க வெளிநாட்டு சேவையை மீண்டும் ஸ்தாபித்தல்.

96. தேசிய வனாந்தரமாக பிரகடனப் படுத்தப்பட்டுள்ள வனாந்தரங்களை பாதுகாத்தல் அவற்றின் எல்லைகளைப் பாதுகாத்தல்.

97. அழிவடைந்து வரும் பிரதேசங்களைப் பாதுகாத்தல்.

98. அழிவடைந்து வரும் மற்றும் அழிவடைந்த பிரதேசங்களைப் பாதுகாக்க நவீன விஞ்ஞான முறைமைகளைப் பயன்படுத்தி அவற்றை மீண்டும் புனருத்தாரணம் செய்தல்.

99. மிருக சட்ட மூலத்தை பயமின்றி மற்றும் கட்சிபேதமின்றி கடுமையாக நடைமுறைப்படுத்தல்.

100. அபிவிருத்தி வேலைத்திட்டங்களில் சுற்றாடல் பாதிப்பு தொடர்பாக முன்னுரிமை வழங்குதல்.

உ
சிவமயம்

**திருமண அழைப்பு**

அன்புடையீர்!

நிகழும் மங்களகரமான ஜய வருடம் தைத் திங்கள் 7 ஆம் நாள் (21.01.2015) புதன்கிழமை காலை 10.00 மணி முதல் 11.32 வரையுள்ள அவிட்ட நட்சத்திரமும், சித்தயோகமும் கூடிய சுபமுகூர்த்த வேளையில்

| | |
|---|---|
| எமது கனிஷ்ட புதல்வன் | எமது சிரேஷ்ட புத்திரி |
| திருநிறைசெல்வன் | திருவளர்செல்வி |
| **ஆனந்தகிஷ்ணா** | **ஜனனி** |
| அவர்களுக்கும் | அவர்களுக்கும் |

சென்னை-600 020 அடையார், இந்திரா நகர், 3 ஆவது அவின்யூ, (ஜெயந்தி தியேட்டர் அருகில்) எண்.1/1-இல் அமைந்துள்ள கிங்ஸ் குறொஸ் றெசிடன்சியில் இறைவன் திருவருள் துணைகொண்டு திருமாங்கல்ய தாரணம் செய்ய பெரியோர்கள் நிச்சயித்திருப்பதால் அத்தருணம் தாங்கள் தங்கள் குடும்பசகிதம் வருகை தந்து மணமக்களை ஆசீர்வதித்து அதனைத் தொடர்ந்து நடைபெறும் விருந்துபசாரத்திலும் கலந்து சிறப்பிக்குமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

தங்கள் நல்வரவை நாடும்

| | |
|---|---|
| திரு.திருமதி சிற்றம்பலம் | திரு.திருமதி ஏரம்பமூர்த்தி |
| திரு.திருமதி கோபிகிருஷ்ணா | பன்னாலை, தெல்லிப்பழை, |
| சாந்தபுரி, மயிலனி, சுன்னாகம். | யாழ்ப்பாணம், இலங்கை. |
| யாழ்ப்பாணம், இலங்கை | 0091-44-24513344 |
| 0094-212240848 | 0091-994 0591837 |

இருவீட்டார் அழைப்பு

(55968)(4.3)

சேவை நலன் பாராட்டு



19.01.2015 அன்று தனது 37 வருட ஆசிரிய சேவையில் இருந்து ஓய்வுபெறும் **சண்.வாமதேவன்** (யாழ்.கோண்டாவில் இராமகிருஷ்ண மகா வித்தியாலய அதிபர், விக்னேஸ்வராக்கல்வி நிலைய இயக்குநர்) அதிபர் அவர்களைப் பாராட்டி வாழ்த்துவதோடு, அறுபதாவது பிறந்தநாள் வாழ்த்துக்களையும் தெரிவித்துக்கொள்கின்றோம்.

வாழ்த்துவோர்:
விக்னேஸ்வரா கல்வி நிலைய
ஆசிரியர்கள், மாணவர்கள், கொக்குவில்.

(55964)(4.7)

# செய்திகள்

## கால்கோள் விழாக்கள்

குடத்தனை அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலையில் தரம் ஒன்று மாணவர்களுக்கான கால்கோள்விழா இன்று திங்கட்கிழமை காலை 9 மணிக்குஅதிபர் கிருக நாதன் தலைமையில் நடைபெறவுள்ளது. நிகழ்வுக்குப் பிரதம விருந்தினராக வடமராட்சி கல்வி வலய விஞ்ஞான பாட உதவிக்கல்விப் பணிப்பாளர் திருமதி றோசினி கருணேஸ்வரன் கலந்துகொள்ளவுள்ளார். (வ–35)

★ ★ ★

உடுவின் மான்ஸ் த.க. பாடசாலையின் தரம் 1 மாணவர்களுக்கான கால்கோள் விழா அதிபர் இரா.ஜெயக்குமார் தலைமையில் இன்று திங்கட்கிழமை காலை 9.30 மணிக்கு பாடசாலை மண்டபத்தில் நடைபெறவுள்ளது. (வ)

★ ★ ★

யாழ்ப்பாணம், ஜன.19

நெல்லியடி மெதடிஸ்த மிஷன் தமிழ்க் கலவன் பாடசாலையின் தரம் 1 மாணவர்களுக்கான கால்கோள் விழாவும் தரம் 3 மாணவர்களுக்கான மகிழ்ச்சிகரமான காலை நிகழ்வும் இன்று திங்கட்கிழமை காலை 9 மணிக்கு பாடசாலை மண்டபத்தில் நடைபெறவுள்ளது. (வ–422)

★ ★ ★

அளவெட்டி, ஜன. 19

சுன்னாகம் ஸ்கந்தவரோதய ஆரம்பப் பாடசாலை தரம் 1 மாணவர்களுக்கான கால் கோள் விழா இன்று திங்கட்கிழமை காலை 9.30 மணிக்குகல்லூரியின் வித்துவான் மண்டபத்தில் அதிபர் வ.நந்தீஸ்வரன் தலைமையில்இடம்பெறவுள்ளது. (வ–36)

★ ★ ★

வரணி, ஜன.19

வரணி வடக்கு சைவப்பிரகாச வித்தியாசாலையின் தரம் ஒன்றுக்கான மாணவர்களை வரவேற்கும் கால்கோள் விழா இன்று திங்கட்கிழமை காலை 9 மணிக்கு நடைபெறும். (வ–122)

★ ★ ★

கரணவாய்,ஜன.19

இமையாணன் அ.த.க.வித்தியாலயத்தின் தரம் 1 இற்கு மாணவர்களை சேர்ப்பதற்கான கால்கோள்விழா இன்று திங்கட்கிழமை காலை 9 மணிக்கு இடம்பெறவுள்ளது. (வ–108)

★ ★ ★

நவாலி சென்.பீற்றர்ஸ் றோ.க.த.க. பாடசாலையில் தரம் 1 மாணவர்களுக்கானகால்கோள் விழா இன்று முற்பகல் 10 மணிக்கு நடைபெறும். (வ–108)


**தேவை**
**களஞ்சியப் பொறுப்பாளர் (STORE KEEPER)**

எமது வியாபார நிலையத்துக்கு அனுபவமுள்ள கணினி அறிவுள்ள கல்வித் தகைமையுள்ள களஞ்சியப் பொறுப்பாளர் தேவைப்படுகின்றார்.
விண்ணப்பங்களை ESS JEY ELECTRICALS
9, Stanley Road, Jaffna.
என்ற முகவரிக்கு 31.01.2015 இற்கு முன் அனுப்பி வைக்கவும்.
(55897) (4.3) **T.P: 021 222 2564**



ஓம் ஸ்ரீ ராட்சிஸ்வரர் பிரம்மனே நமஹ
**வண்ணை சிறி காமாட்சி அம்பாள் தேவஸ்தானம்**
**(நாச்சிமார் கோயில்)**
**குருக்கள் தேவை**

மேற்படி ஆலயத்துக்கு பூசை செய்வதற்கு பிரதம குருக்களுடன் கூடிய இரண்டு உதவியாளர்களும் ஒரு மடப்பள்ளி ஐயரும் தேவை. இதற்கு விரும்பும் குருமார்கள் 25.01.2015 ஞாயிற்றுக்கிழமைக்கு முன்னதாக எழுத்துமூலமாக பதிவுத்தபாலில் அல்லது நேரில் ஆலயத்தில் ஒப்படைக்கலாம்.
சம்பளம் பூசை நடைமுறைகள் பற்றிய விவரம் நேரில் பேசித் தீர்க்கப்படும். தர்ம கர்த்தா சபையின் முடிவே இறுதிமுடிவு.
*அன்னையின் சேவையில்*
தலைவர். (5711) (45.3.7) செயலாளர்.



**அறை வாடகைக்கு**

இரு மாணவர்கள் (ஆண்கள்) தங்கியிருக்கக் கூடிய அறை ஒன்று யாழ்.நகர மத்தியில் உண்டு.
தொடர்பு: **077 614 3133**



**செல்லா சினிமா** யாழ்ப்பாணம்



தைப்பொங்கல் வெளியீடு AC / DTS
40அடி அகலம் LED திரையில்
• இப்பொழுது காண்பிக்கப்படுகிறது
டைரக்டர் சங்கரின் பிரமாண்டமான தயாரிப்பில்
சியான் விக்ரம், எமிஜாக்சன் நடிப்பில்
**ஐ**
**காட்சி:**
10.30, 2.30, 6.30, 9.30
முற்றிலும் குளிரூட்டப்பட்டது



**துணவி அரசடிப்பிள்ளையார் கோயில் வட்டுக்கோட்டை**



**மஹா கும்பாபிஷேகப் பெருவிழா**
கிரியைகள் ஆரம்பம்
இன்று (19.01.2015) திங்கட்கிழமை

**எண்ணெய்க்காப்பு**
21.01.2015
புதன்கிழமை காலை 9.30 மணிமுதல் மாலை 5 மணிவரை.

**மஹா கும்பாபிஷேகம்**
22.01.2015
(தைத்திங்கள் 8ஆம் நாள்) வியாழக்கிழமை காலை 8.32 மணிமுதல் 9.42 மணிவரை.

பிரதம குரு
கிரியாதத்வநிதி சிவஸ்ரீ சோம. உமாரமண சிவாச்சாரியார் (நல்லூர்)
அனைவரையும் கலந்துகொண்டு இறையருள் பெறுவதோடு உலக சமாதனத்திற்காகப் பிரார்த்திக்குமாறு அழைக்கின்றோம்.
**ஆலய பரிபாலனசபையினர்**
(சி.19168) (45.3) **துணவி, வட்டுக்கோட்டை.**








**Institute of Junior**

Spoken & Written Elocution (எலக்கியூசன்)
பரீட்சையில் 100 புள்ளிகளை பெற்றவர்களைப் பாராட்டுகிறோம்.



N.பரணிகா K.லிதுசனன் P.கஜானன் R.பாதுஷன் S.கதீசன் K.ஆரபி K.விதுஷன் S.துவாரகன் U.சஸ்மிதா M.அன்பரசன் S.துஷான்



A.தக்ஷன் V.துவேனுஜன் R.தனுஷன்

- Elocution Classes எலக்கியூசன் வகுப்புக்கள் (Spoken & Written)
(5 வயதிலிருந்து 12 வயது வரை.)
- English Classes Gr.1-O/L
- A/L, CBF, AAT
கற்கை நெறிகளுக்கான **கணக்கீடு** தனிப்பட்ட முறையிலும் குழுவாகவும் கற்பிக்கப்படும்.
- 30.01.2015 இக்கு முன் உடன் அனுமதிகளைப் பெற்றுக்கொள்ளவும்.


இல.926, பருத்தித்துறை வீதி, நல்லூர் (சட்டநாதர் கோயில் முன்)
T.P:077 199 9630, 075 425 9346
(55957)(7.4.3)

# உலகச் செய்திகள்

## 11 ஆண்டுகளுக்கு முன் மாயமான விண்கலம் செவ்வாய்க் கிரகத்தில்

வொஷிங்டன், ஜன.19

பிரிட்டன் ஏவிய விண்கலம் ஒன்று 11 ஆண்டுகளுக்கு பின்னர் செவ்வாய்க் கிரகத்தில் கண்டுபிடிக்கப்பட்டுள்ளதாகத் தகவல்கள் தெரிவிக்கின்றன.



2003 ஆம் ஆண்டில் செவ்வாய்க் கிரகத்துக்கு பீகில்–2 என்ற விண்கலத்தை செவ்வாய்க் கிரகத்துக்குப் பிரிட்டன் அனுப்பியது.


இந்த விண்கலம் 2003 ஆம் ஆண்டு டிசெம்பர் 26 ஆம் திகதி திடீரென மாயமானதால் தகவல் கட்டுப்பாட்டு அறைக்கும், பீகில்2 விண்கலத்துக்கும் இடையேயான தொடர்பு துண்டிக்கப்பட்டது.

எனவே, அந்த விண்கலம் என்ன ஆனது என்பது மர்மமாகவே இருந்துள்ளது. எனினும் அந்த விண்கலத்தைத் தேடும் பணி தொடர்ந்து நடைபெற்றுவந்துள்ளது.

தற்போது அந்த விண்கலம் செவ்வாய்க் கிரகத்தில் தரை இறங்கி இருப்பது,நாஸாவின் செவ்வாய்க் கிரக உளவு பார்க்கும் விண்கலம் ஒன்று கண்டுபிடித்து ஒளிப்படம் எடுத்ததன் மூலம் தெரியவந்துள்ளது.

இந்தத் தகவலை பிரிட்டன் விண்வெளிநிறுவனத் தலைவர் டேவிட் பார்கர் கூறியுள்ளார். மேலும், அந்த விண்கலத்துடன் தொடர்பு கொள்ளவோ, அதில் இருந்து தகவல்களையோ பெறமுடியாது என்று விஞ்ஞானிகள் கருத்துத் தெரிவித்துள்ளனர். (வ)

## அம்பலமானது பாகிஸ்தானின் இரகசியத் திட்டம்



இஸ்லாமாபாத், ஜன.19

இரகசியமாக அணு ஆயுதங்களைத் தயாரிக்க பாகிஸ்தான் அணு உலைகளை நிறுவியுள்ளது அம்பலத்துக்கு வந்துள்ளது.

கடந்த 15 ஆம் திகதி செயற்கைக்கோள் மூலம் எடுக்கப்பட்ட ஒளிப்படத்தில் புதிய அணு உலை அமைந்துள்ளதற்கு ஆதாரம் சிக்கியுள்ளது. பாகிஸ்தானின் பஞ்சாப் மாகாணத்தின் குஷாப் மாவட்டத்தில் இருக்கும் அணு உலை வளாகத்தில் புதிய அணு ஆயுத தயாரிப்புக்கான உலைகள் அமைக்கப்பட்டுள்ளன, இந்த 4 ஆவது அணு உலை ஏற்கனவே செயற்படத் தொடங்கியுள்ளதாகக் கூறப்படுகிறது. அணு ஆயுத தயாரிப்பில் பாகிஸ்தான் தீவிரமாக இறங்கியுள்ளது, இதன் மூலம்தெரியவந்துள்ளது.பாகிஸ்தானின் இந்த நடவடிக்கை இந்தியாவில் பதற்றத்தை ஏற்படுத்தும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

அணு ஆயுத பரவல் தடைச் சட்டத்தை வலியுறுத்தி வரும் அமெரிக்க ஜனாதிபதி ஒபாமா அடுத்த வாரம் இந்தியா வர உள்ள நிலையில் இதனை பிரதமர் நரேந்திரமோடி அவரது கவனத்துக்குக் கொண்டு செல்வார் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

குஷாப் மின்நிலையம் 1990 ஆம் ஆண்டு அமைக்கப்பட்டது. ஆரம்பத்தில் அணுமின் உற்பத்திக்கு தேவைப்படும் கடினநீர் உற்பத்தி ஆலை அதில் நிறுவப்பட்டது.

1998 ஆம் ஆண்டு இந்தியாவிலும், பாகிஸ்தானிலும் அணு குண்டுகள் வெடிப்புச் சோதனைகள் நடந்ததற்கு பின்னர் குஷாப் அணுமின் நிலையத்தில் 2000 ஆம் ஆண்டு முதல் மூன்று அணு உலைகள் அமைக்கப்பட்டன.

தற்போது 4 ஆவது உலை செயற்படுவது ஆதாரபூர்வமாகத் தெரியவந்துள்ளது. (வ)

## 2014 மிக வெப்ப ஆண்டு


### விஞ்ஞானிகள் தகவல்

வொஷிங்டன், ஜன.19

2014 ஆம் ஆண்டு, பூமியின் மிகவும் வெப்பமான ஆண்டு என்று நாஸா விஞ்ஞானிகள் தெரிவித்துள்ளனர்.

இதுதொடர்பாக நாஸா மற்றும் பிற அமைப்புகள் நடத்திய ஆய்வில், கடந்த ஆண்டு நிலத்தை விட கடற்பரப்பின் வெப்பநிலை அதிகம்பதிவாகியுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. குறிப்பாக ரஷ்யா, தென் அமெரிக்கா, வட ஆபிரிக்கா, ஆஸ்திரேலியா மற்றும் ஐரோப்பிய நாடுகளில் வெப்ப நிலையின் அளவு வழக்கத்துக்கு மாறாக அதிகளவில் பதிவாகியுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஆண்டின் சராசரி வெப்பநிலை 1 புள்ளி 24 டிகிரி பாரன்ஹைட்டாகவே நீடித்ததாகவும் கடந்த 100 ஆண்டுகளைவிட இது அதிகம் என்றும் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. பசுமை இல்ல வாயுக்களின் வெளியீடே இதற்குக் காரணம் எனவும் இந்த நிலை தொடர்ந்தால் கடுமையான பின்விளைவுகளைச் சந்திக்க நேரிடும் என்றும் விஞ்ஞானிகள் எச்சரித்துள்ளனர். (வ)



## இந்தோனேஷியாவில் 6 பேருக்கு நிறைவேறியது சாவுத் தண்டனை

ஜகார்த்தா, ஜன.19

இந்தோனேஷியாவில் போதைப் பொருள் விவகாரங்களில் குற்றவாளிகளாக தீர்ப்பளிக்கப்பட்ட 6 பேர் மீதான சாவுத் தண்டனை நிறைவேற்றப்பட்டுள்ளது.

துப்பாக்கியால் சுட்டு அவர்களுக்குச் சாவுத் தண்டனை நிறைவேற்றப்பட்டுள்ளது.

அவர்களில் இரு பெண்களும், நான்கு ஆண்களும் அடங்குகிறார்கள்.

பிரேஸில், நெதர்லாந்து, வியட்நாம், மலாவி, நைஜீரியா ஆகிய நாடுகளைச் சேர்ந்த ஐந்து வெளிநாட்டவர்களும் இதில் உள்ளடங்குகிறார்கள்.

தமது பிரஜைகள் மீது கருணை காட்டுமாறு விடுக்கப்பட்ட கோரிக்கையை இந்தோனேஷியா அரசு நிராகரித்ததைத் தொடர்ந்து, அந்த நாட்டுக்கான தமது தூதர்களைப் பிரேஸிலும், நெதர்லாந்தும் திருப்பி அழைத்துள்ளன.(வ)

## ரஷ்யா மீதான பொருளாதாரத் தடை தொடரும்

### - அமெரிக்கா அறிவிப்பு

நியூயோர்க், ஜன.19

உக்ரைன் விவகாரம் தொடர்பாக ரஷ்யா மீதான பொருளாதாரத் தடைகள் தொடரும் என்று அமெரிக்கா மற்றும் பிரிட்டன் நாடுகள் அறிவித்துள்ளன.

இதுகுறித்து வெள்ளை மாளிகையில் கூட்டாகச் செய்தியாளர்களைச் சந்தித்த பிரிட்டன் பிரதமர் டேவிட் கமரூன் மற்றும் ஜனாதிபதி பராக் ஒபாமா உக்ரைன் விவகாரத்தில் ரஷ்யாவின் நிலைப்பாடு மாறும் வரை அந்தநாட்டின் மீதான பொருளாதாரத் தடையைத்தொடர்வது என்றுமுடிவெடுத்துள்ளதாகத் தெரிவித்தனர். (வ)

## மூன்றாம் உலகப் போர் ஆரம்பித்ததாக பாப்பரசர் பெயரில் வெளியான டுவிட்

### அமெரிக்காவில் பரபரப்பு

வொஷிங்டன், ஜன.19

அமெரிக்க பத்திரிகைகளான 'தி நியூயோர்க் போஸ்ட்' இல் ஊடுருவிய ஹேக்கர்கள், மூன்றாம் உலகப் போர் ஆரம்பித்து விட்டதாக பாப்பரசர் பெயரில் டுவீட் செய்து பரபரப்பை ஏற்படுத்தியுள்ளனர்.




பிரபல அமெரிக்க பத்திரிகைகளான 'தி நியூயோர்க் போஸ்ட்' மற்றும் 'யுனைட்டெட் ப்ரெஸ் இன்டர்நஷனல்' ஆகியவைகளின் டுவிட்டர் பக்கங்களில் ஊடுருவிய ஹேக்கர்கள் அதில், பொருளாதாரம் மற்றும் இராணுவம் தொடர்பாகத் தவறான செய்திகளைப் பதிவு செய்தனர்.


தவறான செய்திகள் பரவியதால் வாசகர்கள் மற்றும் பத்திரிகையாளர்கள் மத்தியில் பரபரப்பு ஏற்பட்டது. தங்களது பத்திரிகை ஹேக்கர்களால் அத்து மீறப்பட்டதாக 'தி நியூயோர்க் போஸ்ட்' நிறுவனம் தெரிவித்தது. மூன்றாம் உலகப் போர் தொடங்கி விட்டது என்று பாப்பரசர் தெரிவித்ததாகத் தங்களது டுவிட்டர் பக்கத்தில் ஹேக்கர்கள் தவறான செய்திகளை ஊடுருவி பதிவு செய்துள்ளதாக 'யுனைட்டெட் ப்ரெஸ் இன்டர்நஷனல்' பத்திரிகையும் குறிப்பிட்டுள்ளது.

அதேபோல, அமெரிக்கா மற்றும் சீனக் கடற்படையினர் தங்களது போர்க்கப்பல்களை தென் சீன கடற்பகுதியில் நிறுத்தியுள்ளதாக 'தி நியூயோர்க் போஸ்ட்' இன் அதிகாரபூர்வ டுவிட்டர் பக்கத்தில் ஹேக்கர்கள் குறிப்பிட்டுள்ளனர்.

முன்னதாகக் கடந்த வாரம் அமெரிக்க இராணுவத்தின் மத்திய கட்டளைப் பிரிவின் டுவிட்டர் வலைத்தள பக்கத்தில் அத்து மீறல் நடந்ததும் ஹேக்கிங்குக்கு ஐ.எஸ். தீவிரவாத அமைப்புடன் தொடர்புடையவர்களாக அடையாளம் காட்டிக் கொண்டதும் குறிப்பிடத்தக்கது. (வ)

# வெள்ளத்தால் 176 பேர் சாவு

## மலாவி நாட்டில் துயரம்; 2 லட்சம் மக்கள் இடம்பெயர்வு



பிளான்டியர், ஜன.19

ஆபிரிக்க கண்டத்தில் மொசாம்பிக் நாட்டின் அருகே மலாவி நாடு உள்ளது. இங்கு ஏராளமான கறுப்பின பழங்குடி மக்கள் வசிக்கின்றனர். மலாவி நாட்டில் கடந்த ஒரு மாத காலமாக கனமழை பெய்து வருகிறது. இதனால் டவுன்ரிவர் ஆற்றில் வெள்ளம் கரை புரண்டு ஓடுகிறது. மலாவியின் வர்த்தக தலைநகர் பிளான்டியர், சிக்வாவா உட்பட 12 மாவட்டங்களில் ஊர்களுக்குள் வெள்ளம் புகுந்தது. பல்வேறு பகுதிகளில் மழை வெள்ளத்தில் வீடுகள் அடித்துச் செல்லப்பட்டன. ஆடு, மாடு போன்ற கால்நடைகள் வெள்ளத்தில் அடித்துச் செல்லப்பட்டன.

மழை வெள்ளத்தில் சிக்கி இதுவரை 176 பேர் உயிரிழந்துள்ளனர்.

மேலும், பல்வேறு மாவட்டங்களில் மழை வெள்ளத்தில் சிக்கிய 2 லட்சத்துக்கும் அதிகமான மக்கள் மீட்கப்பட்டு, சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தின் உதவியுடன் பாதுகாப்பான இடங்களில் தங்கவைக்கப்பட்டனர்.

பல்வேறு மாவட்டங்களில் உள்ள சாலைகள் மழை வெள்ளத்தில் அடித்துச் செல்லப்பட்டதால், அந்தப் பகுதியில் ஹெலி மூலம் மீட்புப் பணிகள் நடைபெற்று வருகின்றன. (வ)



## பிரான்ஸுக்கு உதவத் தயார் அமெரிக்கா, பிரிட்டன் உறுதி

வொஷிங்டன், ஜன.19

பிரான்ஸில் நடைபெற்றுவரும் தீவிரவாதத்துக்கு எதிரான தாக்குதல் நடவடிக்கைகளுக்கு உதவத் தயார் என்று அமெரிக்காவும் பிரிட்டனும் தெரிவித்துள்ளன.

பிரான்ஸில் கடந்த இரு வாரங்களாக தொடர்ந்து தீவிரவாத தாக்குதல்கள் நடந்த வண்ணம் உள்ளன.

இந்தத் தாக்குதல்களுக்கு அமெரிக்கா, பிரிட்டன் உட்பட உலக நாடுகள் கடும் கண்டனங்களை வெளியிட்டுள்ளன.

இந்தநிலையில் தீவிரவாதத்துக்கு எதிரான தாக்குதல் நடவடிக்கைகளுக்கு உதவத் தயார் என்று அமெரிக்க ஜனாதிபதி பராக் ஒபாமா தெரிவித்துள்ளார்.

அமெரிக்க ஜனாதிபதி ஒபாமா மற்றும் பிரிட்டன் பிரதமர் டேவிட் கமரூன் கலந்துகொண்ட செய்தியாளர்கள் சந்திப்பில் பேசிய ஒபாமா, கடந்த இரண்டு வாரங்களாகப் பாரிஸில் நடைபெற்ற தாக்குதல்களுக்கு எதிரான நடவடிக்கைகளை பற்றி தீவிரமாக ஆலோசித்தோம்.

இதுதொடர்பாக பிரான்ஸ் நாட்டுக்கு அனைத்து வகையிலும் உதவ இரு நாடுகளும் தயாராக உள்ளன என்று தெரிவித்துள்ளார்.

மேலும், இணையத்தளம் மூலம் நடைபெறும் குற்றங்களைத் தடுக்க அமெரிக்காவும், பிரிட்டனும் கூட்டு ஒப்பந்தம் செய்துள்ளதாகவும், இது தொடர்பாக சைபர் செல் என்ற ஒரு புதிய அமைப்பை உருவாக்க இரு நாடுகளும் திட்டமிட்டுள்ளதாகவும் ஒபாமா தெரிவித்துள்ளார்.

இதற்கிடையே யேமனின் அல்குவைதா தலைவர் நஸிர் பின் அலில் அன்சி வெளியிட்டுள்ள காணொலியில், பாரிஸ் தாக்குதல் முகமது நபியை அவமதித்ததற்காக பழிவாங்கும் செயல்.

இந்த இலக்கை தெரிவு செய்து, தாக்குதல் நடத்தியது சமுதாயத்தினருக்குத் தெளிவுபடுத்துவதற்காகத் தான், இதேபோன்று லண்டன், நியூயோர்க் மற்றும் வொஷிங்டன் நகரங்களும் தாக்குதலுக்கு உள்ளாகும் பட்டியலில் உள்ளன என எச்சரிக்கை விடுத்துள்ளார். (வ)

## யேமன் நாட்டு ஜனாதிபதியின் தலைமை அதிகாரி கடத்தல்

சனா, ஜன.19

யேமன் நாட்டில், அந்தநாட்டு ஜனாதிபதி அப்த்ரபு மன்சூர் ஹாதியின் தலைமை அதிகாரி கடத்தப்பட்டுள்ளார்.

அஹ்மத் ஆவாத் பின் முபாரக் என்ற அந்த அதிகாரியும் அவரது இரண்டு பாதுகாவலர்களும் நேற்றுமுன்தினம் காலையில் கடத்தப்பட்டனர். தலைநகர் சனாவின் மையப் பகுதியில் இந்தச் சம்பவம் நடைபெற்றது.

ஷியா ஹௌதி என்ற கலகக் குழுவினர்தான் இந்தக் கடத்தலில் ஈடுபட்டிருக்கக் கூடும் என்று யேமன் அதிகாரிகள் கருதுகின்றனர். தலைநகரின் பெரும் பகுதி அவர்களது கட்டுப்பாட்டில்தான் இருந்து வருகிறது.



2011ஆம் ஆண்டில் அப்போதைய அலி அப்துல்லா சலேவுக்கு எதிராக மக்கள் திரண்டெழுந்து நடத்திய போராட்டத்தின் முடிவில் அவர் பதவியிலிருந்து கீழிறங்கினார். அப்போதிலிருந்து ஏமனில் ஸ்திரமான அரசு இல்லை.

ஹௌதிகளுக்கும் சன்னி கலகக் குழுவினருக்கும் இடையில் நடக்கும் மோதலில் பலபொதுமக்கள் கொல்லப்பட்டு வருகின்றனர்.

ஜனாதிபதியுடனான சந்திப்பின் போது, புதிய அரசியல் சாஸன வரைவு ஒன்றை பின் முபாரக் கொடுக்கவிருந்தார் என்றும்– அதைத் தடுப்பதற்காகவே ஹௌதிக்கள் அவரைக் கடத்தியிருக்கலாம் என்றும் சிலர் கூறியதாக ரொய்ட்டர் செய்தி நிறுவனம் கூறியுள்ளது.

கடந்த ஆண்டு முபாரக்கை பிரதமராக நியமிக்க முயற்சிகள் நடைபெற்றபோது, கலகப்படையினர் அதனைத் தடுத்து நிறுத்தினர்.

புதிய அரசியல் சாசனப்படி, யேமன், மத்திய அரசால் கட்டுப்படுத்தப்படும் பிராந்தியங்களாகப் பிரிக்கப்படும். இதனை ஹௌதிக்களும் தென்பகுதி பிரிவினைவாதிகளும் எதிர்த்து வருகின்றனர். ஈரானின் கைப்பாவையாக கலகக்காரர்கள் செயற்படுவதாக விமர்சனங்கள் முன்வைக்கப்பட்டாலும், அவர்கள் அதனை மறுத்துவருகின்றனர்.

பிரான்ஸில்சார்லிஹெப்டோ அலுவலகம் மீது நடத்தப்பட்ட தாக்குதலைத் திட்டமிட்டு, நிதியுதவி அளித்தது தாங்கள் தான் என யேமனின் அல்குவைதா பிரிவு ஒருகாணொலியை வெளியிட்டது. ஆனால், ஆதாரம் எதையும் அவர்கள் வெளியிடவில்லை. (வ)

## வீதியில் பிணங்களைக் குவித்து மக்களை மிரள வைத்த ஐ.எஸ்.

டமஸ்கஸ், ஜன. 19

சிரியாவில் 15 பேரைக் கொன்று ஐ.எஸ்.ஐ.எஸ். தீவிரவாத அமைப்பு அவர்களின் சடலங்களை வீதியில் மக்களின் பார்வைக்கு வைத்துள்ள சம்பவம் அனைவரையும் பீதியில் ஆழ்த்தியுள்ளது. ஈராக் மற்றும் சிரியாவின் பல்வேறு பகுதிகளைக் கைப்பற்றி தனி இஸ்லாமிய தேசத்தை உருவாக்கிய ஐ.எஸ். ஐ.எஸ். தொடர்ந்து பல அட்டூழியங்களை அரங்கேற்றி வருகிறது.

இந்த நிலையில் கடந்த 24 மணி நேரத்தில் கிழக்கு சிரியாவில் உள்ள டெல் அல் எஷாயுர், ரக்கா உள்ளிட்ட நகரங்களில் 15 பேரை சுட்டுக் கொன்றனர்.

மேலும், ஈராக்கில் ஓரினச்சேர்க்கையில் ஈடுபட்ட இருவரை மொசூல் நகரில் உள்ள உயர்ந்த கட்டடத்திலிருந்து கீழே தள்ளி அந்த ஒளிப்படங்களை இணையத்தளத்தில் வெளியிட்டுள்ளனர். (வ)



# பல்சுவை

## சுடோக்கு
### எண் விளையாட்டு

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | 7 | | 9 | 4 | | | 3 | 1 |
| | 9 | 4 | | | 8 | | 7 | |
| 6 | 3 | | 5 | | | | 4 | |
| | | 3 | | 1 | | 9 | 8 | 7 |
| | | | | | | | | |
| 7 | 4 | 8 | | 9 | | 5 | | |
| | 8 | | | | 7 | | 6 | 3 |
| | 6 | | 8 | | | 7 | 5 | |
| 3 | 5 | | | 2 | 4 | | 9 | |

சுடோக்கு ஒரு எண் விளையாட்டு. தர்க்க ரீதி யான ஒழுங்கு படுத்தல் தான் இதன் அடிப்படை. 1-9 வரையான எண்களை ஒழுங்குபடுத்தி ஒரே கோலத்தை ஏற்படுத்த வேண்டும். இந்தப் பெட்டி 9 நிரல்களையும் 9 நிரைகளையும் கொண்டது. 3X3ஆக உள்ளேயும் 3 நிரல்களையும் 3 நிரை களையும் கொண்டிருக்கிறது. (உள்ளே இருப்பவற்றை பெட்டிகள், கட்டங்கள், பகுதிகள், உப சதுரங்கள் என்றும் அழைக்கிறார்கள்). இந்த ஒவ்வொரு நிரையிலும் நிரலிலும் 1-9 வரையான எண் கள், இரண்டு தடவைகள் (மீண்டும் மீண் டும்) வராது நிரப்பப்பட வேண்டும். அவ்வாறு நிரப்பப்படுகையில் உள் பெட்டிகளுக்குள்ளும் அவ்வாறே 1-9 இலக்கங்கள் இரட்டைப்படாமல் வரவேண்டும். சில கட்டங்கள் ஏற்கனவே நிரப் பப்பட்டிருக்கும் தர்க்கரீதியில் ஏனையவற்றை நிரப்ப வேண்டியதே வேலை. சுடோக்கு என்பது ஜப்பானியச் சொல். அதன் பொருள் தனி எண் என்பதாகும். 1986 இல் ஜப்பானிய நிறுவன நிகோலி இதனை அறி முகப்படுத்தி வெற்றிகரமாக பரவலாக்கியது. 2005இல் இது உலக அளவில் பிரபல்யமானது.

### நேற்றைய சுடோக்கின் விடை

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 3 | 9 | 2 | 7 | 8 | 4 | 6 | 1 | 5 |
| 4 | 7 | 6 | 1 | 5 | 2 | 3 | 8 | 9 |
| 5 | 1 | 8 | 6 | 3 | 9 | 4 | 2 | 7 |
| 7 | 2 | 5 | 8 | 4 | 6 | 9 | 3 | 1 |
| 9 | 8 | 1 | 3 | 7 | 5 | 2 | 4 | 6 |
| 6 | 3 | 4 | 2 | 9 | 1 | 5 | 7 | 8 |
| 2 | 6 | 9 | 4 | 1 | 7 | 8 | 5 | 3 |
| 1 | 4 | 3 | 5 | 6 | 8 | 7 | 9 | 2 |
| 8 | 5 | 7 | 9 | 2 | 3 | 1 | 6 | 4 |

## நாளை 2015

**தை- 06 செவ்வாய்க்கிழமை**

**20.01.2015**

திதி: அமாவாசை மு.இ.7:58 மணி வரை
நட்சத்திரம்: உத்தராடம் பி.இ.02.42மணிவரை
சுபநேரம்: 11.05-12.36 மணி வரை
இராகுகாலம்: 03.35-05.05 மணி வரை



## கடலுணவுகளின் நேற்றைய நிலைவரம்

| | யாழ்ப் பாணம் | மாதகல் | கிளிநொச்சி | பருத்தித் துறை | சாவகச்சேரி | மன்னார் |
|---|---|---|---|---|---|---|
| இறால் | 600 | 580 | 800 | 700 | 600 | 600 |
| நண்டு | 250 | 320 | 300 | 300 | 200 | 550 |
| கணவாய் | 450 | – | 500 | 500 | 400 | 500 |
| பாரை | 500 | 330 | 500 | 450 | 500 | 450 |
| சுறா | 500 | – | 600 | 550 | 600 | 500 |
| சீலா | 300 | – | 300 | 400 | 300 | 400 |
| விளை | 450 | 300 | 400 | 500 | 300 | 400 |
| முரல் | 250 | -- | 350 | 300 | 250 | 300 |
| கும்பிளா | 400 | 250 | 300 | 500 | 300 | 300 |
| கிழாக்கன் | 250 | – | 400 | 400 | 300 | 500 |
| ஓரா | 280 | – | 400 | 350 | 300 | 300 |
| திரளி | 200 | – | 240 | 200 | 100 | 250 |
| நகரை | 200 | 200 | 240 | 300 | 100 | 250 |
| சூடை | 150 | 60 | 120 | 120 | 100 | 150 |
| ஒட்டி | 300 | 220 | 250 | 150 | 100 | 150 |
| திருக்கை | 120 | 120 | 280 | 180 | 200 | 300 |
| பாலை | 450 | – | 300 | 400 | 250 | 250 |
| வாழை | 150 | 150 | 200 | 300 | – | 200 |
| கொய் | 120 | – | 120 | 100 | 50 | 150 |
| மதனம் | 150 | 100 | 160 | 250 | 120 | 250 |

விவேகானந்தர் சிந்தனையில் இருந்து....



## உன்னைப் பற்றியே சிந்திக்காதே!

சமநிலையில் இருந்து பிறழாத வன், மன சாந்தமுடையவன், இரக்கமும், கருணையும் கொண் டவன் ஆகியோர் நல்ல பணிகளை மட்டும் வாழ்வில் செய்ய முற் படு வர். அதன்மூலம் அவன் தனக்கே நன்மையைத்தேடிக்கொள்கிறான். தீமையைச் செய்வதால், எமக்கு நாமே தீமை செய்கிறோம். நன் மையைச்செய்வதால்எமக்குநாமே நன்மை தேடிக் கொண்டவர்களா கிறோம். சித்தாந்தங்களையும், தத்துவங்களையும்தெரிந்து கொள் வதால் என்ன நன்மை விளை யப்போகிறது! நல்ல்வர்களாக வாழுங்கள். மற்றவர்களுக்கு நன்மை செய்து வாழ்வைப் பய னுடைய தாக்குங்கள்.

சுயநல எண்ணம் சிறிதும் இல்லா மல், பணம், புகழ் என்னும் எதிர் பார்ப்பு வைக்காமல் பிறருக்கு நன்மை செய்யவேண்டும் என்ப தற்காகவே ஒருவன் தொண்டு செய்தால், உலகத்தையே மாற்றி அமைக்கும் சக்தி அவனிடமி ருந்து வெளிப்படும்.

எம்மைப் பற்றியே சிந்தித்துக் கொண்டே இருப்பது சுயநலங் களிலேயே மிகப்பெரிய பாவமா கும். சுயநலஎண்ணம் எவ்வளவு குறைகிறதோ அந்த அளவுக்கு ஒரு வன் கடவுளை நெருங்க முடியும்.



## மரக்கறிகளின் நேற்றைய நிலைவரம்

| | மருதனார் மடம் | சாவகச்சேரி | சுன்னாகம் | நெல்லியடி | திருநெல் வேலி | கிளிநொச்சி | வவுனியா |
|---|---|---|---|---|---|---|---|
| முள்ளங்கி | 50 | 100 | 60 | 100 | 80 | 140 | 100 |
| கத்தரி | 300 | 320 | 280 | 200 | 280 | 280 | 200 |
| கரட் | 200 | 240 | 150 | 200 | 200 | 280 | 350 |
| மரவள்ளி | 40 | 60 | 50 | 60 | 50 | 50 | 40 |
| பயிற்றை | 250 | 240 | 260 | 200 | 220 | 180 | 200 |
| பாகல் | 350 | 280 | 300 | 200 | 320 | 300 | 200 |
| கருணைக்கிழங்கு | 50 | 80 | 50 | 80 | 60 | 90 | 50 |
| பெ.வெங்காயம் | 220 | 120 | 120 | 100 | 80 | 120 | 100 |
| சி.வெங்காயம் | 50 | 120 | 100 | 100 | 80 | 110 | 120 |
| பூசணி | 40 | 60 | 40 | 50 | 40 | 80 | 40 |
| தக்காளி | 120 | 240 | 200 | 200 | 200 | 200 | 200 |
| வாழைக்காய் | 80 | 120 | 70 | 100 | 90 | 120 | 90 |
| கீரை | 15 | 20 | 25 | 20 | 20 | 50 | 40 |
| பொன்னாங்காணி | 30 | – | 40 | 50 | 25 | 30 | 15 |
| மிளகாய் | 800 | 800 | 600 | 700 | 750 | 1000 | 750 |
| புடோல் | 120 | 140 | 120 | 120 | 140 | 120 | 150 |
| கோவா | 150 | 160 | 120 | 180 | 140 | 200 | 160 |
| வெண்டி | 200 | 160 | 160 | 140 | 160 | 140 | 160 |
| போஞ்சி | 280 | 320 | 320 | 280 | 280 | 280 | 200 |
| லீக்ஸ் | 300 | – | 280 | 300 | 360 | 400 | 350 |
| தேங்காய் | 50 | 45 | 60 | 50 | 35 | 40 | 45 |
| உருளைக்கிழங்கு | 80 | 80 | 80 | 100 | 65 | 100 | 80 |
| தேசிக்காய் | 60 | 80 | 80 | 80 | 60 | 60 | 30 |
| வல்லாரை | 20 | 20 | 20 | 20 | 30 | 20 | 15 |
| கறிமிளகாய் | 300 | – | 350 | 300 | 280 | 320 | 400 |
| இராசவள்ளி | 120 | 140 | 100 | 150 | 110 | 140 | 80 |
| பனங்கிழங்கு | 04 | 03 | 05 | 05 | 04 | 05 | 04 |
| முருங்கைக் காய் | 600 | – | – | – | 1000 | – | 600 |

## உடல் எடையை குறைக்க போறீங்களா?



இன்றைய காலகட்டத்தில் உடல் எடையை குறைப்பதற்காக அல் லல்படும் நபர்கள் ஏராளம். துரித உணவுகள், எண்ணெய் பண்டங்களை சாப்பிட்டு உடல் பெருத்துவிட்டு, பிறகு வருத்தப் படுகின்றனர். ஆனால் சரியாக உடற்பயிற்சி செய்பவர் கள் சில நேரங்கள் உணர்ச்சி வசப்பட்டு செய்யும் சில தவறுகளால் பக்கவிளைவுகளை சந்திக் கின்றனர். உடல் எடையைக் குறைக்கவுள்ளவர்கள், காய் கறிகளை விரும்புவதில்லை..

எடைக் குறைப்பின் போது, காய்கறிகள் தான் நம் உடலில் ஒரு சமநிலையை ஏற்படுத்திக் கொடுக்கின்றன. மேலும் பல காய்கறிகளில் நார்ச்சத்துக்கள் அதிகம் இருப் பதால், எடைக் குறைப்பிற்கு அவை பெரிதும் உதவுகின் றன. ஒவ்வொரு மனிதனும் சாதாரணமாக ஒரு நாளுக் குக் குறைந்தது ஆறு மணி நேரம் தூங்கியே ஆக வேண் டும். தலை முதல் கால் வரை அனைத்து உறுப்புக ளுக்கும் இந்த ஆறு மணி நேர ஓய்வு என்பது அவசி யம். இதைச் சரியாகக் கடைப் பிடிக்க வில்லை என்றால், உடல் எடைக் குறைப்பிற்கான பல விடயங்கள் அடிபட்டுவிடும்.



## இதோ அருமையான மருந்து!

சாப்பிட்ட கொஞ்ச நேரத்தில் வயிறு வீங்கிக் கொள்கிறதே என்று பலரும் வருத்தப்படுவதுண்டு. இதற்கு சீரகம் ஒரு அருமையான மருந்து. சீரகம், ஏலம் இதனை நன்கு இளம் சூட்டில் வறுத்துப் பொடி செய்து உணவிற்குப் பின் சாப்பிட பிரச்சினைகள் தீரும். அடிக்கடி அஜீரணக் கோளாறு இருந்தால் இனி வீட்டில் சாதாரணத் தண்ணீருக்குப் பதில் உணவருந்துகையில் இளஞ்சூட்டில் சீரகத்தண்ணீர் அருந்துங்கள். சீரகத்தை வாயில் போட்டு குளிர்ந்த தண்ணீரை குடித்தால் தலைச்சுற்றல், மயக்கம் நீங்கி விடும். சீரகப் பொடியை வெண்ணெ யில் குழைத்து சாப்பிட எரிச்சலுடன் கூடிய அல்சர் நோய் தீரும்.




சுக்கிரனில் சுக்கிரன் சேர முழு சுக்கிர ஆதிக்கமாகும். இவர்கள் சராசரி உயரமுடையவர்கள். சுருள் முடி அதிகமாக இருக்கும்.

காரிய வெற்றிக்காக தெய்வ வணக்கம் செய்வர். வெகுளித்தனமாக இருப்பர். சிறந்த புத்திசாலி. எதையும் எளிதாகப் பயின்று விடுவர். நல்ல நகைச்சுவையிருக்கும். சொந்த அறிவில் வாழுவர். தாமே எதையும் செய்து சாதிக்க விரும்புவர். புலன்களை நல்ல கூர்மையுடன் வைத்திருப்பர். பார்க்க இனிய தோற்றத்துடன் விளங்குவர். வைராக்கியம் உள்ளவர். உண்மையாக காதலிப்பர். சிலர் தனியாகவே வாழுவர். எதையும் முழுச் சிறப்புடன் முடிப்பர். பிறரைவிட நன்றாக செய்து பாராட்டு பெறும் குணம் கொண்டவர்கள். வசதிமிக்க வாழ்வு பெற அற்புத சாதனை புரிய இடைவிடாது முயலுவர். எதிரிகளை வீழ்த்திடுவர்.

## கூட்டெண் பலன்கள் 6-6

செல்வக் குடும்பத்தில் பிறந்தும் செல்லமாக வளர்வர். நல்ல கல்வியும் நல்லோர் பழக்கமும் உண்டு. காதல் உணர்வு ஏற்படும் ஆனால் வெற்றி பெறாது. பெயர் எண் இவர்களை அதிகம் பாதிக்குமாதலால் அதன்படி சில மாறுதலேற்படலாம்.

எடுத்துக்கொண்ட தொழிலில் உழைத்து மேலதிகாரிகளிடம் நற்பெயர் பெற்று முன்னேறுவர். கலை, கலை சார்ந்த தொழில்கள் கை கொடுக்கும். ஆடை தைப்பவர், ஜவுளிக் கடை, நவரத்தினக் கற்கள் வியாபாரம், விடுதியில் உயர் வேலை, சினிமா கலைஞர் பணி கிடைக்கும்.

உஷ்ணம் தொடர்பான நோய்கள் தாக்கக் கூடும். நீரிழிவு நோய், இரத்த அழுத்தம், வயிற்று வலி, மூலம், கண் நோய், இதயப் பாதிப்பு வர வாய்ப்புண்டு.

நல்ல உயரமான தோற்றம் உடையவர். சக்கிரனுடன் கேது சேர்ந்த ஆதிக்கம் இவருக்கு வரும். கவிதை புனையும் திறமை உண்டு. இறை பக்தி இருக்கும். பிரமிக்கும் படியான பேச்சிருக்கும். பணிவான பேச்சு உடையவர். நல்ல குடும்பத்தில் நல்ல சூழ்நிலையில் பிறந்திருப்பர்.

தூய மனிதர். எளிமையான ஆடைகளே அணிவர். காதல் விவகாரம் சிறு வயதிலேயே ஏற்படும். வெற்றி பெறாது. துக்கத்தை உள்ளத்திலே வெகுநாள் வைத்திருப்பர். பொதுவாகக் கலகலப்பானவர். நண்பர்களை பெரிதும் விரும்புவர்.

வாழ்க்கையில் 34 வயதில் திடீர் மாறுதல் ஏற்படும். வாழ்வில் ஏதாவது துக்கம் இடம்பெறும். பிரார்த்தனை, தியானம் போன்ற பயிற்சிகளில் ஈடுபடுவர். பிறர் இவர்களைஅதிஷ்டகரமானவராக உல்லாசமானவராக நினைக்கும்போது தனிமையை விரும்பும்தத்துவசிந்தனையை அடைந்திடுவர்.


அதிகம் சம்பாதிக்கக் கூடிய இவர்கள் குடும்பத்தில் எல்லோரையும் மகிழ்வாக இருக்கும்படி செய்வர். அனைவரையும் நேசிப்பர். நல்ல வாழ்க்கை துணை அமையும். அமைதியாகவே வாழ்க்கை நடக்கும். கலைசார்ந்த தொழிலில்செல்ல விரும்புவர். எழுத்துத் திறமையும், பேச்சுத் திறமையும் இருக்கும். சிலர் நல்ல நடனக் காரராக இருப்பர்.

## கூட்டெண் பலன்கள் 6-7

கலை என இன்றி எத்தொழிலானாலும் அசாத்தியத் திறமை பெற்றிருப்பர். சினிமா, நாடகம், தொலைக்காட்சிகளில் எழுத்தாளராக, பாடலாசிரியராக, வசன கர்த்தாவாக இருப்பர்.

வெப்பம் மிக உண்டாகும் நோயால் பாதிக்கப்படுவர். வாதம் பாதிக்கும் வாய்ப்பு அதிகம். மூட்டு வலி, முதுகு வலி போன்ற நோய்கள் வரும். நீரிழிவு, மூச்சுக் கோளாறு, இதயபாதிப்பு ஏற்படலாம்.



# கணவனிடம் மனைவி எதிர்பார்ப்பது என்ன?

1. அன்பாக, பிரியமாக இருக்க வேண்டும்.
2. மனது புண்படும்படி பேசக் கூடாது.
3. கோபப்படக்கூடாது.
4. சாப்பாட்டில் குறை சொல்லக் கூடாது
5. பலர் முன் திட்டக்கூடாது.
6. எந்த இடத்திலும் மனைவியை விட்டுக் கொடுக்கக் கூடாது.
7. முக்கிய விழாக்களுக்கு சேர்ந்து போக வேண்டும்.
8. மனைவியிடம் கலந்து ஆலோசிக்க வேண்டும்.
9. சொல்வதைப் பொறுமையாகக் கேட்க வேண்டும்
10. மனைவியின் கருத்தை ஆதரிக்க வேண்டும், மதிக்க வேண்டும்.
11. வித்தியாசமாக ஏதாவது செய்தால் ரசிக்க வேண்டும். பாராட்ட வேண்டும்.
12. பணம் மட்டும் குறிக்கோள் அல்ல. குழந்தை, குடும்பம் இவற்றுக்கும் உரிய முக்கியத்துவம் தந்து நடந்து கொள்ள வேண்டும்.
13. வாரம் ஒரு முறையாவது. மனம் விட்டுப் பேச வேண்டும்.
14. மாதம் ஒரு முறையாவது வெளியில் அழைத்துச் செல்ல வேண்டும்.
15. ஆண்டுக்கு ஒரு முறையாவது சுற்றுலா செல்ல வேண்டும்.
16. பிள்ளைகளின் படிப்பைப் பற்றி அக்கறையுடன் கேட்க வேண்டும்.
17. ஒளிவு மறைவு கூடாது.
18. மனைவியை நம்ப வேண்டும்.
19. முக்கிய மானவற்றை மனைவியிடம் கூற வேண்டும்.
20. மனைவியிடம் அடுத்த பெண்ணைப் பாராட்டக் கூடாது.
21. அடுத்தவர் மனைவி அழகாக இருக்கிறாள் என்று எண்ணாமல் தனக்குக் கிடைத்தவளையிட்டு சந்தோஷப்பட வேண்டும்.
22. தனக்கு இருக்கும் கஷ்டம் தன் மனைவிக்கும் இருக்கும் என்று எண்ண வேண்டும்.
23. உடல் நலமில்லாத போது உடனிருந்து கவனிக்க வேண்டும்.
24. சின்ன, சின்னத் தேவைகளை நிறைவு செய்ய வேண்டும்.
25. சிறு சிறு உதவிகள் செய்ய வேண்டும்.
26. குழந்தைகள் அசிங்கம் செய்து விட்டால் 'இது உன் குழந்தை' என்று ஒதுங்கக் கூடாது.
27. அம்மாவிடம் காட்டும் பாசத்தை, மனைவியிடமும் காட்ட வேண்டும். ஏனென்றால் மனம் சலிக்காமல் அம்மாவை விட; அக்கா, தங்கையை விட அதிகமாக கவனிக்க கூடியவள் மனைவி.
28. நேரத்திற்குச் சாப்பிட வேண்டும்.
29. சாப்பாடு வேண்டுமென்றால் முன் கூட்டியே சொல்ல வேண்டும்.
30. எங்கு சென்றாலும் மனைவியிடம் சொல்லி விட்டுச் செல்ல வேண்டும்.
31. சொன்ன நேரத்திற்கு வர வேண்டும்.
32. எப்போதும் வீட்டு நினைப்பு வேண்டும்.
33. மனைவியின் பிறந்த நாள் தெரிய வேண்டும்.
34. மனைவிக்குப் பிடித்தவற்றைத் தெரிந்து வைத்திருக்க வேண்டும்.
35. பொய், சூது, மது, மாது போன்ற தீய பழக்கங்கள் கூடாது.
36. மனைவி வீட்டாரைக் குறை சொல்லக் கூடாது.
37. கைச் செலவுக்கு பணம் தர வேண்டும்.

# செய்தி

## முதியோர் சங்க நிர்வாகிகள் தெரிவும் முதியோர் கௌரவிப்பும்

அளவெட்டி, ஜன.19

அளவெட்டி மேற்கு ஜே/219 கிராமசேவையாளர் எல்லைக்கு உட்பட்ட முதியோர் சங்க நடப்பு வருட நிர்வாகிகள் தெரிவும் முதியோர் கௌரவிப்பு நிகழ்வும் கடந்த 10ஆம் திகதி அளவெட்டி தெற்கு கிராம சேவையாளர் அலுவலகத்தில் தலைவர் சே.இராசரத்தினம் தலைமையில் நடைபெற்றது.

இதில் தலைவர், செயலாளர், பொருளாளர் ஆகியோரை மீண்டும் கடந்த நிர்வாகத்தில் இருந்தவர்களான தலைவர் இராசரத்தினம், செயலாளர் வை.சின்னப்பு, பொருளாளர் சி.பாலசிங்கம் ஆகியோரும் – நிர்வாக உறுப்பினர்கள் 9 பேரும் தெரிவு செய்யப்பட்டனர். அதன் புதிய நிர்வாகத்தின் முதல் செயற்பாடாக இந்தச் சங்க எல்லைக்குட்பட்ட மிகவும் கஷ்ட நிலையிலும் – ஆதரவு அற்றவர்களும், கணவனை இழந்தோருக்கும் உதவி வழங்குவது என்ற தீர்மானத்துக்கமைய இவ்வாறான நிலைகளில் இனங்காணப்பட்ட 31 முதியவர்கள் 60,70 வயதுக்குமேற்பட்டவர்களுக்குபொங்கல் பரிசாக தலா 500 ரூபா வீதம் 31 பேருக்கு வழங்கிக் கௌரவிக்கப்பட்டனர்.

அவர்களுக்கான இந்த நிதியை அதே ஊரைச் சேர்ந்தவரும் சமூக சிந்தனையும் கொண்ட பெயர்குறிப்பிடவிரும்பாதபெண் மணி ஒருவர் வழங் கியதாகவும், இவ்வாறான பொங்கல் பரிசு வழங்கிக் கௌரவிக்கும் நிகழ்வை வருடந்தோறும் செய்ய உள்ளதாகவும் சங்கச் செயலாளர் வை.சின்னப்பு தெரிவித்தார். (வ–36)

## கும்பாபிஷேகம்

சாவகச்சேரி புராதன வாரியப்பர் சிவன் ஆலயத்தில் ஸ்ரீதேவி, பூமாதேவி சமேத ஸ்ரீரங்கநாத அனந்த சயனப் பெருமாள் பிரதிஷ்டா மகா கும்பாபிஷேகம் நாளை மறுதினம் புதன்கிழமை மு.ப.11 மணிக்கு இடம்பெறும். கும்பாபிஷேக கிரியைகள் நேற்று ஆரம்பமாகியுள்ளன.

அடியார்கள் எண்ணெய்க் காப்பு சாத்தும் நிகழ்வு இன்று இடம் பெறும். நாளை சுதர்சன மகா யாகஹோமமும் மாலை யாக வழிபாடும் இடம்பெறும். (வ–9)

---

### கண்ணீர் அஞ்சலி



**அமரர் லோகநாதன் கஜேந்திரன்**

**அன்னை மடியில்** : 15.09.1987
**ஆண்டவன் அடியில்** : 18.01.2015

பூமியிலே புகலிடமாய் மலர்ந்தாய்
என்றும் சிரித்த முகத்துடன் திட்டங்கள் வகுத்து
திடமாக வாழ்வதற்கு முன் இடையினிலே
திசை மாறிப் போனது ஐயா உன் வாழ்க்கை

**உன் பிரிவால் துயருறும்,**
**ரோயல் வைன் ஸ்ரோர்ஸ், சிற்றி வைன் ஸ்ரோர்ஸ், நிருத்திகா ஜுவெல்லறி**
**உரிமையாளர், முகாமையாளர்கள், ஊழியர்கள்**

(55967)

---

### துன்பத்தில் பங்கு கொள்கின்றேன்



காரைநகர், விளானைப் பிறப்பிடமாகவும் இல. 78, அரசடி வீதி, யாழ்ப்பாணத்தை வசிப்பிடமாகவும் கொண்ட எனது நண்பன்

**சிவகுமாரின்**

தந்தையும், அநீதியைக் கண்டு பொங்கி எழும் கௌரவமான நற்பண்பாளருமான

**அமரர் கந்தையா சோமசுந்தரம்**

பொதுச் சுகாதார பரிசோதகர், *A.R.S.H (LONDON)*

அவர்களது மறைவினால் துயருறும் அன்னாரது குடும்பத்தினருக்கு எனது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக் கொள்வதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடைய காரைநகர் ஈழத்துச் சிதம்பரத்தில் குடிகொண்டிருக்கும் ஆண்டி கேணி ஐயனாரை வேண்டி நிற்கின்றேன்

**கலாநிதி 'லயன்' கனகசபை சுந்தரலிங்கம்**
**சமாதான நீதிவான் (காரை மணிகண்டன்)**

(55953)

---

### கண்ணீர் அஞ்சலி



நல்லூர் பிரதேச செயலகத்தில்
கடமையாற்றும் கிராம அலுவலர் (J/120)
**சி.பன்னீர்ச்செல்வம்**
அவர்களின் அன்புத் தாயாரும் பிரதேச
செயலர் **செந்தில் நந்தனன்**
அவர்களின் பேர்த்தியாருமான

**கனகாம்பிகை சிவசிவாபிள்ளை**

அவர்கள் கடந்த 16.01.2015 (வெள்ளிக்கிழமை) இயற்கை எய்தியுள்ளார். அன்னாரின் ஆத்மா சாந்தியடையப் பிராத்திக்கின்றோம். ஓம் சாந்தி சாந்தி சாந்தி!

**உத்தியோகத்தர் நலன்புரிச் சங்கம்**
**பிரதேச செயலகம், நல்லூர்.**

(55876

---

### ஐந்தாம் ஆண்டு நினைவுப் பூர்த்தி



**சண்முகம் இரத்தினம்**

ஸ்தாபகர், வதனி ஜுவலறி (கொடிகாமம்)
திதி: மாசி மாத பூர்வபக்க தசமி

அன்னை மடியில் 19.01.1917
ஆண்டவன் மடியில் 23.02.2010



**சண்முகலிங்கம் லதுர்ஜிகாந்**

உரிமையாளர், வதனி ஜுவலறி (கொடிகாமம்)
திதி: தைமாத அபரபக்க சதுர்த்தசி

அன்னை மடியில் 16.08.1976
ஆண்டவன் மடியில் 14.01.2010

எம் ஈரவிழிகள் காயுமுன்பே ஐந்தாண்டுகள்
ஆனதுவோ? உயிர்தான் மறைந்தது உங்களின்
நினைவுகள் என்றும் மறைந்திடுமோ? போகும் எத்
திசையிலும் உங்களின் உருவங்கள் தோன்றி
மறைகின்றன என்றென்றும் உங்களின் நினைவுகள்
எம் சிந்தனையில் வாழ்ந்திடும்.

வதனி ஜீவல்லறி
(சாவகச்சேரி.கொடிகாமம்)
பொற்தொழிலாளர் வீதி
சங்கத்தானை சாவகச்சேரி

தங்கள் பிரிவால் துயருறும்
குடும்பத்தினர்

---

### ஆறாத்துயரில் எமைவிட்டுப் பிரிந்த எம் தாய், தந்தையரை இந்நாளில் நினைவு கூருகின்றோம்.

**முதலாம் ஆண்டில்**



அமரர்
செல்லத்துரை
**சின்னராசா**

மலர்வு 27.11.1930
உதிர்வு 29.01.2014

திதி – சதுர்த்தசி (19.01.2015)

ஆண்டொன்று, இரண்டு ஆகியதே
எமை நீங்கள் விட்டுப் பிரிந்து
ஒன்றுடன் இரண்டாய்
இருவரையும் இழந்து விட்டோம்
இவையெல்லாம் நேற்று
நடந்ததுபோல் உள்ளதே
எம் மனக்கண்ணிலிருந்து
உங்கள் இருவரின் நினைவுகள்
என்றுமே அழியாது
எங்கள் விழிகளில்
உங்கள் நினைவுகள்
கண்ணீரை வரவழைக்கின்றது.
உங்கள் நினைவுகளுடன்
குடும்பத்தினர்.

சின்னத்தம்பி புலவர் வீதி, சிவகாமி அம்மன் கோயிலடி,
இணுவில் கிழக்கு, இணுவில்.

**இரண்டாம் ஆண்டில்**



அமரர்
சின்னராசா
**செல்வமணி**
(சிவமணி)

மலர்வு 10.04.1940
உதிர்வு 27.03.2013

திதி – பூரணை

---

### ஏழாம் ஆண்டு நினைவஞ்சலி



மலர்வு 04 02 1944
உதிர்வு 19 01 2008

**அமரர் இராசப்பு அல்பிரட் அருமைநாயகம்**

7 ஆண்டுகள் சென்றுவிட்டாலும் நினைவு மாறாதப்பா!
அப்பா என்று அழைத்தோமே - நம்மை விட்டு அப்பால் சென்றதேனோ!
முத்தைப் போல நம்மைக் காத்தவரே முழுமையாக விட்டு சென்றதேனோ
உன் விரல்கள் மடிந்து கிடக்கையிலும் - சோராது உன் உழைப்பால் நம்மை உயர்த்தியவரே
கல்லறையில் நீ தூங்க தூங்கினாலும் நம் நினைவறைகளில் நீ தூங்கவில்லையப்பா
தினமும் சொப்பனத்தில் உன் வரவு கண்டு
நம் உள்ளம் குதூகலம் கொள்கின்றன என்றும் எம் நினைவில் நிலைத்த
எம் தந்தையின் நினைவுகள் என்றும் அழியாதப்பா

மேரி இல்லம், கரவெட்டி வடக்கு, கரவெட்டி.
தகவல்: றொபின்சன் (ஜேர்மனி) மகன்

# ஜெனிவாத் தொடரை கையாள புதுவியூகம்

## ஒத்துழைப்புப் பெறத் தயாராகிறது அரசு; பிரதி வெளிவிவகார அமைச்சர் தெரிவிப்பு

கொழும்பு, ஜன.19

ஜெனிவாவில் எதிர்வரும் மார்ச்சில் நடைபெறவுள்ள ஐ.நா. மனித உரிமைகள் பேரவைக் கூட்டத் தொடரை புதிய அரசு புதியதொரு பொறிமுறையின் கீழ் கையாளும் என்று வெளிவிவகாரப்பிரதி அமைச்சர் அஜித் பி.பெரேரா நேற்று 'உதயனுக்கு' தெரிவித்தார்.

இதற்கு அனைத்துத் தரப்பினதும் ஒத்துழைப்பை பெறுவதற்கான பேச்சுகள் விரைவில் ஆரம்பிக்கப்படும் என்றும், ஜெனிவா விவகாரம் குறித்து புதிய வெளிவிவகார அமைச்சு விழிப்பாகவே இருக்கின்றது என்றும் அவர் கூறினார்.

ஐ.நா. மனித உரிமைகள் பேரவையின் 28 ஆவது கூட்டத்தொடர் எதிர்வரும் மார்ச் மாதம் ஜெனிவாவில் நடைபெறவுள்ளது. இலங்கை குறித்த இறுதி விசாரணை அறிக்கை இதன்போது சமர்ப்பிக்கப்படவுள்ளது. போரின் இறுதிக்காலகட்டத்தில் இடம் பெற்றவை எனக் கூறப்படும் போர்க் குற்றங்கள் மற்றும் மனித குலத்துக்கு எதிரான செயற்பாடுகள் தொடர்பில் விசாரணை நடத்துவதற்கு ஐ.நா. மனித உரிமைகள் பேரவையால் 24 நாடுகளின் ஒப்புதலுடன் அமைக்கப்பட்ட விசாரணைக்குழுவே இந்த அறிக்கையை சமர்ப்பிக்கவுள்ளது. இடைக்கால விசாரணை அறிக்கை கடந்த செப்டம்பர் மாதம் சமர்ப்பிக்கப்பட்டது.

எனினும், அப்போதைய அரசு ஐ.நா.விசாரணையை நிராகரித்ததுடன், மனித உரிமை விவகாரத்தை ஐ.நா. மனித உரிமைகள் பேரவை அரசியல் ஆயுதமாக கையாள்கின்றது என்றும் சாடியது.

இவ்வாறானதொரு நிலையில், இலங்கையில் நடைபெற்ற ஜனாதிபதித் தேர்தலையடுத்து, ஆட்சிமாற்றம் ஏற்பட்டு, புதியதொரு அரசு உதயமாகியுள்ளது. இதில் வெளிவிவகாரத்துறை அமைச்சராக அத்துறையில் அனுபவமிக்க மங்கள சமரவீரவும், பிரதியமைச்சராக சட்டத்துறையில் தேர்ச்சி பெற்ற அஜித் பி.பெரேராவும் நியமிக்கப்பட்டுள்ளனர்.


மஹிந்த அரசு ஐ.நாவுடன் முரண்படும் போக்கை கடைப்பிடித்தாலும், புதிய அரசு அதன் கொள்கைகளை மதித்துச்செயற்படும் என அரசியல் ஆய்வாளர்கள் சுட்டிக்காட்டுகின்றனர். பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவும் ஐ.நா. விசாரணைக்கு ஒத்துழைப்பு வழங்கப்படும் என கூறியுள்ளார்.

இந்நிலையில், எதிர்வரும் மார்ச்சில் நடைபெறவுள்ள ஐ.நா. மனித உரிமைகள் பேரவையின் 28 ஆவது கூட்டத்தொடரை எதிர் கொள்வதற்கு புதிய அரசு தயாராகி வருகின்றதா என்றும், இதன் நிமித்தம் விசேட குழு அமைக்கப்பட்டுள்ளதா என்றும் சுடர்ஒளி வெளி விவகாரப் பிரதியமைச்சரிடம் நேற்று வினவியது.

இதற்கு பதிலளித்த அவர், இது விடயம் பற்றி இன்னும் இறுதி முடிவுக்கு வரவில்லை. எனினும், முழு அரசுமே ஜெனிவா விவகாரம் குறித்து கவனம் செலுத்தியுள்ளது. ஆகவே, புதிய அரசு புதிய வழி முறையின்கீழ் அந்த அமர்வை கையாளும் என்று கூறினார்.

அதேவேளை, மஹிந்தவின் ஆட்சிகாலத்தில் வெளிவிவகார அமைச்சுக்குப் புறம்பாக, ஜெனிவா விவகாரத்தைக்கையாள்வதற்கு விசேட தூதுவராக மஹிந்த சமரசிங்க நியமிக்கப்பட்டிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (ந-சி)

## 31 ஆம் நாள் நினைவஞ்சலி



பிறப்பு 28 . 07 . 1934

இறப்பு 19 . 12 . 2014

### வல்லிபுரம் கிருஸ்ணபிள்ளை

திதி: திரயோதசி

உள்ளத்தால் அன்பின் உத்தமராய்
ஊர்போற்றும் நாடு போற்றும் ஒளி விளக்காய்
எம் வாழ்விற்கு வித்திட்டவரே
நாடு கடந்து லண்டனில் வசித்து வந்தீர்
அங்கிருந்தும் உங்கள் அன்பு மொழிகளை
தொலைபேசியினூடாக பகிர்ந்து கொண்டிருந்தீர்
இறுதிக்கணத்தில் உள்ளங்கள் துடித்திட
மௌனங்கள் நிலையாகி போய்விட
சோகமே எம் வாழ்வில் சூழ்ந்தது
உண்மை அன்பின் உருவம் ஒன்று
எம்மை விட்டுச் சென்ற கணங்கள்
நிதம் நிதம் நெஞ்சை வாட்டுதே
மாதம் கடந்தாலும் உங்கள் நினைவு
எங்கள் மனதை விட்டு அகலாது
உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனைப்
பிரார்த்திக்கின்றோம்.

இன்று (19.01.2015) திங்கட்கிழமை எமது இல்லத்தில் முற்பகல் 11.00 மணியளவில் நடைபெறும் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் மதிய போசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

★ இதனை தனிப்பட்ட அழைப்பாக ஏற்று வருகை தரவும்.

அராலி தெற்கு,
காளி கோயிலடி, வட்டுக்கோட்டை.

நாகலிங்கம் குடும்பத்தினர்

### தொடர்ச்சிகள்

### வடக்கின்

கூட்டணியில் உள்ளடங்கி இருந்தன. ஜனாதிபதி தேர்தலின்போது கூட்டணியில் இருந்து சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் மற்றும் அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் என்பன வெளியேறியிருந்தன. அதனால் வடக்கு மாகாண சபையில் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி 4 உறுப்பினர்களை இழந்தது.

கூட்டணியில் இடம்பெற்றிருந்த ஈ.பி.டி.பி கட்சிக்குச் சபையில் இரண்டே உறுப்பினர்கள் இருந்தபோதும் எதிர்க் கட்சித் தலைவர் பதவியை அது தனதாக்கிக் கொண்டிருந்தது. ஜனாதிபதித் தேர்தலுக்குப் பின்பான தற்போதைய நிலையில், அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் மற்றும் சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் என்பன இணைந்து எதிர்கட்சித்தலைவர் பதவியைக் கோரவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

மாகாண சபையின் இன்றைய அமர்வின்போது கட்சித் தலைவர்களின் கூட்டத்தில் இது பற்றி ஆராயப்படவுள்ளது.

அறிக்கை சமர்பிப்பு

இன்றைய அமர்வில், அவைத் தலைவரால் ஆளுநருக்கான நிதி ஒதுக்கீடு தொடர்பான அறிக்கை சமர்பிக்கப்படவுள்ளது. கடந்த டிசெம்பர் மாதம் இடம்பெற்ற வடக்கு மாகாண சபையின் வரவு – செலவுத்திட்ட அமர்வில் ஆளுநருக்கான நிதி ஒதுக்கீடு தொடர்பில் வாதம் இடம்பெற்றிருந்தது. ஆளுநருக்கான நிதி ஒதுக்கீடு நிறுத்தி வைக்கப்படவேண்டும் என்று தெரிவிக்கப்பட்டிருந்தது.

இது தொடர்பில் அவைத் தலைவர் ஆராய்ந்து அறிக்கை சமர்பிப்பார் என்று வடக்கு மாகாண முதலமைச்சர் க.வி. விக்னேஸ்வரன் தெரிவித்திருந்தார். இந்த நிலையில் இது தொடர்பிலான அறிக்கை இன்றைய தினம் சமர்பிக்கப்படவுள்ளது.

பிரேரணைகள்

இலங்கையில் நடைபெற்றதும், நடைபெற்றுக் கொண்டிருப்பதும் இனஅழிப்புத்தான் என்று தெரிவிக்கும்பிரேரணை, ஆளுநங் கட்சி உறுப்பினர் எம்.கே.சிவாஜிலிங்கத்தினால், இன்றைய அமர்வில் எடுத்துக் கொள்வதற்காக அனுப்பி வைக்கப்பட்டிருந்தது. இருப்பினும் குறித்த பிரேரணை சபை நிகழ்சி நிரலில் உள்ளடக்கப்படவில்லை. கடந்த டிசெம்பர் மாத அமர்வில், குறித்த பிரேரணை கொண்டு வரப்பட்ட போது, ஜனாதிபதித் தேர்தல் முடிய, திருத்தங்களுடன் அந்தப் பிரேரணையைச் சமர்ப்பிக்க முடியும் என்று முதலமைச்சர் தெரிவித்திருந்தார். (உ–5)

### மஹிந்தவை

செய்தியை இந்திய வெளிவிவகார அமைச்சு மறுத்துள்ளது. இது தொடர்பில் சர்வதேச ஊடகம் தெரிவித்துள்ளதாவது: கொழும்பிலுள்ள இந்தியத் தூதரகத்தில், 'றோ' அமைப்பின் தலைமை அதிகாரியாக இளங்கோ பணியாற்றியிருந்தார். இவர் கடந்த டிசெம்பர் மாதம் 24ஆம் திகதி திடீரென இந்தியாவுக்கு அழைக்கப்பட்டிருந்தார். மைத்திரிபால சிறிசேனாவுடன், இளங்கோ நெருங்கிப் பணியாற்றுவதாக மஹிந்த ராஜபக்ஷ, புதுடில்லிக்குத் தெரிவித்ததையடுத்தே அவர் இந்தியாவுக்கு திருப்பி அழைக்கப்பட்டிருந்தார். இது வழக்கமான இடமாற்றம்தான் என்று புதுடில்லி அப்போது தெரிவித்திருந்தது.

இளங்கோ இந்தியாவுக்குதிருப்பியழைக்கப்படுவதற்கு முன்பதாக, மைத்திரிபால சிறிசேனவை ஜனாதிபதித் தேர்தலில் களமிறக்கும் நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளார். முன்னாள் ஜனாதிபதி சந்திரிகாவுடன் நெருக்கமான தொடர்புகளைப் பேணிய இளங்கோ, அவலூடாக ரணிலைப் போட்டியிடாமல் செய்ததுடன் மைத்திரிபால சிறிசேனவை, மஹிந்தவுக்கு எதிராக களமிறக்கியிருந்தார்.

அத்துடன் எதிரகட்சியின் முக்கிய தலைவர் ஒருவரைப் பயன்படுத்தி, மைத்திரிபால சிறிசேனவை ஆதரிக்கும் கூட்டங்களை நடத்துவதற்கும் அவர் ஊக்குவித்தார் என்று தெரிவிக்கப்படுகின்றது.

புதுடில்லியின் திட்டத்தையே குறித்த றோ அதிகாரி செயற்படுத்தினார் என்று தெரிவிக்கப்படுகின்றது. இப்படி அந்த ஊடகம் தெரிவித்துள்ளது. இருப்பினும், அவ்வாறு எந்தநடவடிக்கையும் மேற்கொள்ளப்படவில்லை என்றுஇந்திய வெளி விவகார அமைச்சின் ஊடகப் பேச்சாளர் மறுத்துள்ளார்.(உ–5)

## நீங்காத நினைவஞ்சலி

12 ஆம் ஆண்டு — 17 ஆம் ஆண்டு



மலர்வு 28.04.1949 — உதிர்வு 31.01.2003

மலர்வு 03.09.1929 — உதிர்வு 05.12.1998

திருமதி புவனேஸ்வரி சின்னத்துரை (பேபி)
திதி:-சதுர்த்தசி 19.01.2015

அமரர் சுந்தரர் சின்னத்துரை (செல்லமணி
(காங்.சி.கூ.ஓய்வுபெற்ற ஊழியர்)
திதி:-திருதியை 20.11.2014


வருடம் பல சென்றது ஆறவில்லை எம் துயரம்
அன்புடன் எமைக்காத்து அறிவுரை பல கூறி
பண்புடன் எமை வளர்த்து தரணியிலே உயரவைத்தீர்கள்
ஆயிரம் உறவு இருந்தும் என்ன? உங்கள்
அன்பைப்போல் வருமா? கண்ணீரில் நாம் தோய எமைப்
பிரிந்து எங்கு சென்றீர்கள்? எந்நாளும் உங்கள் நினைவை
இதயத்தில் நினைந்து நிற்கின்றோம்.
எங்கள் அன்புத் தெய்வங்கள் இருவரினதும் ஆத்மா சாந்தி பெற இன்று
இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

நி.பு.இன்னவத்தை, கொல்லங்கலட்டி, தெல்லிப்பளை.

என்றும் உங்கள் நினைவில் வாழும்
மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

(29286)(2.6.7)

# மரண அறிவித்தல்



## சின்னத்துரை ஆறுமுகம்

யாழ்.அளவெட்டியைப் பிறப்பிடமாகவும் அளவெட்டி வடக்கை தற்காலிக வசிப்பிடமாகவும் கொண்ட சின்னத்துரை ஆறுமுகம் 16.01.2015 வெள்ளிக் கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற ஸ்ரீபுவனேஸ்வரிதேவி அவர்களின் அன்புக் கணவரும், ஜெயமோகன் (சுவிஸ்), ஜெயதேவன்(சுவிஸ்), ஜெயகாந்தன் (சுவிஸ்), ஜெயவதனி (ஆஸ்திரேலியா), ஜெயலிங்கன் (சென்னை), ஜெயபாலன் (லண்டன்) ஆகியோரின் அன்புத் தந்தையும், நிர்மலாதேவி, துசிதா, தர்சினி, ஸ்ரீகணேசதாசன், கார்த்திகா, மாலினி ஆகியோரின் அன்பு மாமனாரும், நதீசன், யாழினி, ஜெயராம், யாமினி, அர்ஜீன், சஞ்ஜீவன், சீலன், தர்ஷனா, சரன், வருனவி ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (19.01.2015) திங்கட்கிழமை தவளக்கிரி முத்துமாரியம்மன் வீதி, அளவெட்டி வடக்கு எனும் முகவரியில் உள்ள அவரது இல்லத்தில் நடைபெற்று, பின்னர் பூதவுடல் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**தவளக்கிரி முத்துமாரியம்மன் வீதி,**
**அளவெட்டி வடக்கு.**

தகவல்:
குடும்பத்தினர்.

தொடர்புகளுக்கு:
செல்லிடப்பேசி:+94766857518 செல்லிடப்பேசி:+41779954543
செல்லிடப்பேசி:+41432559026 செல்லிடப்பேசி:+41779247538
செல்லிடப்பேசி:+919003118218 செல்லிடப்பேசி:+447859219162

(55892) (4.6.3)

# செய்தி

## இடைநிறுத்தப்பட்ட பரிசளிப்பு விழா இன்று

தென்மராட்சி,ஜன.19

தவிர்க்கமுடியாத நிலையில் கடந்த 16, 17 ஆகிய திகதிகளில் நடைபெறவிருந்து இடை நிறுத்தப்பட்ட தொல்புரம் மத்திய சனசமூக நிலையம்– சக்தி முன்பள்ளி ஆகியவை இணைந்து நடத்தவிருந்த பொங்கல்விழா இன்று திங்கட்கிழமை மாலை 6 மணிக்கு சனசமூக நிலைய முன்றிலில் இடம் பெறும்என்றுநிலைய த் தலைவர் சி.சதீஸ்வரன் அறி வித்துள்ளார்.

இருதினங்களும் நடைபெறவிருந்த மாணவர்களின் கலை நிகழ்வுகள் மற்றும் போட்டி களில் வெற்றியீட் டிய மாணவர்க ளுக்குபரிசில்வழங் கல், கலாபூசணம் சி.லோகேஸ்வர னின் கௌரவிப்பு ஆகியவை இடம் பெறும்என்றும்அறி வித்துள்ளார்.(வ–9)

# மரண அறிவித்தல்



## முத்தையா கந்தசாமி

(இளைப்பாறிய தபால்திணைக்கள ஊழியர்)

யாழ். கச்சேரி நல்லூரைப் பிறப்பிடமாகவும் முதலியார் ஒழுங்கை, நாவலர் வீதியை வசிப் பிடமாகவும் கொண்ட முத்தையா கந்தசாமி 15.01.2015 வியாழக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான முத்தையா - தங்கம்மா தம்பதியரின் அன்புப் புத்திரரும், காலஞ்சென்றவர்களான இராசா - அன்னம்மா தம்பதியரின் அன்பு மருமகனும், காலஞ்சென்ற இராசலெட்சுமி மற்றும் இராசமலர் ஆகியோரின் பாசமிகு கணவரும், பாலச்சந்திரன், தர்மபாலன், சுபத்திரா, கிருஷ்ணபாலா, பால்ராஜன், சத்தியபாமா, சத்தியபவானி, காலஞ்சென்ற அருந்ததி மற்றும் வளர்மதி, ஜெயபாலன் (யாழ். இந்துக்கல்லூரி, ஊழியர்) ஆகியோரின் அன்புத் தந்தையும், கலாவதி, சிவமதி, பரமேஸ்வரநாதன் (யாழ். மாநகரசபை), வசந்தி, கலைமதி, பாலேந்திரன், ஜெயக்குமார், ரவீந்திரன், சண்முகானந்தன், மோகனகலா ஆகியோரின் அன்பு மாமனும், காலஞ்சென்றவர்களான புவனேஸ்வரி, கனககுணபூசணி, இராஜேஸ்வரி மற்றும் தியாகராசா, துரைராசா, சௌந்தரநாயகம் ஆகியோரின் அன்புச் சகோதரரும், காலஞ்சென்றவர்களான இராசசுந்தரம், சரஸ்வதி, இராஜேஸ்வரி மற்றும் செல்வமாணிக்கராசா, மயில்வாகனம், யோகநாதன், செல்வமலர், ராஜகாந்தினி, வரதலட்சுமி, நீலோசினி ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (19.01.2015) திங்கட் கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று, முற்பகல் 10 மணியளவில் பூதவுடல் தகனக்கிரியைக்காக அரியாலை சித்துப்பாத்தி இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

**8/1, முதலியார் லேன்,**
**நாவலர் வீதி,**
**யாழ்ப்பாணம்.**

(55962) (4.5.3)

தகவல்:
**க.ஜெயபாலன் (மகன்),**

உதயன் விளம்பரத் தொடர்புகளுக்கு
advt@uthayan.com
0215671111

# மரண அறிவித்தல்



பிறப்பு
07★07★1920

இறப்பு
18★01★2015

## கந்தையா சோமசுந்தரம்

(A.R.S.H (London) Public Health Inspector)

(ஸ்தாபகர்-சிவசக்தி ஜுவெல்லறி, கிளிநொச்சி)

விளாணை, களபூமி, காரைநகரைப் பிறப்பிடமாகவும் நீராவியடியை வசிப்பிடமாகவும் கொண்ட முன்னாள் கிளி நொச்சி கந்தசுவாமி கோயில் பொருளாளருமாகிய கா.க.சோமசுந்தரம் 18.01.2015 ஞாயிற்றுக்கிழமை இறைபதம் எய்தினார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கந்தையா-சின்னம்மா தம்பதியரின் சிரேஷ்ட புத்திரனும், காலஞ்சென்ற திலகவதி யின் அன்புக் கணவரும், காலஞ்சென்றவர்களான Dr.கணபதிப் பிள்ளை- சிவகாமிஅம்மா தம்பதியரின் மருமகனும், காலஞ் சென்றவர்களான செல்லம்மா, சிவஞானசுந்தரம் (சட்டத் தரணி) ஆகியோரின் சகோதரனும், கமலாம்பிகை, காலஞ் சென்ற சிவபாலசுந்தரம் மற்றும் ஞானாம்பிகை, விமலாதேவி, சரோஜினிதேவி, சிவகுமார் (JP) ஆகியோரின் அன்புத் தந்தை யும், காலஞ்சென்ற பத்மநாதன் (விவசாய போதனாசிரியர்) மற்றும் பாலசுப்ரமணியம் (நீர்ப்பாசனத் திணைக்களம்), சிவபாலசுப்ரமணியம்(India), குகேஸ்வரராஜா (உப அதிபர்- மானிப்பாய் மகளிர் கல்லூரி), சிவாஞ்சலி ஆகியோரின் மாமனாரும், துஷாந்தன், சாமினி, யசோதினி, கம்ஷவாகினி, குகநேசன், குகப்பிரியன், கஜதீபன், கிருத்திகா, சஷ்ரிகா, ராஜேஸ்வரிதேவி, தியானா, ரம்யா தர்மிகன், நிலக்ஷன், நிஷாந்தன், நிவேதிகா, அனுஜன் ஆகியோரின் பாசமிகு பேரனும், தணிகையன், அதிதீ ஆகியோரின் பூட்டனாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (19.01.2015) திங்கட்கிழமை முற்பகல் 10 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக கோம்பயன் மணல் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

இல.78, அரசடி வீதி,
நீராவியடி, யாழ்ப்பாணம்.
077 714 9396

தகவல்:
சோ.சிவகுமார் (JP) (மகன்)
(முன்னாள் உரிமையாளர்- சிவசக்தி ஜுவல்லறி, யாழ்ப்பாணம்.)

(55960)(4.7.3)

# மஹிந்த பக்கம் நின்ற தலைவர்களுடன் ஜனாதிபதி மைத்திரி இன்று முக்கிய பேச்சு

## புதிய கட்சி உதயமாவதை தடுக்க வியூகம்?

கொழும்பு, ஜன.19

ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியில் அங்கம் வகித்த பங்காளிக் கட்சிகளின் தலைவர்களுடன் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன இன்று பேச்சு நடத்தவுள்ளார். ஜனாதிபதி செயலகத்தில் நண்பகல் 12.30க்கு நடைபெறவுள்ள இந்தச் சந்திப்பில் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவும் கலந்துகொள்ளவுள்ளார்.

தேசிய அரசுக்கான ஒத்துழைப்பு, நாடாளுமன்ற நடவடிக்கைகள் உட்பட முக்கிய பல விடயங்கள் தொடர்பில் இதன்போது கருத்து பரிமாற்றல்கள் இடம்பெறவுள்ளன. குறிப்பாக, தேசிய அரசின் நடவடிக்கைகளுக்கு ஒத்துழைப்பு வழங்குமாறு கட்சித் தலைவர்களிடம் ஜனாதிபதி கோரிக்கை விடுக்கவுள்ளார்.

அத்துடன், ஜனாதிபதியிடம் முக்கிய சில கோரிக்கைகளை முன்வைப்பதற்கு இடதுசாரி கட்சிகள் தீர்மானித் துள்ளன. இன்றைய சந்திப்பின்போது இது பற்றி மேற்படி கட்சிகள் ஜனாதிபதிக்கு தெளிவுபடுத்தவுள்ளன.

முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தலைமையில் செயற்பட்ட ஐக்கிய மக்கள் சுதந்திர முன் னணியில், லங்கா சமசமாஜக் கட்சி, இலங்கை கம்யூனிஸ்ட் கட்சி; ஜனநாயக இடதுசாரி முன் னணி, மக்கள் ஐக்கிய முன்னணி, இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ், முஸ்லிம் காங்கிரஸ், அகில இலங்கை மக்கள் காங்கிரஸ், தேசிய காங்கிரஸ், தேசிய சுதந் திர முன்னணி, தொழிலாளர் தேசிய சங்கம், மலையக மக்கள் முன்னணி, ஈ.பி.டி.பி உள்ளிட்ட முக்கியக் கட்சிகள் பங்காளிக்கட்சிகளாக அங்கம் வகித்தன. ஜனாதிபதித் தேர்தல் அறிவிப்புக்கு பின்னர், முஸ்லிம் காங்கிரஸ், அகில இலங்கை மக்கள்காங்கிரஸ், தொழிலாளர் தேசிய சங்கம், மலையக மக்கள் முன்னணி ஆகியன மைத்திரிபால சிறிசேனவுக்கு ஆதரவளித்திருந்தன. ஏனைய கட்சிகள் தொடர்ந்தும் எதிர்ப் போக்கிலேயே இருக்கின் றன.

இந்த நிலையிலேயே மேற்படி கட் சிகளின் தலைவர்களை ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியில் பிரதான பங்காளிக் கட்சியாக இருக்கும் சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் தலைவர் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன இன்று சந்தித்து பேச்சு நடத்தவுள்ளார். ஜனாதிபதியின் அழைப்பின் பிரகாரமே இந்தச் சந்திப்பு இடம்பெறவுள்ளது. இந்தச் சந்திப்பை சில கட்சிகள் பகிஷ்கரிக்கலாம் என தகவல்கள் வெளி யானதும் இது பற்றி உத்தியோகபூர்வ தகவல்கள் நேற்று இரவுவரை வெளியாகவில்லை.

அதேவேளை, இடதுசாரிக்கட்சிகள் உட்பட சில கட்சிகளின் உதவியுடன் புதிய கட்சியொன்றை அமைப்பதற்கான முயற்சியில் மஹிந்த தரப்பு இறங்கியுள்ளது எனதகவல்கள் வெளியாகியுள்ள நிலையில், இவ்வாறானதொரு சந்திப்பு இடம்பெறுவது, அத்தகைய முயற்சியை தடுத்து நிறுத்துவதற்கான வியூகமாக இருக்கலாம் என்று அரசியல் ஆய்வாளர்கள் சுட்டிக்காட்டுகின்றனர். (ந–சி)

## மரண அறிவித்தல்கள்



### லோகநாதன் கஜேந்திரன்

(ஊழியர்- றோயல் வைன் ஸ்ரோர்ஸ், யாழ்ப்பாணம்)

காரைநகர் அல்வின் வீதியைப் பிறப்பிடமாகவும் இல, 49, விதானையார் வீதி, சுண்டுக்குளியை வசிப்பிடமாகவும் கொண்ட லோகநாதன் கஜேந்திரன் நேற்று (18.01.2015) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் லோகநாதன்-வனிதா தம்பதியரின் அன்பு மகனும், ரபேந்திரன்-பூபதி தம்பதியரின் அன்பு மருமகனும், டினோஷாவின் அன்புக் கணவரும், திசாலினியின் அன்புத் தந்தையும், வரதராஜா (வரதன்), ரகுநாதன் (ரகு), ரவிலீலா, றசிதா ஆகியோரின் அன்புச் சகோதரனும், ஜெகதீஸ்வரி, ரதிதேவி, ரதீஸ்குமார், தினேஸ்குமார், கஜீபன் ஆகியோரின் மைத்துனரும்ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (19.01.2015) திங்கட்கிழமை அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவு டல் தகனக்கிரியைகளுக்காக மு.பகல் 10.00 மணியளவில் கொழும்புத் துறை துண்டி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

இல, 49, விதானையார் வீதி,
சுண்டுக்குளி,
யாழ்ப்பாணம்.

077 2567330

தகவல்:
குடும்பத்தினர்

## தொடர்ச்சிகள்

### டில்லிக்கே

ஐந்து தினங்களே ஆகின்றநிலையில் இந்தியாவுக்குப் பயணம் செய்துள்ளமை அதை உறுதிப்படுத்துகின்றது என்றும் கூறியுள்ளார்.

வெளிவிவகார அமைச்சர் மங்கள சமரவீர இந்திய வெளிவிவகார அமைச்சர் சுஷ்மா சுவராஜை நேற்று டில்லியில் சந்தித்துப் பேசினார்.

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன மற்றும் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க ஆகியோர் தலைமையிலான புதிய அரசின் திட்டங்கள் குறித்து இந்தச்சந்திப்பில் இருநாட்டு அமைச்சர்களும் பேசினர்.

இந்தச் சந்திப்பின்போது, இலங்கையுடன் இணைந்து இந்தியா செயலாற்றுவதற்கான சந்தர்ப்பமாக அரசியல் மாற்றம் காணப்படுகிறது என்று இந்தியப் பிரதமர் நரேந்திரமோடி நம்பிக்கை கொண்டுள்ளார் என்ற விடயத்தை இந்திய வெளிவிவகார அமைச்சர் சுஷ்மா, மங்கள சமரவீரவுக்கு எடுத்து விளக்கினார் என்று இந்திய வெளிவிவகார அமைச்சு செய்தி தொடர்பாளர் சையத் அக்பருதீன் தெரிவித்துள்ளார்.

அதேவேளை, இந்திய சென்றுள்ள மங்கள சமரவீர இன்று இந்தியப் பிரதமர் நரேந்திர மோடியைச் சந்திப்பார் என்று கூறப்படுகின்றது. (ந–சி)

### பாடசாலைகளுக்கு

வடக்கு மாகாணத்துக்கு புதிதாக ஆளுநர் நியமிக்கப்பட்டிருக்கும் நிலையிலேயே இந்தக் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

இதுகுறித்துக் கருத்துத் தெரிவித்த இலங்கை ஆசிரியர் சங்கத்தின் தலைவர் ஜோசப் ஸ்டாலின்,

யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு, மன்னார் ஆகிய மாவட்டங்களில் பாடசாலைகளுக்கு அருகே முகாம்கள் அமைக்கப்பட்டுள்ளன. வன்னியில் மாணவர்கள் பயணிக்கும் வீதிகளிலும் இராணுவ முகாம்கள் காணப்படுகின்றன. அதனால் மாணவர்கள் அசௌகரியங்களை எதிர்கொள்வதுடன், அவர்களின் பாதுகாப்புக் குறித்தும் கேள்வி எழுந்துள்ளது.

அதேபோன்று பாடசாலைகளுக்குள் இராணுவத்தினர் ஆசிரியர்கள், மாணவர்களின் விவரங்களைத் திரட்டுதல், பரீட்சை எழுதும் மாணவர்களின் விவரங்களைத் திரட்டுதல் போன்ற நடவடிக்கைகள் மூலம் தமது தலையீட்டை அதிகரிக்கின்றனர். அவ்வாறான நடவடிக்கைகளை நிறுத்துவதற்கு உடன் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும், பாடசாலைகளுக்கு அருகே அமைக்கப்பட்டுள்ள இராணுவ முகாம்களை அகற்ற வேண்டும் என்ற எமது கோரிக்கையை வடக்கு மாகாணத்துக்குப் புதிதாக நியமிக்கப்பட்டுள்ள ஆளுநரும், புதிய கல்வி அமைச்சரும் கருத்தில் கொள்ள வேண்டும்"–என்றுதெரிவித்தார். (ந–422)

### வாக்குமூலம்

வெளிவந்து கொண்டிருந்த போது, இராணுவத்தினரைப் பயன்படுத்தி நாட்டில் சதிப் புரட்சியை ஏற்படுத்தி ஆட்சியை தக்க வைப்பதற்கு முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ திட்டமிட்டிருந்தார் என்று வெளிவிவகார அமைச்சர் மங்கள சமரவீர குற்றம் சுமத்தியிருந்தார். இது தொடர்பில் குற்றப் புலனாய்வுப் பிரிவினரிடம் முறைப்பாடும் செய்திருந்தார்.

இது தொடர்பில் சட்டமா அதிபர் திணைக்களத்தின் ஆலோசனையைப் பெற்று குற்றப் புலனாய்வுத் திணைக்களம் விசாரணைகளை ஆரம்பித்துள்ளது.

ஜனவரி 9 ஆம் திகதி அதிகாலையிலிருந்து, அலரிமாளிகைக்கு வந்தவர்கள், சென்றவர்கள், அங்கு என்ன நடந்தது என்பது தொடர்பான விவரங்கள் என்பவை அங்கு நிறுவப்பட்டிருந்த சிசிரிவி கமராக்களில் பதிவான காட்சிகளைக் கொண்டு விசாரணை நடத்த வுள்ளது என்று தெரிவிக்கப்படுகின்றது. அத்துடன் அன்றைய தினம் அலரிமாளிகைக்கு வந்த தொலைபேசி அழைப்புக்கள், வெளிச் சென்ற தொலைபேசி அழைப்புக்கள் என்பன தொடர்பிலும் ஆராயப்பட வுள்ளது.

இதேவேளை, இது தொடர்பிலான முழுமையான விசாரணைக்கு ஒத்துழைப்புக் கொடுக்க இராணுவத் தளபதி தயார் என்று இராணுவப் பேச்சாளர் தெரிவித்தார். (ந–5)

## மரண அறிவித்தல்



### திருநாவுக்கரசு கணநாதன்

(கணக்காளர்- தென்னாபிரிக்கா மாலவி)

பருத்தித்துறை மாதனையைப் பிறப் பிடமாகவும் 45/14, நாயன்மார் வீதி, நல்லூரை வசிப்பிடமாகவும் கொண்ட திருநாவுக்கரசு கணநாதன் (07.01.2015) புதன் கிழமை காலமானார்.

அன்னார் திருநாவுக்கரசு மற்றும் காலஞ் சென்ற இராஜலட்சுமி தம்பதி யரின் அன்பு மகனும், காலஞ் சென்ற தட்சணா மூர்த்தி மற்றும் இராசமலர் தம்பதியரின் அன்பு மருமகனும், புஸ்பவதியின் (ஆசிரியை யா/விக் கினேஸ்வரா வித்தியாலயம்) கணவரும் க.தேனுகா (யா/இந்து மகளிர் கல் லூரி தரம் 9) க.நிருத்திகன் (யா/மத்திய கல்லூரி தரம்7) ஆகியோரின் அன்புத் தந்தையும், கானசரஸ் வதி, சோமசுந்தரம் (பிரான்ஸ்), பாஸ்கரன் ஆகியோரின் மைத்துனரும், விஜயகுமார், கலாதேவி, மைதிலி ஆகியோரின் சகலனும், தர்சிகா, பானுஜா, தனோஜா, மேகானுஜன் ஆகியோரின் சித்தப்பாவும், பிரியங்கா, லக்சிகா, நிசாந்தன், மாதுசன், கஜீவன் ஆகியோரின் மாமனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நளை (20.01.2015) செவ்வாய்க் கிழமை அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் மு.பகல் 10.00 மணியளவில் தாகனக்கிரியைகளுக்காக செம்மணி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

45/14 நாயன்மார் வீதி
நல்லூர் யாழ்ப்பாணம்.

021 222 6549
075 045 4852

தகவல்:
குடும்பத்தினர்



### செல்லக்கண்டு அரசரத்தினம்

நீர்வேலி வடக்கு நீர்வேலியைப் பிறப்பிடமாக வும் வசிப்பிடமாகவும் கொண்ட செல்லக்கண்டு அரசரத்தினம் நேற்று 18.01.2015 ஞாயிற்றுக் கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான செல்லக்கண்டு மகேஸ்வரி தம்பதிகளின் ஏக புத்திரனும், காலஞ்சென்றவர்களான சின்னத்தம்பி பொன்னம்மா தம்பதியரின் அன்பு மருமகனும் புஸ்பராணியின் (தேவி) அன்புக் கணவரும் தங்கவடிவேலின் (ஆசிரியர் - பூநகரி மகாவித்தியாலயம்) சகோதரனும், தயாழினி, பிருந்தா, வசந்த ரூபி (அபிவிருத்தி உத்தியோகத்தர் - பிரதேச செயலகம் - கோப்பாய்), வர்ணரூபன் (மலேசியா), டிபர்சன் (சிவில் இஞ்சினியரிங் மாணவன் - தொழில் நுட்பக் கல்லூரி - வவுனியா), ஆகியோரின் அன்புத் தந்தையும் ரசிகரன் (டோகா), தயாளன் (சவுதி), சிவகுமார் (நடத்துநர் இ.போ.ச பருதித்துறை) ஆகியோரின் பாசமிகு மாமனாரும், அபிசயன் (தரம் - 2 மாணவன் - அத்தியார் இந்துக்கல்லூரி), சிந்துஜா, தமயந்தி, மாதுமை ஆகியோரின் தாத்தாவும், காலஞ்சென்ற மகாலிங்கத்தின் மைத்துனரும், ஸ்ரீஸ்குமாரின் மாமனாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (19.01.2015) திங்கட் கிழமை முற்பகல் 9 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் நீர்வேலி சீயாக்காடு இந்து மயானத்திற்கு தகனக்கிரியைக் காக எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

நீர்வேலி வடக்கு,
நீர்வேலி


தகவல்: குடும்பத்தினர்
021 225 1024
077 557 8913

(55971)

# செய்திகள்

## மஹிந்தவிடம் இருந்து நாட்டைக் காப்பாற்றினேன்!

### சோதிடர் சுமணதாச இப்படிக் கூறுகின்றார்



கொழும்பு, ஜன.19

முன்னாள் ஜனாதிபதிக்கு கயிற்றைக் கொடுத்து தேர்தலை முன்கூட்டியே நடத்த வைத்தது, தானே எனவும் அப்படி தேர்தல் நடக்காமல் இருந்தால், அவர் வசிய மந்திரத்தை உச்சரித்து கொண்டு 2017ம் ஆண்டு வரை அலரி மாளிகையில் இருந்திருப்பார் என மஹிந்த ராஜபக்ஷவின் ஆஸ்தான சோதிடர் சுமணதாச அபேகுணவர்தன தெரிவித்துள்ளார்.

வெளிநாட்டு பத்திரிகை ஒன்றுக்கு வழங்கிய பேட்டியிலேயே அவர் இவ்வாறு கூறியுள்ளார் என்று தெரிவிக்கப்படுகின்றது.

தேர்தல் ஆணையாளரையும் பொலிஸ் மா அதிபரையும் புகழ்ந்து அவர்களால் நாடு காப்பற்றப்பட்டது என, பத்திரிகைகளில் பக்கம் பக்கமாக எழுதுகின்றனர்.

நான் இல்லாவிட்டால் அவர்களுக்குப் பணியாற்ற தேர்தல் ஒன்று வந்திருக்குமா?. தேர்தல் 2017ஆம் ஆண்டே நடைபெறவிருந்தது.

முன்னாள் ஜனாதிபதிக்கு கயிற்றைக், கொடுத்து தேர்தலை நடத்த நானே அவரை இணங்க வைத்தேன். அப்படியில்லை என்றால், அவர் வசிய மந்திரத்தை உச்சரித்துக் கொண்டு 2017ஆம் ஆண்டு வரை அலரி மாளிகையில் இருந்திருப்பார். இவற்றை நாங்கள் பகிரங்கமாகக் கூற முடியாது. எவரும் இதனை தமது அறிவைக் கொண்டு புரிந்து கொள்ள வேண்டும். நாடு பயணிப்பதைப் பார்த்த போது, முன்னாள் ஜனாதிபதி தொடர்ந்து இரண்டு வருடங்கள் ஆட்சியில் இருந்தால் எமக்கு நாடு என்று ஒன்று மீதமிருக்காது என்பதை நாம் உணர்ந்தோம்.

அந்த எண்ணத்திலேயே நாங்கள் இதனைச் செய்தோம். ராஜபக்ஷ ஆட்சியில் இருந்தால் எமக்கு நல்லதாக இருந்திருக்கும், ஆனால் அது நாட்டுக்கு கெடுதியாக முடிந்திருக்கும். யார் என்ன கூறினாலும் எமது வயிற்றை விட, நாங்கள் எமது நாட்டை நேசிக்கின்றோம். உண்மையில் கடந்த 9 ஆண்டுகள் நாட்டை நாங்களே நிர்வகித்தோம்– என்று அவர் மேலும் கூறியுள்ளார். (ற)

## மஹிந்தவை நாங்கள் தோற்கடிக்கவில்லை

### பொதுபலசேனா கூறுகின்றது

கொழும்பு, ஜன. 19

எம்மால் தான் முஸ்லிம்களின் வாக்குகள் மஹிந்த ராஜபக்ஷவுக்கு கிடைக்காமற் போனது என்ற குற்றச்சாட்டை ஏற்க முடியாது. நாங்கள் சிங்கள – பௌத்தர்களின் வாக்குகளை மஹிந்தவுக்கு முழுமையாகப் பெற்றுக் கொடுத்தோம். இவ்வாறு பொது பல சேனாவின் செயலாளர் கலகொடஅத்தே ஞானசார தேரர் தெரிவித்துள்ளார்.

நாம் முஸ்லிம் அடிப்படைவாதிகளுக்கு எதிராகவே செயற்பட்டோம். முழுப் பழங்குடி முஸ்லிம்களுக்கு எதிராகவல்ல.

மைத்திரிபால சிறிசேன கட்சி மாறியது எமது செயற்பாட்டினாலா? சம்பிக்க ரணவக்க எதிர்க் கட்சியுடன் சேர்ந்தது எமது செயற்பாட்டினாலா? குற்றஞ் சாட்டுபவர்களிடம் நாம் சில விடயங்களுக்கு காரணம் கேட்கின்றோம். வடக்கின் வாக்குகள் முழுமையாகக் கிடைக்காமற் போனதும் எம்மாலா?

நாம் கணக்குப் போட்டுக் காட்டுகின்றோம். முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவுக்கு பௌத்தர்களின் வாக்குகள் அனைத்தும் சுத்தமாகக் கிடைத்துள்ளது. இது நாம் இருந்ததனால் தான் கிடைக்கப் பெற்றது. வேலையை சரியாகச் செய்யாத கட்சியின் தொகுதி அமைப்பாளர்களே இந்த தோல்விக்குப் பொறுப்புச் சொல்லவேண்டியவர்கள். கட்சிக்கு வெளியிலும், கட்சியின் உள்ளேயும் சூழ்ச்சிகள் இடம்பெற்றமை ஏற்றுக்கொள்ளப்பட வேண்டிய ஒன்றாகும்.

பௌத்தர்கள், கட்சி ரீதியில் பிரிந்து செல்லாமல் நாடு என்ற காரணத்தை வைத்து ஒன்றுபடுமாறு நான் கேட்டுக் கொள்கின்றேன். சிங்களத்தலைவர்கள் பிரிந்திருப்பதன் விளைவை எதிர்காலச் சந்ததியினர் ஈடு கொடுக்க வேண்டியிருக்கும் எனவும் தேரர் மேலும் தெரிவித்துள்ளார். (ற–5)

## இலங்கை அகதி முகாம்களை அடிக்கடி ஆராயுமாறு உத்தரவு

### தமிழக கடலோரப் பாதுகாப்பு படைத் தலைவர் பிறப்பித்துள்ளாராம்

சென்னை, ஜன.19

விருதுநகர் மாவட்டத்தில் உள்ள இலங்கை அகதிகள் முகாம்களில் சந்தேகப்படும் நபர்களின் நடமாட்டம் இருந்தால் அது தொடர்பான தகவலை உடனடியாக மாவட்ட நிர்வாகத்துக்கு தெரிவிக்குமாறு தமிழக கடலோர பாதுகாப்பு படைதலைவர் தெரிவித்துள்ளதாக இந்திய ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

விருதுநகர் மாவட்டத்தில் உள்ள அகதிகள் முகாம் தொடர்பாக, கடந்த சனிக்கிழமை அதிகாரிகளுடன் இடம்பெற்ற கலந்தாய்வு கூட்டத்தில் கலந்து கொண்டு உரையாற்றுகையில் அவர் இதனை கூறியுள்ளார் என்றும் தெரிவிக்கப்படுகின்றது.

அதிகாரிகள் இலங்க்க அகதிகள் முகாமுக்கு அடிக்கடி சென்று ஆய்வு செய்வதோடு, அங்கு தங்கியிருப்பவர்களின் விவரங்கள் முழுவதையும் பதிவேடுகளில் சரிபார்க்க வேண்டும். எந்தவித முன்னறிவிப்பின்றி வெளிநாடுகளுக்கு விசைப் படகுகளில் தப்பிச் செல்வதால் ஏற்படும் பின்விளைவுகள் குறித்து அகதிகள் வட்டாட்சியர் விளக்கமாக எடுத்துரைக்க வேண்டும். அதேபோல், முகாம் பகுதிகளில் இரவு நேரங்களில் சந்தேகப்படும் நபர்கள் குறித்து கியூ பிரிவு பொலிஸார், தனிப் படை காவல் காவலர்கள் ஆகியோர் கண்காணித்து உடனே கடலோரப் பாதுகாப்பு காவல் துறை அலுவலகம், மாவட்ட வருவாய்த்துறை அலுவலகம், காவல்துறை, அந்தந்தப் பகுதியில் உள்ள காவல் நிலையங்களுக்கும் தகவல் தெரிவிக்க வேண்டும் என அவர் கேட்டுக் கொண்டார் என்று அந்தச் செய்திகளில்தெரிவிக்கப்பட்டுள்ளது.(ற)

## மஹிந்தவின் வாகனங்களுக்கு நடந்தது என்ன?

### விசாரணை ஆரம்பம்

கொழும்பு, ஜன.17

முன்னாள் ஜனாதிபதியின் ஆட்சிக் காலத்தில் ஜனாதிபதி செயலகத்துக்கு ஒதுக்கப்பட்ட 700 வாகனங்களுக்கு என்ன நடந்து என்பதை அறிய குற்றப் புலனாய்வுப் பிரிவினர் விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர். ஜனாதிபதி செயலகத்தின் அதிகாரி ஒருவரின் முறைப்பாட்டுக்கு அமைய பொலிஸ் மா அதிபரின் உத்தரவின் பேரில் இந்த விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

ஆடம்பர கார்கள் மற்றும் ஜீப் வண்டிகளை பயன்படுத்தும் நபர்கள் மற்றும் அவற்றின் பட்டியல்கள் பொலிஸாரிடம் இருக்கின்றன. 5 டிப்பெண்டர் வாகனங்கள் மற்றும் ஒரு பிராடோ ஜீப் என்பவற்றை தற்போது கைப்பற்றியுள்ளதாகப் பொலிஸார் தெரிவித்தனர். (ற)

## மஹிந்த, நாமல் படங்களுடன் 68,000 சுவர்க் கடிகாரங்கள்!

### பொலிஸாரின் நடவடிக்கையில் சிக்கியது

கொழும்பு, ஜன.19

முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ மற்றும் அவருடைய புதல்வரும் நாடாளுமன்ற உறுப்பினருமான நாமல் ராஜபக்ஷ ஆகியோரின் முகங்கள் பொறிக்கப்பட்ட 68 ஆயிரம் சுவர்க் கடிகாரங்கள் கைப்பற்றப்பட்டுள்ளன.

சபுகஸ்கந்த பொலிஸ் பிரிவுக்குட்பட்ட ஹெய்யந்துடுவ, மாபிம பிரதேசத்திலிருந்த களஞ்சிய சாலையொன்றில் சட்ட விரோதமான முறையில் பதுக்கி வைக்கப்பட்டிருந்த நிலையிலேயே இவை நேற்று ஞாயிற்றுக் கிழமை மீட்கப்பட்டுள்ளன. அத்துடன், ஜனாதிபதித் தேர்தலுக்காக அச்சடிக்கப்பட்டிருந்த ஒருதொகை சுவரொட்டிகளும் அங்கிருந்து கைப்பற்றப்பட்டதாக பொலிஸ் தலைமையகம் அறிவித்துள்ளது.

பொலிஸாருக்கு கிடைக்கப் பெற்ற இரகசிய தகவலையடுத்து மஹர நீதிவான் நீதிமன்றத்தில் பெற்றுக்கொள்ளப்பட்ட சோதனை விறாந்தின் அடிப்படையிலேயே அந்தக் களஞ்சிய சாலை, சோதனைக்கு உட்படுத்தப்பட்டது. குறித்த களஞ்சிய சாலையானது துறைமுக அதிகாரியொருவருக்கு 15 லட்சம் ரூபாய் செலுத்தி குத்த கைக்கு எடுக்கப்பட்டுள்ளதாக களஞ்சியசாலையின் உரிமையாளர் தெரிவித்தார். இது தொடர்பான மேலதிக விசாரணைகளை சபுகஸ்கந்த பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர் என்று பொலிஸ் தலைமையகம் அறிவித்துள்ளது. (ற)

## முன்னாள் பிரதமரின் மகனுக்கு நாட்டை விட்டு வெளியேறத் தடை

கொழும்பு, ஜன.19

முன்னாள் பிரதமர் தி.மு.ஜயரத்னவின் மகனான அநுராத லங்கா ஜயரத்ன, நாட்டைவிட்டு வெளியேறுவதற்கு தடைவிதிக்கப்பட்டுள்ளது. கம்பளை நீதிவான் உபுல் ராஜகருண, இந்த உத்தரவை பிறப்பித்துள்ளார்.

கடந்த ஜனாதிபதி தேர்தலின் போதுகம்பளைநகரத்தில்அமைக்கப்பட்டிருந்த பொது எதிரணியின் ஜனாதிபதி வேட்பாளர் மைத்திரிபால சிறிசேனவின் காரியாலயத்தின் மீது தாக்குதல்களை மேற்கொண்டமை, அந்த காரியாலயத்தின் மீது சட்டவிரோதமான முறையில் உள்நுழைந்தமை, துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொண்டமை மற்றும் அச்சுறுத்தியமை ஆகிய குற்றச்சாட்டுக்கள் அநுராத லங்கா ஜயரத்ன மீது சுமத்தப்பட்டிருந்தது. இந்த குற்றச்சாட்டுக்கள் தொடர்பில் நீதிமன்றத்தில் முன்னிலையாகுமாறு அறிவிக்கப்பட்டிருந்த போதிலும் அவர், நீதிமன்றத்தில் நேற்று ஞாயிற்றுக்கிழமை வரையிலும் முன்னிலையாகவில்லை.

இதனையடுத்து, முன்னாள் பிரதமர் தி.மு.ஜயரட்னவின் மகனும் மத்திய மாகாண சபை உறுப்பினருமான அநுராத லங்கா ஜயரத்ன, கம்பளை நகர சபையின் உறுப்பினர்கள் இருவர் மற்றும் உடபலாத்த பிரதேச சபையின் உறுப்பினர் உட்பட அதி பிரமுகர்களின் பாதுகாப்பு அதிகாரி ஆகியோருக்கு இந்த தடை பிறப்பிக்கப்பட்டுள்ளது.

இந்தச் சம்பவங்களுடன் தொடர்புடையதாகக் கூறப்படும் ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பின் கம்பளை நகர சபை உறுப்பினர் தர்ஷிக நயன தரங்க விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார்.

அத்துடன் ஏனைய சந்தேக நபர்கள் மற்றும்வாகனங்களைத் தேடி பொலிஸார் தேடுதல் நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ளனர். (ற)

# பழிவாங்கப்பட்ட இராஜதந்திரிகள் மீள சேவையில்

## வெளிவிவகார பிரதி அமைச்சர் தெரிவிப்பு



கொழும்பு, ஜன.19
அரசியல் பழிவாங்கல்களுக்கு உள்ளாகிய வெளிநாட்டு ராஜதந்திரிகள் குறித்து விசாரணைகள் நடத்தப்பட உள்ளன என்று தெரிவித்துள்ள வெளிவிவகார பிரதி அமைச்சர் அஜித் பெரேரா, வெளிவிவகாரச் சேவையில் கடமையாற்றி வரும் பலர் தகுதியற்றவர்கள். அனேகமானவர்கள் அரசியல் ரீதியாக நியமிக்கப்பட்டவர்கள் எனவும் தெரிவித்துள்ளார்.

தூதுவர்கள் மற்றும் உயர்ஸ்தானிகர்கள் உள்ளிட்ட ராஜதந்திரிகளை மீள அழைத்து, ராஜதந்திர சேவையில் சில மறுசீரமைப்புக்கள் மேற்கொள்ளப்பட உள்ளன என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

தகுதியும் திறமையும் உடைய அரச சேவையைச் சேர்ந்த அதிகாரிகள் முக்கிய பதவிகளுக்கு விரைவில் நியமிக்கப்பட உள்ளதாகக் குறிப்பிட்ட அவர், அரசியல்பழிவாங்கல்அடிப்படையில் பணி நீக்கம் செய்யப்பட்ட ராஜதந்திரிகள் மீள சேவையில் இணைத்துக்கொள்ளப்படவுள்ளனர் என்றும் தெரிவித்தார். (ற)

# ஹெரோயின் வழக்குகளை மீள ஆராயுமாறு உத்தரவு

## சட்டம் ஒழுங்கு அமைச்சர் பிறப்பித்தார்

கொழும்பு, ஜன.19
கடந்த இரண்டு ஆண்டுகளில் நடைபெற்ற ஹெரோயின் போதைப் பொருள் வழக்குகள் குறித்து மீண்டும் ஆராயுமாறு சட்டம் ஒழுங்கு அமைச்சர் ஜோன் அமரதுங்க பொலிஸ்மா அதிபருக்கு உத்தரவிட்டுள்ளார்.

2012ஆம் ஆண்டு கைப்பற்றப்பட்ட 260 கிலோ ஹெரோயின் போதைப் பொருள் தொடர்பில் நடத்தப்பட்ட விசாரணைகளில் திருப்தியடைய முடியாது என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

குறித்த 260 கிலோ ஹெரோயின் போதைப் பொருள் அடங்கிய கொள்கலன்களை விடுவிக்குமாறு முன்னாள் பிரதமர் டி.எம்.ஜயரட்ணவின் இணைப்புச் செயலாளர் சுங்க அதிகாரிகளுக்குக் கடிதம் அனுப்பியிருந்தார் என்று தகவல்கள் வெளியாகியிருந்தன.

இந்த விடயம் பற்றி அப்போது பரபரப்பாக பேசப்பட்டபோதும், அது குறித்த விசாரணைகள் தொடர்பில் எதுவித தகவல்களும் வெளியாகவில்லை. (ற)



# தேசிய அரசு மிக முக்கியம்

## ஜனாதிபதி மைத்திரி தெரிவிப்பு

கொழும்பு, ஜன.19
தேசிய அரசை நடைமுறைப்படுத்த வேண்டியது மிக முக்கியமானது என்று தெரிவித்துள்ளார் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன.

களனி ரஜமஹா விகாரையில் நடைபெற்ற மத நிகழ்வொன்றில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

நாட்டின் எதிர்காலத்தை கருத்தில் கொண்டு அனைத்து சமூகத்தின் மத்தியிலும் ஒழுக்கம் வளர்க்கப்பட வேண்டும்.

அதேநேரம் தாய்நாட்டுக்கான, மேற்கொள்ளப்பட வேண்டிய கடமைகளையும், பொறுப்புகளையும் நிறைவேற்றுவதற்கு சிறந்த போதனைகளும், அறிவுரைகளும் வழங்கப்பட வேண்டும்"– என்றும் அவர் அங்கு மேலும் தெரிவித்துள்ளார்.(ற)

# 60,000 மதுப் போத்தல்கள் சிக்கின

கொழும்பு, ஜன.19
அனுமதிப்பத்திரம் இன்றி நான்கு லொறிகளில் மறைத்து வைக்கப்பட்டிருந்த, சுமார் 60 ஆயிரம் மதுபானப் போத்தல்கள் குற்றம் மற்றும் ஊழல் தடுப்பு பிரிவு அதிகாரிகளால் கைப்பற்றப்பட்டுள்ளன.

கொழும்பு – பேஸ்லைன் வீதி – 758ஆம் இலக்கம் – தெமட்டகொட என்ற பகுதியில் இருந்தே இவை கைப்பற்றப்பட்டுள்ளதாக பொலிஸார் குறிப்பிட்டுள்ளனர்.

குறித்த மதுபானப் போத்தல்களுடன் எட்டு சந்தேகநபர்களும் கைதாகியுள்ளனர்என்று பொலிஸ் ஊடகப் பேச்சாளர் அலுவலகம் தெரிவித்துள்ளது. (ற)

# நாமல், பஸில், விமல் ரூ.830 லட்சம் கடன்

## ஹெலியில் சுற்றியமைக்காக விமானப்படைக்குக் கொடுக்க வேண்டியதாம்

கொழும்பு, ஜன 19
நாமல், பஸில் மற்றும் விமல் வீரவன்ஸ ஆகியோர் விமானப் படைக்கு 830 லட்சம் ரூபா பணம் செலுத்தவேண்டும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த ஒரு மாத காலத்தினுள் ஹெலியில் சுற்றித் திரிந்தமைக்கான கொடுப்பனவாகவே 830 லட்சம் ரூபா வழங்கப்படவேண்டும் என்றும், இந்தக் கடன் தொகை இன்னமும் வழங்கப்படவில்லை என்றும் தெரிவிக்கப்படுகின்றது.

கடந்த டிசெம்பர் மாதம் முதலாம் திகதியிலிருந்து, ஜனவரி 8 ஆம் திகதி வரையிலான தேர்தல் பரப்புரைக் காலத்தில் 39 தடவைகள் இவர்கள் மூவரும் ஹெலிகளைப் பயன்படுத்தியுள்ளனர். பயணக் கொடுப்பனவுகளை பின்னர் வழங்குவதாகத் தெரிவித்து இவர்கள் பயணம் மேற்கொண்டுள்ளனர். இருப்பினும் இதுவரை கொடுப்பனவு எதனையும்அவர்கள்செய்யவில்லை.

நாமல் ராஜபக்ஷவே அதிக தடவைகள் ஹெலியைப்பயன்படுத்தியுள்ளார். பெல் 412 மற்றும் எம்.ஐ. 17 ரக ஹெலியில் பயணம் மேற்கொண்டுள்ளார். நாமல் ராஜபக்ஷ 24 தடவை கள் இவ்வாறு பயணம் செய்துள்ளார் என்றும் தெரிவிக்கப்படுகின்றது.(ற–5)

# பொதுமக்களது எதிர்பார்ப்புகளை ஜனாதிபதி நிறைவேற்ற வேண்டும்

## பத்மநாபா ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி தெரிவிப்பு

யாழ்ப்பாணம்.ஜன.19
தேர்தல் மூலம் மாற்றியமைக்கப்பட்டுள்ள அரசியல் மாற்றத்தின் ஊடாக இன சமூகங்களுக்கிடையே மீளிணக்கம் மற்றும் சர்வதேச உறவுகள் என்பன மாற்றியமைக்கப்பட வேண்டும் என்று பத்மநாபா ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியின் பொதுச்செயலாளர் தி.ஸ்ரீதரன் தெரிவித்துள்ளார்.

நடைபெற்று முடிந்த ஜனாதிபதித் தேர்தல் தொடர்பில் அவர் வெளியிட்டுள்ள ஊடக அறிக்கையிலேயே மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார்.

இலங்கையின் அண்மைக்கால வரலாற்றில் மிகவும் அமைதியாக நடந்து முடிந்த தேர்தல் இது. தேர்தலைப் பெரும் வன்முறைகள் இல்லாது நடத்தி முடிப்பதில் தேர்தல்கள் ஆணையாளரின் தலைமையிலானவர்களின் செயற்பாடுகள் குறிப்பிடப்பட வேண்டியன. இலங்கையின் ஜனநாயக பாரம்பரியத்தைமீட்டெடுப்பதில்ஆணையாளர் மிகச் சிறந்த பங்களிப்பைச் செய்துள்ளார்.

நாட்டின் சகல தரப்பு மக்களதும் இந்த நம்பிக்கையை புதிய ஜனாதிபதி ஜனநாயக அரசியல் சக்திகளுடன்இணைந்துபாதுகாப்பார் என எதிர்பார்க்கின்றோம். அதே போன்று முன்னாள் ஜனாதிபதிக்கு வாக்களித்த மக்களின் எதிர்பார்ப்புக்களையும்கரிசனையில் எடுத்துக் கொள்வார் என எதிர்பார்க்கின்றோம்.

இலங்கையின் கீர்த்தி வாய்ந்த இலவசக்கல்வி மற்றும் சுகாதார சேவைகள் உறுதியாக்கப்படுவதோடு மக்களின் குடியிருப்பு, குடிதண்ணீர் பிரச்சினைகளுக்குத் தீர்வு காணப்பட வேண்டும். சுதந்திரமான சமூக அரசியல் செயற்பாடுகளுக்கான இடைவெளி அதிகரிக்கப்பட வேண்டும். கைவருடிகள் மற்றும் வன்முறை அரசியலுக்கு முடிவு காணப்பட வேண்டும்.– என்று அந்த அறிக்கையில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளது. (ற–14)

# மஹிந்த பரப்புரைக்கு 2 பில். ரூபா செலவு!

கொழும்பு, ஜன.19
முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தனது தேர்தல் பரப்புரைகளுக்காக, 2பில்லியன்ரூபா அரச பணத்தைச் செலவிட்டுள்ளார் என்று, நிதியமைச்சு அதிகாரிகளைஆதாரம்காட்டிக் கொழும்பு ஆங்கில வாரஇதழ் ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.

ஜனாதிபதித் தேர்தல் பரப்புரைக்காக, அச்சு மற்றும் இலத்திரனியல் ஊடக விளம்பரங்களுக்கு மகிந்த ராஜபக்ஷ மில்லியன் கணக்கான ரூபா பணத்தைச் செலவிட்டிருந்தார் என்றும் அச்சு மற்றும் இலத்திரனியல் ஊடகங்களில் விளம்பரம் செய்வதற்காக, அவர் 2 பில்லியன் ரூபாவைச் செலவிட்டிருந்தார் என்றும் தெரிவிக்கப்படுகின்றது.

அதேவேளை, அவரை எதிர்த்துப் போட்டியிட்ட, மைத்திரிபால சிறிசேன, 676 மில்லியன் ரூபாவை விளம்பரங்களுக்காகச் செலவிட்டிருந்தார் என்று கூறப்படுகின்றது.

தொலைக்காட்சிகளில் விளம்பரங்களை ஒளிபரப்புச் செய்வதற்காக மட்டும், மகிந்த ராஜபக்ஷ 1பில்லியன்ரூபாவைசெலவு செய்திருந்தார்என்றும்வானொலிகளில் விளம்பரங்களை ஒலிபரப்புவதற்கு, 330 மில்லியன் ரூபாவையும், எல்லா நாளிதழ்களிலும் முழுப்பக்க விளம்பரங்களை பிரசுரிப்பதற்கு 700 மில்லியன் ரூபாவையும் மகிந்த ராஜபக்ஷ செலவிட்டிருந்தார் என்றும் தெரிவிக்கப்படுகின்றது.

தயாரிப்புச் செலவை உள்ளடக்காமல், இந்த விளம்பரங்களுக்காகச் செலவிடப்பட்ட மொத்த தொகை 2.03 பில்லியன் ரூபாவாகும். அதற்காகச் செலவிடப்பட்டது அரச நிதியாகும். அதிபர் செயலகம் மற்றும் அமைச்சுக்களுக்கு ஒதுக்கப்பட்ட நிதியே இதற்குப் பயன் படுத்தப்பட்டது.

எனினும், தயாரிப்புச் செலவை உள்ளிடக்கியதான, விளம்பரச் செலவுகள் இதைவிடவும் அதிகமாகவே இருக்கும் என்று நிதி அமைச்சு அதிகாரிகள் சுட்டிக்காட்டியுள்ளனர் என்றும் அந்த வார இதழ் மேலும் தெரிவித்துள்ளது.

மகிந்த ராஜபக்ஷவுக்கு ஆதரவாக உள்ளூர் ஊடகங்களில் மட்டுமன்றி, வெளிநாட்டு தமிழ், ஆங்கில, சிங்கள இணைய ஊடகங்களிலும் விளம்பரங்கள்வெளியிடப்பட்டிருந்தன. தமிழ்நாட்டில் இருந்து வெளியாகும் நாளிதழ்களின் இணையங்களிலும் கூட மகிந்த ராஜபக்ஷவின் தேர்தல்விளம்பரங்கள்பிரசுரிக்கப்பட்டன என்றும் கூறப்படுகின்றது.(ற)

# செய்திகள்

## தேர்தல் சட்டத்தை மீறியோருக்கு எதிராகச் சட்ட நடவடிக்கை

### தேர்தல்கள் ஆணையாளர் தெரிவிப்பு

கொழும்பு, ஜன.19

தேர்தல்சட்டங்களைமீறிச்செயற் பட்டவர்களுக்கு எதிராக வழக் குத் தொடரப்படும் என்று தேர் தல்கள் ஆணையாளர் மஹிந்த தேசப்பிரிய தெரிவித்துள்ளார்.

கடந்த ஜனாதிபதித் தேர்தலில் விதிமுறைகளை மீறிச் செயற் பட்ட மற்றும் வன்முறைகளில் ஈடுபட்ட அனைத்து நபர்களுக் கும், நிறுவனங்களுக்கும் எதி ராக நடவடிக்கை எடுக்க வேண் டும் என்று தேர்தல் கண் காணிப்பு அமைப்புகளும், அரசி யல் கட்சிகளும் தேர்தல்கள் ஆணையாளரிடம் கோரிக்கை விடுத்திருந்தன. அதைக் கருத் தில் கொண்டே தேர்தல்கள் ஆணையாளர் இவ்வாறு தெரி வித்துள்ளார்.

தேர்தல் காலப்பகுதியில் நடை பெற்றவன்முறைகள், சட்ட மீறல் கள் தொடர்பில் ஆராயும் பணி கள் தற்போது ஆரம்பித்துள்ளன என்றும்– அவை குறித்து முறைப்பாடு செய்தவர்களுடன் கலந்துரையாடல் ஒன்றை நடத் தவும் தேர்தல்கள் ஆணை யாளர் திட்டமிட்டுள்ளார் என்றும் தெரியவருகின்றது. (ற)

31 ஆம் நாள் அந்தியேட்டி சபிண்டீகரண ஆத்மசாந்திப் பிரார்த்தனை அழைப்பு

அன்னை மடியில் ★ 15 . 04 . 1942



இறைவன் அடியில் ★ 22 . 12 . 2014

### அமரர் திருமதி கனகசபை திருமஞ்சம்

(மாளிகைத்திடல், திருக்கேதீஸ்வரம், அடம்பன், மன்னார்)

திங்களொன்று ஓடிச்சென்றதுவே - எம்
அன்புத் தெய்வம் எம்மை விட்டகன்று
இணையில்லா நல்வாழ்வை எமக்களித்து நீங்கள்
இறையடி சேர்ந்தீரே!
கண்களில் கண்ணீர் வழிந்தோட - சென்ற
திசைதனைப் பார்த்து ஏங்கி நிற்கின்றோம்
மீண்டும் எப்போது எமைநாடி வருவீர் என்று ....

அன்னாரின் அந்தியேட்டிக்கிரியைகள் (19.01.2015)- திங்கட் கிழமை காலை 9.00 மணியளவில் மன்னார் திருக்கேதீஸ்வரம் பாலாவி தீர்த்தக் கரையில் நடைபெற்று, வீட்டுக்கிரியைகள் 21.01.2015 புதன்கிழமை முற்பகல் 10 மணிக்கு கனசெத்தினம் அவர்களின் இல்லத்தில் நடை பெறும். தங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து அன்னாரின் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் வீட்டுக்கிரியைகளிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதிய போசனத்திலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக் கின்றோம்.

T.P: 077 2603362,
023 323 8012

குடும்பத்தினர்.

## மேர்வினின் மீதும் விசாரணை தேவை

### சுனில் ஹந்துன்நெத்தி எம்.பி. வலியுறுத்து

கொழும்பு, ஜன.19

மஹிந்த ராஜபக்ஷ குடும்பத் துக்கு எதிராக முறைப்பாடு செய் தார் என்பதற்காக முன்னாள் அமைச்சர் மேர்வின் சில்வா வுக்கு எதிரான விசாரணை களை நிறுத்தக் கூடாது என்று தெரிவித்துள்ளார் ஜே.வி.பியின் நாடாளுமன்ற உறுப்பினர் சுனில் ஹந்துன்நெத்தி.



சுனில் ஹந்துன்நெத்தி.

மேர்வின் சில்வா நேற்றுமுன் தினம் முன்னாள் பாதுகாப்புச் செயலர் கோத்தபாய ராஜபக்ஷ மற்றும் முன்னாள் பொருளா தார அபிவிருத்தி அமைச்சர் பஸில் ராஜபக்ஷ ஆகியோ ருக்கு எதிராக முறைப்பாடு பதிவு செய்திருந்தார்.

கொலைச்சம்பவங்கள், வெள்ளை வான் கடத்தல்களுடன் கோத் தப்பாயவுக்கு தொடர்பு இருக் கின்றது என்று குற்றஞ்சாட்டி யிருந்த அவர், பஸில் பெரும் ஊழல் மோசடிகளை மேற் கொண்டிருந்தார் என்றும் தமது முறைப்பாட்டில் தெரிவித்திருந் தார்.

இந்தக் குற்றச்சாட்டுக்கள் தொடர் பில் கிரமமான முறையில் விசா ரணைகள் நடத்தப்பட வேண் டும் என்று வலியுறுத்தியுள்ள ஹந்துன்நெத்தி, உரிய விசார ணைகள் மேற்கொள்ளப்படாது மேர்வினின் கருத்துக்களை ஏற் றுக்கொள்ள முடியாது என்று தெரிவித்துள்ளார். அத்துடன் மேர்வினின் குற்றச் செயல்கள் குறித்தும் விசாரணைகள் நடத் தப்பட வேண்டும் என்றும் அவர் வலியுறுத்தினார். (ற)


NIPPON புதுவருட கொடுப்பனவுகள்




Rs.32,500/= 32" அங்குல LED தொலைக்காட்சி ஒன்றை கொள்வனவு செய்யும் போது Nippon Subwoofer ஒன்று இலவசம்

32" LED தொலைக்காட்சி- Full High Definition

10 உள்ளம்சங்களை கொண்ட 32" அங்குல LED தொலைக்காட்சி

- TV Antenna
- AV1 - VRC Player
- AV2 - Cable TV
- HDMI - Blue Ray
- HDMI2 - LapTop
- HDMI3 - DVD player
- S.Video - Video Camera
- VGA (PC) - Computer
- YPBPR (RGB) Input
- USB for MP3/MP4/AV Video/Card Reader

2 வருட உத்தரவாதம்

கையிருப்பிலுள்ள வரை மட்டுமே

LANKA NIPPON

#18, Keyzer Street, Colombo 11
Tel: 2437735, 5230975 | Fax: 2437687 | info@lankanippon.com | lankanippon.com


## அமைச்சர்களின் 'பந்தாவுக்கு' ஆப்பு!

### ரணில் கண்டிப்பான உத்தரவு

அமைச்சர்கள் அமைச்சுக்களின் செலவுகளை யும், தங்களது செலவுகளையும் கட்டுப்படுத்த வேண்டும். எந்தவொரு அநாவசிய செலவுக ளும் செய்யக் கூடாது என்று பிரதமர் ரணில் விக்கிரமசிங்க கடுமையான உத்தரவைப் பிறப்பித்துள்ளார்.

அலரிமாளிகையில் தனது கடமைகளை ஆரம் பித்த அன்றைய தினமான வெள்ளிக்கிழமை மாலை யிலேயே ரணில் விக்கிரமசிங்க ஐக்கிய தேசியக் கட்சி யின் அமைச்சர்கள், பிரதி அமைச்சர்கள், அமைச்சரவை அந்தஸ்து அற்ற அமைச்சர்களைச் சந்தித்துக் கலந்துரையாடினார். அதன்போதே இந்தக்கண்டிப்பான உத்தரவை அவர் பிறப்பித்தார்.

நூறு நாள் வேலைத் திட்டத்தை சிறப்பாக நடை முறைப்படுத்த வேண்டும். 29 ஆம் திகதி இடைக் கால வரவு – செலவுத் திட்டம் சமர்ப்பிக்கப்பட வேண்டும். அதில் எந்த மாற்றமும் இல்லை. 20 ஆம் திகதி நாடாளுமன்ற அமர்வு இடம்பெறும். நாடாளுமன்ற அமர்வு இடம்பெறும் போது, அமர்வு ஆரம்பித்ததிலிருந்து அமர்வு முடியும் வரையில் முழு நேரமும் நாடாளுமன்றத்தில் – சபையில் – இருக்க வேண்டும். அதேவேளை, சபை யில் கேட்கப்படும் கேள்விகளுக்கு உடனடியாகப் பதில் வழங்கப்பட வேண்டும். மக்கள் வரிப் பணத் தில் நாம் ஆட்சி நடத்துகின்றோம். அந்த மக்கள் மீது சுமைகளைத் திணிக்கக் கூடாது. அமைச்சர்கள் தங்களதோ, அமைச்சுக்களினதோ அநாவசிய செலவுகளை குறைத்துக் கொள்ள வேண்டும். எந்தளவு தூரத்துக்குப் பணத்தைச் சேமிக்க முடியுமோ அந்தளவுக்குப் பணத்தைச் சேமிக்க வேண்டும் என்று குறிப்பிட்டார். (ற–5)

## அபேவர்த்தன குடும்பத்துக்கு எதிராக ஆர்ப்பாட்டம்

கொழும்பு, ஜன.19

முன்னாள் அமைச்சர் லக்ஷ்மன் யாப்பா அபேவர்த்தன மற்றும் தென் மாகாணசபை உறுப்பினர் பசந்த யாப்பா அபேவர்த்தன ஆகியோரை அரசில் இணைத் துக்கொள்ளக் கூடாது என்று வலியுறுத்தி, மாத்தறை திஹ கொட பிரதேச மக்கள் ஆர் பாட்டமொன்றை நடத்தியுள் ளனர்.

அத்துடன் ஐக்கிய தேசியக் கட்சியின் ஆதரவாளர்கள் சிலர் குறித்த நகரத்திலுள்ள உயர மான கட்டடத்தில் ஏறி உண்ணா விரதத்தில் ஈடுபட்டனர்.

அதேவேளை, முன்னாள் அமைச் சர் லக்ஷ்மன் யாப்பா அபேவர்த் தன மற்றும் தென் மாகாணசபை உறுப்பினர் பசந்த யாப்பா அபே வர்தன ஆகியோரை அரசில் இணைத்துக்கொள்ள கூடாது எனக் கோரிக்கை விடுத்து மாகந்துர மற்றும் ஊறுபொக்க பிரதேசங்களிலும் நேற்றுமுன் தினம் எதிர்ப்பு ஆர்ப்பாட்டங்கள் முன்னெடுக்கப்பட்டதாகத் தெரி விக்கப்படுகின்றது. (ற)

# தொடர்ச்சிகள்

## தேசத்துக்கு மகுடம் நடத்தப்பட மாட்டாது

கொழும்பு, ஜன.19

2015 ஆம் ஆண்டு தேசத்திற்கு மகுடம் (தெயட்ட கிருள) எனும் கண்காட்சி நடத்தப்படமாட்டாது என்று தெரிவிக்கப்படுகின்றது. இந்தக் கண்காட்சி, சுதந்திர தினத்துக்கு பின்னர் ஐக்கிய மக்கள் சுதந்திர கூட்டமைப்பு அரசால் கடந்த 2007ஆம் ஆண்டு முதல் 2014ஆம் ஆண்டுவரையும் நடத்தப்பட்டது.

2007,2008 மற்றும் 2009ஆம் ஆண்டுகளில் பண்டாரநாயக்க சர்வதேச மாநாட்டு மண்டபம் மற்றும் வளாகத்திலும் 2010ஆம் ஆண்டு கண்டியிலும் 2011ஆம் ஆண்டு மொனராகலையிலும் 2012ஆம் ஆண்டு அநுராதபுரத்திலும் 2013ஆம் ஆண்டு கிழக்கு மாகாணத்திலும் 2014ஆம் ஆண்டு குளியாப்பிட்டியவிலும் நடத்தப்பட்டது.

2015ஆம் ஆண்டு மாத்தறையில் நடத்துவதற்கு ஐக்கிய மக்கள் சுதந்திர கூட்டமைப்பு அரசு ஏற்கெனவே தீர்மானித்திருந்தது. இந்தநிலையிலேயே இந்தக் கண்காட்சி நடத்தப்பட மாட்டாது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (ற)

## ஊழல்வாதிகளுக்கு எதிராக கடும் நடவடிக்கை எடுக்குக

### மைத்திரி அரசிடம் வலியுறுத்துகின்றது ஜே.வி.பி.

கொழும்பு, ஜன.19

கடந்த ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பு அரசில் ஊழல் மோசடிகளில் ஈடுபட்டவர்களுக்கு எதிராக கடுமையான நடவடிக்கை உடனடியாக எடுக்கப்பட வேண்டுமென்று ஜே.வி.பி. கோரியுள்ளது.

புதிய அரசு உருவாக்கப்பட்டு ஒருவார காலம் கடந்துள்ள நிலையிலும் குற்றச் செயல்கள், ஊழல் மோசடிகளில் ஈடுபட்டவர்களுக்கு எதிராக எவ்வித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை என்றும் அந்தக் கட்சி குற்றம் சுமத்தியுள்ளது.

புதிய அரசு ஊழல் மோசடிகளில் ஈடுபட்டவர்களுக்கு எதிராக நடவடிக்கை எடுக்காவிட்டால் வீதியில் இறங்கி போராட்டங்களை நடத்த நேரிடும் என்றும் ஜே.வி.பி. தெரிவித்துள்ளது.

நாள் தோறும் கடந்த அரச உறுப்பினர்களுக்கு எதிராக பெரியளவில் குற்றச் சாட்டுக்கள் சுமத்தப்பட்டு வருகின்றன. முன்னாள் ஜனாதிபதியின் சகோதரர் பஸில் ராஜபக்ஷ உட்பட லஞ்ச ஊழல் குற்றச்சாட்டு சுமத்தப்பட்ட ஐந்து முக்கியஸ்தர்கள் நாட்டை விட்டு வெளியேறிச் சென்றுள்ளனர் என்று ஜே.வி.பி. சுட்டிக்காட்டியுள்ளது.

லஞ்ச ஊழல் மோசடிகள் தொடர்பில் குற்றம் சுமத்தப்பட்டவர்கள் நாட்டின் பிரதான விமான நிலையத்தின் ஊடாகவே நாட்டை விட்டு வெளியேறிச் சென்றுள்ளனர் என்று அரசால் நிறுவப்பட்டுள்ள ஆலோசனை சபைக் கூட்டத்தில் தொடர்ச்சியாக ஜே.வி.பி இது குறித்து கேள்வி எழுப்பும் எனவும் அந்தக் கட்சி மேலும் தெரிவித்தது.

பொதுமக்களின் பணத்தைச் சுரண்டிய நபர்களுக்கு எதிராக கடுமையான நடவடிக்கை எடுக்கப்பட வேண்டுமென புதிய அரசுக்கு மக்களுடன் இணைந்து அழுத்தம் கொடுக்கப் போவதாகவும் ஜே.வி.பி தெரிவித்துள்ளது. (ற)

## மஹிந்த பாலசூரிய அபிதாபி பறந்தார்

கொழும்பு, ஜன.19

சட்டம் ஒழுங்கு அமைச்சின் முன்னாள் செயலாளர் மஹிந்த பாலசூரிய நாட்டை வெளியேறியுள்ளார். அவர் நேற்றுக் காலை அபுதாபி நோக்கி புறப்பட்டுச் சென்றுள்ளார்.

கடந்த 8ஆம் திகதி நடைபெற்ற ஜனாதிபதி தேர்தலின் போது இராணுவ சூழ்ச்சித் திட்டமொன்று முன்னெடுக்கப்பட்டதாகக் குற்றம் சுமத்தப்பட்டிருந்தது. முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ, முன்னாள் பாதுகாப்புச் செயலாளர் கோதபாய ராஜபக்ஷ ஆகியோர் இந்த சூழ்ச்சித் திட்டத்தை முன்னெடுத்ததாகத் தெரிவிக்கப்படுகிறது.

இந்த இராணுவ சூழ்ச்சித் திட்டத்தின் மூலம் நாட்டின் ஆட்சி அதிகாரத்தை தக்க வைத்துக் கொள்ளும் முனைப்புக்களின் முக்கிய சூத்திரதாரிகளில் ஒருவராக மஹிந்த பாலசூரிய கருதப்படுகின்றார். கடந்த 7ஆம் திகதி சந்தேகத்திற்கு இடமான முறையில் சில பொலிஸ் அதிகாரிகளை அழைத்து கூட்டமொன்றை நடத்தியதாகத் தெரிவிக்கப்படுகிறது. இந்த சூழ்ச்சித் திட்டம் குறித்து விசாரணை நடத்துமாறு சட்டமா அதிபர் புலனாய்வுப் பிரிவினருக்கு அறிவுறுத்தல் விடுத்துள்ள நிலையில், மஹிந்த பாலசூரிய நாட்டை விட்டு வெளியேறிச் சென்றுள்ளார். (ற)

## மஹிந்தவின் பொருள்களோடு இரு கொள்கலன்கள் சிக்கின

ஜனாதிபதி மாளிகையிலிருந்த சில பொருள்கள் அடங்கிய இன்னும் இரண்டு கொள் கலன்கள் கைப்பற்றப்பட்டுள்ளன என்று பொலிஸ் தலைமை அலுவலகம் அறிவித்துள்ளது.

பேலியகொடை பொலிஸ் நிலையத்துக்கு கிடைத்த தகவல்களை அடுத்தே இந்த கொள்கலன்கள் இரண்டும் கைப்பற்றப்பட்டுள்ளன என்று பொலிஸார் தெரிவித்தனர். பேலியகொடை– நீர்கொழும்பு வீதியிலுள்ள ஓரிடத்தில் வைத்தே இவ்விரு கொள்க்கலன்களும் கைப்பற்றப்பட்டுள்ளன. அவ்விரு கொள் கலன்களிலும் ஆடை கள், மர தளபாடங்கள் மற்றும் நினைவுச் சின்னங்கள் இருந்துள்ளன.

அந்தக் கொள் கலன்களுடன் சென்ற அதிகாரிகளிடம் இதுதொடர்பில் விசாரணை நடத்தியபோது, அது முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ மற்றும் அவருடைய குடும்பத்தின் தனிப்பட்ட பொருள்கள் என்றும் தெரிவித்துள்ளனர்.

இவை தொடர்பிலான மேலதிக விசாரணைகளை பேலியகொடை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர் என்றும் பொலிஸ் தலைமையகம் அறிவித்துள்ளது. (ற)

உதயன் விளம்பரத் தொடர்புகளுக்கு
advt@uthayan.com
0215671111

## தொடர்ச்சிகள்

### வடக்கில் இருந்து

கண்டியில் பௌத்த பீடங்களின் மகாநாயக்க தேரர்களைச் நேற்றுச் சந்தித்துப் பேசியபோது அவர் இதனைத் தெரிவித்தார்.

"ஜனாதிபதித் தேர்தலில் மைத்திரிபால வெற்றி பெற்றதும், வடக்கிலிருந்து படைகள் அகற்றப்படும் என்று பல்வேறு பொய்யான அறிக்கைகளை சிலர் வெளியிட்டனர். நாடு பிளவுபடுவதை எமது புதிய அரசோ, ஜனாதிபதி மைத்திரிபாலவோ அனுமதிக்க மாட்டார். இராணுவத்தை வடக்கில் இருந்து வெளியேற்றுவதில்லை என்பதில் ஜனாதிபதி தெளிவான நிலைப்பாட்டில் இருக்கின்றார். படையினரை புதிய அரசு கௌரவமாக நடத்துவதுடன், அவர்களுக்கான வசதிகளையும் செய்து கொடுக்கும்" என்றும் அவர் மேலும் தெரிவித்தார். (உ–5)

### கோத்தபாயவால்

துப்பாக்கிகள் மீட்கப்பட்டுள்ளன" என்று பொலிஸ் ஊடகப் பேச்சாளர் அஜித் ரோகண தெரிவித்தார்.

ஆயுதங்களுடன் ஒரு கப்பல் காலித் துறை முகத்தில் தரித்து நிற்பதாகக் கிடைத்த தகவலையடுத்து பொலிஸார் தேடுதல் நடத்தினர். குறித்த கப்பல், மாகாநுவர நவுகாவ என்ற பெயரில், இலங்கையில் பதிவு செய்யப்பட்டுள்ளது. அதில் இருந்த 12 கொள்கலன்களில் ஆயுதங்கள் இருந்துள்ளன.

கைப்பற்றப்பட்ட ஆயுதங்களில், ரி–56 துப்பாக்கிகள் 84, ஏனையவை அரை தன் னியக்க மற்றும் தன்னியக்கத் துப்பாக்கிகள் என்று பொலிஸ் வட்டாரத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இது தொடர்பாக மேலதிக விசாரணைகள் இடம்பெற்று வருவதாகவும் பொலிஸார் தெரிவித்தனர். (உ–5)

### ரூபா 5 ஆயிரம்

அதிகரிக்கப்படும். ஓய்வூதியர்களுக்கு 3 ஆயிரத்து 500 ரூபா ஓய்வூதிய இடைக் காலக் கொடுப்பனவு வழங்கப்படும்" என்று நிதி அமைச்சர் மேலும் தெரிவித்தார்.

இதேவேளை, தற்போதைய அரசு அறி வித்துள்ள 100 நாள் வேலைத் திட் டத்தை நடைமுறைப்படுத்த 89 ஆயிரம் கோடி ரூபாவாவது தேவைப்படும் என எதிர்க்கட்சிகளில் ஒன்றான பவித்திரு ஹெல உறுமய வின் தலைவர் கம்மன்பில தெரிவித்துள்ளார். (உ–5)

### தேர்தலில்

தெரிவித்துள்ளது.

சதி முயற்சி தொடர்பில் வெளிவிவகார அமைச்சர் மங்கள சமரவீர குற்றப்புல னாய்வுத் திணைக்களத்தில் சில நாள்களுக்கு முன்னர் முறைப்பாடு செய்திருந் தார். அதனடிப்படையில் பொலிஸார் விசாரணைகளை ஆரம்பித்திருந்தனர்.

எதிர்வரும் சில தினங்களில் இந்த விவ காரம் தொடர்பில் வாக்குமூலங்களைப் பதிவுசெய்வதற்கும், அதன் பின்னர் சம்பவத்துடன் தொடர்புடையவர்கள் மீது விசாரணைகள் முன்னெடுக்கப்பட உள்ளது என்றும் தெரிவிக்கப்பட்டது.

தேர்தல் முடிவுகள் வெளியாகிக் கொண்டி ருக்கும் போது பெறுபேறுகளின் அடிப்ப டையில் தான் தோல்வியைத் தழுவுவதாக அறிந்த மஹிந்த தேர்தல் முடிவுகளை இடைநிறுத்துவதற்கும் அவசரகால நிலையை உருவாக்கவும் தன்னால் இயன் றளவு நடவடிக்கைகளை முன்னெடுத்தார் என்றும், ஆனால் அந்த முயற்சி பின்னர் கைகூடாமல்போகவே அந்தத் திட்டத்தைக் கைவிட்டார் என்றும் தற்போதைய ஆளுங் கட்சியின் பலர் தெரிவித் துள்ளனர். (ற–4)

### புதிய

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தலைமையி லான புதிய அரசு கடந்த 9 ஆம் திகதி பதவி யேற்றிருந்தது. அதன் கன்னி நாடாளு மன்ற அமர்வே நாளை நடைபெறவுள்ளது. இதன் போது புதிய அரசு பெரும் பான்மையை நிரூபிக்கும் என்று தெரிவிக் கப்படுகின்றது.

அதேவேளை, கடந்த 12 ஆம் திகதி பதவி யேற்ற அமைச்சரவையின், முதலாவது அமைச்சரவைக் கூட்டம் நாளை மறுதினம் புதன் கிழமை நடைபெறவுள்ளது. ஜனாதி பதி மைத்திரிபால மற்றும் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க ஆகியோர் இதில் பங்கெடுப்பர் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (ற–5)

### 100 நாள்

மேலாக உள்ள பாலம் கடந்த காலங்க ளில் உடைந்திருந்தது. அதனை நிர்மாணிப் பதற்கான பணியே 100 நாள் திட்டத்தில் முதலாவதாக ஆரம்பிக்கப்பட்டுள்ளது. 90 லட்சம் ரூபா செலவில் இந்த பாலம் நிர்மாணிக்கப்படவுள்ளது. அதற்கான அடிக்கல் நேற்று நடப்பட்டது.

பாலத்துக்கான அடிக்கல் நடும் விழா நுவரெலியா மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரும் இராஜாங்க கல்வி அமைச்சருமான வீ.இராதாகிருஷ்ணன் தலைமையில் நடைபெற்றது. அதில் அமைச்சு அதி காரிகள், திணைக்களங்களின் அதிகாரிகள் எனப் பலர் கலந்து கொண்டனர்.

கடந்த பல மாதங்களாக அந்தப் பாலம் திருத்தப்படாது இருந்த நிலையிலேயே புதிய அரசு அதனைத் திருத்தும் பணியை ஆரம்பித்துள்ளது. (ற–4)

**அறை வாடகைக்குத் தேவை**

A/L மாணவரொருவருக்கு உணவுடன் வீட்டில் அறையொன்று நாவலர் வீதிக்கருகில் உடன் தேவை (55973) **தொடர்பு : 077 727 5294**

**தை அமாவாசை தினம்**

20.01.2015 செவ்வாய்க்கிழமை காலை 6.00 மணிக்கு திருக்கேதீஸ்வரநாதனுக்கு அபிஷேகம் இடம்பெற்று அதனைத் தொடர்ந்து விசேட பூசை இடம்பெற்று வசந்த மண்டப பூசை இடம்பெறும். தொடர்ந்து எம்பெருமான் கௌரி அம்பாள் சகிதம் பாலாவிக் கரையில் தை அமாவாசை தீர்த்தம் ஆடுவார். பகல் பூசையைத் தொடர்ந்து அன்னதானம் வழங்கப்படும். இந்த நிகழ்வை யாழ்ப்பாணம் அகில இலங்கை விஸ்வகர்மகுல சங்கம் ஆண்டுதோறும் நடத்தி வருகின்றனர். தீர்த்த உற்சவத்தில் அனைவரும் கலந்து எம்பெருமானின் இஷ்ட சித்திகளைப் பெற்றுய்யும் வண்ணம் கேட்டுக்கொள்கின்றோம். (55978)

**அகில இலங்கை விஸ்வகர்மகுல சங்கம்**

**மரண அறிவித்தல்**



**திருமதி அருளம்மா (இரத்தினம்) செபஸ்தியாம்பிள்ளை**

நாவாந்துறை கெனடி வீதியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி அருளம்மா செபஸ்தியாம்பிள்ளை கடந்த (17.01. 2015) சனிக்கிழமை கர்த்தருக்குள் நித்திரையடைந்து விட்டார்.

அன்னாரின் நல்லடக்க ஆராதனை இன்று (19.01.2015) திங்கட்கிழமை பி.பகல் 2 மணியளவில் இலங்கை பெந்தகோஸ்தே சபைச் சாலையில் நடைபெற்று பூதவுடல் கொட்டடி சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

077 6184717 தகவல்: குடும்பத்தினர்

## விளையாட்டு

# ஸ்ரார்க்கின் புயலில் வீழ்ந்தது இந்தியா



முத்தரப்பு தொடரின் இரண்டாவது ஆட்டத்தில் ஸ்ரார்க்கின் வேகம் கைகொடுக்க 4 இலக்குகளால் இந்தியாவை வீழ்த்தி இறுதிச் சுற்றுக்கு முன்னேறும் வாய்ப்பை அதிகரித்துக் கொண்டது ஆஸ்திரேலியா.

இந்தியா, ஆஸ்திரேலியா மற்றும் இங்கிலாந்து அணிகள் பங்குபற்றும் முத்தரப்பு ஒருநாள் தொடரின் இரண்டாவது ஆட்டம் ஆஸ்திரேலியா மற்றும் இந்தியா அணிகளுக்கிடையில் நேற்றையதினம்ஆஸ்திரேலியாவின்மெல் பேர்ன் மைதானத்தில் ஆரம்பமானது.

நாணயச்சுழற்சியில் வெற்றிபெற்ற இந்தியஅணி முதலில் துடுப்பாடத் தீர்மானித்தது. ஆரம்ப வீரரான சிக்கர் தவான் முதல் பந்துப்பரிமாற்றத்திலேயே 2 ஓட்டங்களை மட்டும் பெற்று வெளியேறினார். தொடர்ந்து ரஹானே 12 ஓட்டங்களுடனும் கோஹ்லி 9 ஓட்டங்களுடனும் வெளியேறி அதிர்ச்சி மேல் அதிர்ச்சி கொடுத்தனர். இதனால் இந்திய அணி 59 ஓட்டங்களை மட்டுமே பெற்றிருந்த வேளையில் தனது முன்னணி வீரர்கள் மூவரை இழந்து தவித்தது.

மறுமுனையில் நிதானத்தை வெளிப்படுத்திக் கொண்டிருந்த றோஹித் சர்மாவுக்கு ரெய்னா கைகொடுக்க இருவரும் இணைந்து அணியை சரிவில் இருந்து மீட்கத் தொடங்கினர். இருவரும் அரைச் சதம் கடந்து இணைப்பாட்டமாக 126 ஓட்டங்களை குவித்தனர் அணி 185 ஓட்டங்களைப் பெற்றிருந்தபொழுது ரெய்னா 51ஓட்டங்களுடன் வெளியேறினார். தொடர்ந்து வந்த டோனி பெரியதளவில் செயற்படவில்லை. ஆனாலும் மறுமுனையில் றொஹித் அதிரடியை கையிலெடுத்து சதம் கடந்து அசத்தினார். தொடர்ந்தும் சிறப்பாக செயற்பட்ட அவர் 138 ஓட்டங்களுடன் வெளியேறினார். அடுத்தடுத்து வந்த பந்துவீச்சாளர்களும் நிலைக்கத் தவறி வரிசையில் வெளியேற இந்திய அணி 50 பந்துப்பரிமாற்றங்கள் நிறைவில் 8 இலக்குகளை இழந்து 267 ஓட்டங்களை பெற்றது.

பந்துவீச்சில் ஆஸ்திரேலியா சார்பாக ஸ்ரார்க் 6 இலக்குகளையும் சாந்து, பல்க்நெர்தலா ஓர் இலக்கினைக் கைப்பற்றினர்.

268 ஓட்டங்களைப் பெற்றால் வெற்றி என்னும் எட்டக்கூடிய இலக்கினை நோக்கி பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய ஆஸ்திரேலிய அணிக்கு ஆரம்ப வீரர்களான பின்ச் மற்றும் வோர்ணர் சிறந்த தொடக்கம் கொடுத்தனர். அணியின் ஓட்டம் 51 ஆக இருந்தபோது வோர்ணர் 24 ஓட்டங்களுடன் வெளியேறினார். தொடர்ந்து வந்த வோட்சன் பின்ச்சுடன் இணைந்து நிதானத்தை கையிலெடுக்க அணி வலுவான நிலையை நோக்கி நடைபோட ஆரம்பித்தது. அணியின் ஓட்ட எண்ணிக்கை 115 ஆக இருந்த பொழுது வோட்சன் 41 ஓட்டங்களுடன் வெளியேறினார். தொடர்ந்து பின்ச் 96 ஓட்டங்களுடன் வெளியேற ஆஸ்திரேலியா அணி 39.4 பந்துப்பரிமாற்றங்கள் நிறைவில் 216 ஓட்டங்களுக்கு 3 இலக்குகளை மட்டுமே இழந்து இலகுவாக வெற்றியை பதிவுசெய்யக்கூடிய நிலையில் இருந்தது. இருப்பினும் சிமித், பெய்லி, மக்ஸ்வெல் சீரான இடைவெளியில் ஆட்டமிழக்க ஆட்டம் சூடு பிடிக்கத் தொடங்கியது.

கடைசி நேரத்தில் மிகச்சிறப்பான களத்தடுப்பு மற்றும் துல்லியமான பந்துவீச்சின் மூலம் இந்திய அணி திடீரென எழுச்சிபெற்றது. ஆனாலும் களத்தில் நின்ற கெடின் அடுத்தடுத்து நான்குகளை விரட்ட ஆஸ்திரேலிய அணி 49 பந்துப்பரிமாற்றங்கள் நிறைவில் 6 இலக்குகளை இழந்து 269 ஓட்டங்களை பெற்று திரில் வெற்றியைப் பதிவுசெய்தது.

பந்துவீச்சில் இந்தியா சார்பாக யாதேவ் 2 இலக்குகளையும் அஸ்வின், பட்டேல், புவனேஸ் மற்றும் சமிதலா 1 இலக்கையும் கைப்பற்றினர்.

ஆட்டநாயகனாக ஸ்ரார்க் தெரிவானார். முத்தரப்பு தொடரின் மூன்றாவது ஆட்டத்தில் இந்தியா, இங்கிலாந்து அணிகள் நாளை பிறிஸ்பெய்னில் மோதுகின்றன. ஆட்டம் இலங்கை நேரப்படி காலை 8.50 மணிக்கு ஆரம்பமாகும்.



(ற–ரி)

## இந்தியாவை வீழ்த்தி வரலாறு படைப்போம்



எதிர்வரும் உலகக்கிண்ண தொடரில் இந்திய அணியை பாகிஸ்தான் வீழ்த்தி வரலாறு படைக்கும் என்று பாகிஸ்தான் முன்னாள் வீரர் இன்சமாம் உல் ஹக் நம்பிக்கை தெரிவித்துள்ளார்.

அடிலெய்டில் இந்தியா தனது உலகக்கிண்ண முதல் ஆட்டத்தில் பாகிஸ்தானை எதிர்கொள்கிறது. இதுவரை நடைபெற்ற உலகக்கிண்ண தொடர்களில் பாகிஸ்தான் இந்தியாவை வீழ்த்தியதில்லை. அதனை இந்த உலகக்கிண்ண தொடரில் பாகிஸ்தான் மாற்றியமைக்கும் என்கிறார் இன்சமாம்.

லாகூரில் இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பில் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

'என்னுடைய கிரிக்கெட் வாழ்நாள் முழுதும் இந்திய அணியை பல ஆட்டங்களில் வீழ்த்தியிருக்கிறோம், ஆனால், உலகக்கிண்ண தொடர்களில் அவர்களை வீழ்த்த முடியாமல் போயுள்ளது. இது எனக்கு ஒரு பெரிய ஏமாற்றமாகவே உள்ளது. இந்த பாகிஸ்தான் அணி உலகக்கிண்ண தொடரில் இந்தியாவை வீழ்த்தும் என்று நான் நம்புகிறேன்.

இரு அணிகளிடத்திலும் பலம், பலவீனம் இரண்டும் இருப்பதால், விறுவிறுப்பான, பதட்டமான ஆட்டத்தை எதிர்பார்க்கலாம்.' – என்று அவர் தெரிவித்துள்ளார்.

(ற–ரி)



# 16 ஆறுகள், 9 நான்குகள் 31 பந்துகளில் அதிரடி சதம்

## 44 பந்துகளில் 149 ஓட்டங்கள் டி வில்லியர்ஸ் தாண்டவம்

தென்னாபிரிக்கா, மேற்கிந்திய தீவுகள் அணிகளுக்கிடையிலான இரண்டாவது ஒருநாள் ஆட்டத்தில் வெறுமனே 31 பந்துகளில் சதம் கடந்து தகர்க்க முடியாத சாதனை படைத்தார் டி வில்லியர்ஸ்.

தென்னாபிரிக்கா மற்றும் மேற்கிந்திய தீவுகளுக்கிடையிலான இரண்டாவது ஒருநாள் ஆட்டத்தில் முதலில் துடுப்பெடுத்தாடிய தென்னாபிரிக்கா அணி 38.9 பந்துப்பரிமாற்றங்கள் நிறைவில் 247 ஓட்டங்களைப் பெற்றிருந்த பொழுது றொஸ்சொவ் ஆட்டமிழந்தார். றொஸ்சொவ்வின் இடத்தினை நிரப்புவதற்காக துடுப்பெடுத்தாட களத்திற்குள் வந்தார் டி வில்லியர்ஸ்.


எதிர்கொண்ட முதல் பந்திலிருந்து அதிரடியை கையிலெடுத்தார். நான்குகள், ஆறுகள் என வான வேடிக்கையினை நிகழ்த்தினார். முதல் 16 பந்துகளில் அரைச் சதத்தைக் கடந்தார். அதிரடி நிறுத்தப்படவில்லை. டி வில்லியர்சை கட்டுப்படுத்த எடுத்த முயற்சிகள் அனைத்தும் தவிடுபொடியாகின. அதிரடி இரட்டிப்பானது. இரசிகர்களின் இரைச்சல், கூக்குரல் எல்லாம் ஒன்றாய் சேர்ந்துவானைப் பிளந்தன. மேற்கிந்திய வீரர்கள் செய்வதறியாது திகைத்து நின்றனர்.

கனவிலும் காணமுடியாத அதிரடி. 9 நான்குகள், 16 ஆறுகள் கிடைத்த பரிசு. 31 பந்துகளை மட்டுமே எதிர்கொண்டு மிக விரைவான அதிரடிச் சதம். சர்வதேச ஆட்டங்களில் அதி விரைவில் பெறப்பட்ட சதம் என்று இதுவரை காலமும் அண்டர்சனுக்கு சொந்தமாக இருந்த சாதனை நேற்றயதினம் டி வில்லியர்ஸுக்கு சொந்தமானது.

சதத்துடன் மட்டும் நின்றுவிடவில்லை ஒருநாள் ஆட்டங்களில் ஒரு இன்னிங்ஸில் தனிநபரால் பெறப்பட்ட அதிக ஆறுகள் என்ற சாதனையை றொகிட் சர்மாவுடன் பகிர்ந்து கொண்டார். இன்னும் ஒரு ஓட்டம் அதிகமாக எடுத்திருந்தால் ஒருநாள் ஆட்டங்களில் மிக விரைவான 150 ஓட்டங்கள் என்ற சாதனையும் பதியப்பட்டிருக்கும். இறுதிப்பந்துப்பரிமாற்றத்தில் எதிர்பாராத விதமாக 149 ஓட்டங்களில் (44 பந்துகளில்) ஆட்டமிழந்து வெளியேறினார். சுருக்கமாகக் கூற வேண்டுமானால் வில்லியர்ஸ் எதிர்கொண்ட பந்துகளில் 60 வீதமானவற்றை எல்லைக்கோட்டுக்கு வெளியேதான் காணவேண்டியிருந்தது.

(ற–ரி)





# ஆஸ்திரேலிய ரென்னிஸ் தொடர் கோலாகல ஆரம்பம்

பிரபல ரென்னிஸ் தொடரான ஆஸ்திரேலிய ஓபன் தொடர், மெல்போர்ண் நகரில் இன்று கோலாகலமாகத் தொடங்குகிறது.
ஆண்டின் முதல் கிராண்ட்ஸ்லாம் தொடர் என்பதால், இதில் வெற்றி பெற்று கோப்பையை கைப்பற்ற முன்னணி வீரர், வீராங்கனைகள் வரிந்துகட்டுகின்றனர். ஆண்கள் ஒற்றையர் பிரிவில் முன்னணி வீரர்கள் நோவாக் ஜோகோவிச் (செர்பியா), ரபேல் நடால் (ஸ்பெயின்), ரோஜர் பெடரர் (சுவிஸ்), நடப்பு சாம்பியன் ஸ்டானிஸ்லாஸ் வாவ்ரின்கா ஆகியோரிடையே கடும் போட்டி நிலவுகிறது.
மகளிர் ஒற்றையர் பிரிவில் நடப்பு சம்பியனான சீன வீராங்கனை நாலி ஓய்வு பெற்றுள்ள நிலையில் அமெரிக்காவின் செரீனா வில்லியம்ஸ், ரஷ்ய நட்சத்திரம் மரியா செரபோவா, சிமோனா ஹாலெப் (ரோமானியா), பெத்ரா குவித்தோவா (செக் குடியரசு), அனா இவானோவிச் (செர்பியா) ஆகியோர் பட்டம் வெல்லும் முனைப்புடன் களமிறங்குகின்றனர்.
மகளிர் இரட்டையர், ஆண்கள் இரட்டையர் மற்றும் கலப்பு இரட்டையர் போட்டிகளுக்கான முதல் சுற்று விவரம் இன்று வெளியிடப்படும். (ற–ரி)

# உலகக்கிண்ண தொடரில் இங்கிலாந்து அணி நீக்கம்?




இங்கிலாந்து அணியை உலகக் கிண்ண தொடரில் இருந்து நீக்குவதற்கான வேலைகளில் ஐ.சி.சி., இறங்கியுள்ளதாக செய்திகள் வெளியாகியுள்ளன.
இங்கிலாந்து உலகக்கிண்ண அணிக்கு தலைவராக, அயர்லாந்தை சேர்ந்த இயான் மார்கன் உள்ளார். இவரைவிட கேரி பேலன்ஸ் (ஜிம்பாப்வே), பென் ஸ்டோக்ஸ் (நியூசிலாந்து) உள்ளிட்ட வீரர்கள் வேறு நாட்டைச் சேர்ந்தவர்கள். வேகப்பந்து வீச்சாளர் ஜோர்டன், மேற்கிந்தியத்தீவுகளின் பார்படாசை சேர்ந்தவர். அதாவது, இங்கிலாந்து உலகக் கிண்ண அணியில் தேர்வு செய்யப்பட்ட வீரர்களில் பலர், பாரம்பரியமாக இங்கிலாந்தை சேர்ந்தவர்கள் அல்ல.
ஐ.சி.சி யின் புதிய விதிப்படி, 'ஒரு நாட்டு அணிக்காக விளையாடும் வீரர், அந்த நாட்டில் 6 வயது, 6 மாதத்தில் இருந்து வசிப்பவராக இருக்க வேண்டும். தொடர்ந்து 12 மாதத்துக்கு மேல், வேறு நாட்டில் தங்கியிருக்கக் கூடாது.' என்றுள்ளது.
சமீபத்தில் அணியில் இருந்து நீக்கப்பட்ட முன்னாள் அணித்தலைவர் அலெஸ்டர்குக் தான் இங்கிலாந்தின் இந்த இரகசிய விடயத்தினை வெளியில் கொண்டு வந்துள்ளார். இதையடுத்து, இந்த முறைப்பாடு குறித்து சர்வதேச கிரிக்கெட் சபை (ஐ.சி.சி.,) தற்பொழுது விசாரிக்க ஆரம்பித்துள்ளது.
இதில் இங்கிலாந்து அணி தவறு செய்திருப்பது நிரூபிக்கப்பட்டால், உலககிண்ண தொடரில் இருந்து நீக்கப்படும் அபாயம் ஏற்பட்டுள்ளது. சில சந்தர்ப்பங்களில் அணியை மாற்றியமைக்க குறைந்த கால அவகாசம் கொடுக்கப்படும். (ற–ரி)



# உலகக்கிண்ண தொடரை ஆவலோடு எதிர்பார்க்கிறேன் - டிராவிட்

உள்வட்டத்துக்குள் 5 பேர் நிற்பது, இரண்டு புதிய பந்துகள் போன்ற புதிய விதிகளால், உலகக் கிண்ண தொடரில் விறுவிறுப்பு அதிகரிக்கும்' என, டிராவிட் தெரிவித்துள்ளார்.
ஐ.சி.சி., சார்பில் 11ஆவது உலகக் கிண்ண தொடர் வரும் பெப்ரவரி 14 முதல் மார்ச் 29 வரை ஆஸ்திரேலியா மற்றும் நியூஸிலாந்து மண்ணில் நடக்கவுள்ளது.
இதுகுறித்து இந்திய அணியின் முன்னாள் அணித்தலைவர் டிராவிட் தெரிவித்ததாவது,
'2011ஆம் ஆண்டின் உலகக் கிண்ண தொடரை விட, ஒருநாள் ஆட்டங்களில் இம்முறை பல புதிய விதிமுறைகள் வந்துவிட்டன. இரண்டு புதிய பந்துகள் பயன்படுத்துவதால், வேகப்பந்து வீச்சாளர்கள் அதிக ஆதிக்கம் செலுத்தலாம். ஆஸ்திரேலிய மைதானங்கள் சற்று பெரியது என்பதால், பவுண்டரிகள் அடிப்பது அவ்வளவு எளிதல்ல.
இது தலைவர்களுக்கு சவாலானது. ஏனெனில், இந்த விதி காரணமாக ஐந்து முக்கிய பந்துவீச்சாளர்கள் அணியில் இருக்க வேண்டிய கட்டாயம் ஏற்படுகிறது. இவர்களை வைத்து கட்டாயம் இலக்குகளை வீழ்த்தியே ஆக வேண்டும். இதுபோன்ற விதிகள் இம்முறை உலகக்கிண்ண தொடரை பெரிதும் எதிர்பார்க்க வைத்துள்ளன.' என்றார். (ற–ரி)



# இந்திய வீரர்கள் ஆஸ்திரேலியாவில்' கலக்க வேண்டும்

ஆஸ்திரேலியாவில் நடைபெறும் உள்ளூர் 'ரி–20' தொடரில் இந்தியாவின் முன்னணி வீரர்கள் அதிக அளவில் பங்கேற்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று ஆஸ்திரேலிய அணியின் முன்னாள் தலைவர் அலன் போர்டர் ஆஸ்திரேலிய கிரிக்கெட் சபையை வலியுறுத்தி உள்ளார்.
ஆஸ்திரேலியாவில் நடக்கும் கழக ரி–20 ஆட்டங்களில் இந்திய வீரர்கள் பெரிதளவில் இடம்பெறுவதில்லை. அவர்களுக்கான வாய்ப்புக்கள் வழங்கப்படாமை குறித்து பலவேறுபட்ட கருத்து முரண்பாடுகள் தோற்றம் பெற்ற பின்னணியிலேயே போர்டர் இதனைத் தெரிவித்தார். (ற–ரி)

# செய்திகள்

## டி வில்லியர்ஸின் சிக்ஸர் மழையில் மூழ்கியது மே.தீவுகள்



டி வில்லியர்ஸின் தாண்டவம் கைகொடுக்க தென்னாபிரிக்கா, மே.தீவுகள் அணிகளுக்கிடையிலான இரண்டாவது ஆட்டத்தில் மே.தீவுகளை 148 ஓட்டங்களால் வெற்றி பெற்று தொடரில் 2:0 என்ற அடிப்படையில் ஆதிக்கம் செலுத்துகின்றது தென்னாபிரிக்கா.

தென்னாபிரிக்கா, மேற்கிந்திய தீவுகள் அணிகளுக்கிடையிலான 5 ஆட்டங்களைக் கொண்ட ஒருநாள் ஆட்டத்தொடரின் இரண்டாவது ஆட்டம் நேற்றையதினம் தென்னாபிரிக்காவின் யொகானேஸ்போர்க் மைதானத்தில் இடம்பெற்றது.

நாணயச்சுழற்சியில் வெற்றிபெற்ற மேற்கிந்திய தீவுகள் அணி முதலில் களத்தடுப்பை தீர்மானித்தது. இதன்படி ஆரம்பவீரர்களாக களமிறங்கிய அம்லா மற்றும் றொஸ்சொவ் அணிக்கு அதிரடியான தொடக்கத்தினை அமைத்துக் கொடுத்தனர். வலுவான இணைப்பாட்டத்தில் இருவரும் சம அளவில் ஓட்டங்களை குவித்துக் கொண்டிருந்தனர். முதல் இலக்குக்காக இணைப்பாட்டமாக 200 ஓட்டங்கள் எட்டப்பட்டன. ஆரம்ப வீரர்கள் இருவரும் சதம் கடந்து அசத்தினார்கள். 38.5 பந்துப்பரிமாற்றங்கள் நிறைவில் தென்னாபிரிக்காவின் ஓட்ட எண்ணிக்கை 247 ஆக இருந்த பொழுது இணைப்பாட்டம் பிரிக்கப்பட்டது. றொஸ்சொவ் 128 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார். வீழ்த்தப்பட்ட இலக்கில் மகிழ்ந்து கொண்டிருந்த மேற்கிந்திய தீவுகள் அணியினருக்கு வில்லியர்ஸ் மூலமாக தான் பேரிடி காத்திருந்தது. வந்த வரத்திலேயே அடித்து நொருக்கினார். 16 பந்துகளில் அரைச்சதம் எட்டினார். 31 பந்துகளில் தனது சதத்தினை நிறைவு செய்தார். அணியின் ஓட்ட எண் ணிக்கை 350 இனைத் தொட்டது. 44 பந்துகளை மட்டுமே எதிர்கொண்டு 149 ஓட்டங்களைக் குவித்து இறுதிப் பந்துப்பரிமாற்றத்தில் வெளியேறினார் டி வில்லியர்ஸ். தென்னாபிரிக்கா அணி 50 பந்துப்பரிமாற்றங்கள் நிறைவில் 2 இலக்குகளை இழந்து 439 ஓட்டங்களை பெற்றது. அம்லா இறுதிவரை ஆட்டமிழக்காது 153 ஓட்டங்களைப் பெற்றார்.

பந்துவீச்சில் மேற்கிந்திய தீவுகள் சார்பாக ரெய்லர், றசல் தலா 1 இலக்கினைக் கைப்பற்றினர்.

440 ஓட்டங்கள் என்னும் எட்டமுடியாத இலக்கினை நோக்கி பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய மேற்கிந்திய தீவுகள் அணிக்கு ஆரம்பவீரர் கெய்ல் 19 ஓட்டங்களுடன் வெளியேறி ஏமாற்றினார். அடுத்த பந்துப்பரிமாற்றத்திலேயே ஜோன்சனும் ஒரு ஓட்டத்துடன் பவிலியன் திரும்ப மேற்கிந்திய தீவின் தோல்வி நிச்சயமானது. மறுமுனையில் போராடிக் கொண்டிருந்த சிமித்திற்கு சாமுவேல்ஸ் கைகொடுக்க இருவரும் இணைந்து வெற்றியினை நோக்கமாக அல்லாது கௌரவமான ஓட்டங்களை நோக்கி அணியை அழைத்துச் சென்றனர். அணியின் ஓட்டங்களின் எண்ணிக்கை 122 ஆக இருந்தபொழுது சிமித் 64 ஓட்டங்களுடன் வெளியேறினார். சிறிது நேரத்திலேயே சாமுவேல்ஸ்சும் ஆட்டமிழக்க அவர்கள் விட்டுச் சென்ற பணியை றம்டின் மற்றும் கார்டெர் இணைந்து ஆரம்பித்தனர். என்றாலும் அவர்களாலும் பெரிதளவில் தாக்குப் பிடிக்க முடியாமல் போக மே.தீவுகள் அணி 50 பந்துப்பரிமாற்றங்கள் நிறைவில் 7 இலக்குகளை இழந்து 291 ஓட்டங்களை மட்டுமே பெற்று 148 ஓட்டங்களால் தோல்வியடைந்தது.

பந்துவீச்சில் தென்னாபிரிக்கா சார்பாக மோர்கல், பிளன்டர் தலா 2 இலக்குகளையும் ஸ்ரெய்ன், ராஹீர் மற்றும் பெக்கார்டின் தலா ஓர் இலக்கினையும் கைப்பற்றினர்.

ஆட்டநாயகனாக வில்லியர்ஸ் தெரிவானார். இவ்விரு அணிகளுக்கும் இடையிலான மூன்றாவது ஒருநாள் ஆட்டம் நாளை மறுதினம் இடம்பெறும். (ந-ரி)

உதயன்
விளம்பரத் தொடர்புகளுக்கு
advt@uthayan.com
0215671111

அறைகள்/வீடுவாடகைக்கு
மானிப்பாயில் சகல வசதிகளுடனும் கூடிய அறைகள் / வீடு வாடகைக்கு
(நாளாந்த அடிப்படையில்)
வாகனத் தரிப்பிடமும் உண்டு
தொடர்புகளுக்கு: 0773220722

வெளிவந்து விற்பனையாகின்றது
தரம் - 6- தரம்- 10- (2015)
★ மாணவர்களுக்கான புதிய பாடத்திட்டப் புத்தகங்கள் விற்பனையாகின்றன.
★ பாட முன்னாயத்தம் ★ கணிப்பீடு
★ முதலாம் தவணைப் பரீட்சை மாதிரி வினாவிடைகள்
English Medium Model Papers (7, 8, 9, 11)
அன்னை புத்தகசாலை
யாழ்ப்பாணம். 021 222 9881
இரவு 8.00 மணிவரை திறந்திருக்கும்

கோழி எரு விற்பனைக்கு
கோழி எரு உடன் விற்பனைக்கு உண்டு
தொடர்புகளுக்கு:
0778448300
0766437253

அலுவலகர் தேவை
எமது யாழ்நகர் மற்றும் நெல்லியடி கிளைகளுக்கு அலுவலகர் மற்றும் பயிற்சி ஆங்கில ஆசிரியர்கள் தேவை.
• A/L படித்திருத்தல் போதுமானது.
• சம்பளம் பேசித்தீர்மானிக்கப்படும்.
• இலவச ஆங்கிலப் பயிற்சி வழங்கப்படும்.
உடன் எம்மை தொடர்பு கொள்ளவும்.
SAAMSON Expert in English Training
279, ஆஸ்பத்திரி பின்புறம், யாழ்நகர்.
021 320 3313
077 621 4567

ALLIANCE FRANÇAISE DE JAFFNA
பிரெஞ்சு மொழியை பிரெஞ்சு முறையில் கற்றுக்கொள்ளுங்கள்
FRENCH EMBASSY யின் கீழ் இயங்கும் ஒரே சர்வதேச நிறுவனம்.
உலகம் முழுவதும் 1040+ கிளைகள்.
INTERNATIONAL DIPLOMAS.
ஆசிரியர்கள்: யாழ்.பல்கலைக்கழக பிரெஞ் விரிவுரையாளர்கள் (பிரான்ஸ் நாட்டவரும்)
தைமாத வகுப்புகளுக்கு உடன் அழையுங்கள்
021 222 8093 61, கச்சேரி-நல்லூர் வீதி, யாழ்ப்பாணம்

SPOKEN ENGLISH



O/L எழுதியோர், தொழில்புரிவோர், பல்கலை புகுமுக மாணவர்கள், இளைஞர், யுவதிகள் இணைய முடியும்.
சனி, ஞாயிறு பயிற்சிநெறி ஆரம்பம் : 24.01.2015
பிரிவு 1 : காலை 08.00-10.00 பிரிவு 2 : மு.ப 10.00-12.00
பிரிவு 3 : பி.ப 01.00-03.00 பிரிவு 4 : மாலை 03.00-05.00
மூன்று மாதங்களில் சரளமாக ஆங்கிலம் பேசமுடியாதுவிடின் முழுப்பணமும் திருப்பி வழங்குவதற்கான உத்தரவாதம்.
"ஆங்கிலத்தில் ஒரெழுத்து தெரியாதவர்களும் கூட இப்பயிற்சியில் இணைந்து மூன்றே மாதங்களில் சரளமாக ஆங்கிலம் பேசமுடியும்"
பயிற்சிநெறி முடிவில் "DIPLOMA CERTIFICATE"
யாழ்நகர் 021 320 33 13
சங்கானை 021 567 41 33
நெல்லியடி 021 3200 607
SAAMSON LANGUAGE SCHOOL
179, ஆஸ்பத்திரி பின்புறம், யாழ்நகர்.
077 621 4567
021 320 3313

புதிய பிரிவுகள் ஆரம்பம்
aat (Sri Lanka)
Foundation, intermediate, final AA1, AA2, AA3
Qualification:- G.C.E O/L 6 PASSES
Medium - TAMIL & ENGLISH
Further Details:
JAFFNA COLLEGE
Underaduate Dept,
464, Hospital Road, Jaffna.
021 222 3382

MOBILE PHONE REPAIRING COURSE
(கையடக்க தொலைபேசி திருத்தம் பாடநெறி)
நீங்கள் பாடசாலைக் கல்வியை இடை நிறுத்தியவரா?
சுயதொழில் ஒன்றை எதிர்பார்ப்பவரா?
வேலைசெய்துகொண்டு பகுதிநேரமாக வருமானம் ஈட்ட வேண்டுமா?
4 days course
புதுப் பொலிவுடன் யாழ். நகரில் உங்கள் எதிர்காலத்துக்கு மாதம் 150,000/= இற்கு மேல் வருமானம் ஈட்ட ஒரு வாய்ப்பு
திருத்தும் துறையில் 10 வருட அனுபவம் வாய்ந்த ஆசிரியரும் இலங்கையில் 2000 இற்கும் மேற்பட்ட மாணவர்களை உருவாக்கிய முதற்தர ஆசிரியருமான Ganesh.K
பாடநெறிக்கான கட்டணத்தை முதல் மாதத்திலேயே சம்பாதிக்க முடியும்.
நவீன Mobile Phone Repairing முறைகள் பயிற்றுவிக்கப்படும்.
BTEC
BRITISH TECHNOLOGY ENGLISH COLLEGE
#21, Sirampiyadi Lane, Jaffna.
T.P: 021 7904468
Mo: 0777444225

விளையாட்டு வீரர்கள் கலைஞர்களின் இன்றைய தெரிவு
ஒலிம்பியா ஸ்போட்ஸ்



விளையாட்டு உபகரணங்கள், உடற்பயிற்சி சாதனங்கள், பாண்ட்வாத்தியம் மற்றும் இசைக்கருவிகளுக்கு ...
இல. 6, ஜும்மா பள்ளிவாசல் லேன், கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். Tel: 021 222 3490 Hotline: 077 8060267

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 19.01.2015 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.